விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 58 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 22 வெள்ளிக்கிழமை (07.09.2012) | பக்கங்கள்: பதினாறு + 4

அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான இரதோற்சவ சிறப்பு மலர் உள்ளே...

### சிங்கள யாத்திரிகர்கள் மீதான தாக்குதல் சம்பவம்:

# தமிழ் வர்த்தகர்கள் நேற்று கொழும்பில் கண்டனப் பேரணி

தமிழ்நாட்டில் பூண்டி மாதா தேவாலயத்துக்குச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள் மீதான தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு புறக்கோட்டை வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாக இந்திய உயர்ஸ்தானிகரகத்திற்குச் சென்றனர்.

இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்டதிற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கொழும்பு புறக்கோட்டை பகுதியிலுள்ள கடைகள் 02




இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முன்னால் கொழும்பு தமிழ் வர்த்தகர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது பிடிக்கப்பட்ட படம்.

## கருணாநிதி பச்சைக்கொடி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சாஞ்சியில் பௌத்த கற்கைளுக்கான நிலையத்தை திறந்து வைப்பதற்காக எதிர்வரும் 21 ஆம் திகதி மத்திய பிரதேசத்துக்கு வருவதற்கான தி.மு.க.வின் எதிர்ப்பை எதிர்ப்பை தலைவர் மு.கருணாநிதி 02

## நாகேஸ்வரத்தில் இரதோற்சவம்

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் தேவஸ்தான இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறுகிறது.

இன்றைய தமிழ்நாதம் பத்திரிகையுடன் இரதோற்சவச் சிறப்பு மலர் வெளிவந்துள்ளது.

## இலங்கை ஜனாதிபதி இந்திய பிரதமரைச் சந்திப்பார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்யும் போது இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய பிரதேசத்தில் நடைபெறவுள்ள பௌத்த விழாவொன்றில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயமொன்றை செப்டெம்பர் 20 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளார்.

இவ்விஜயத்தின்போது மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு பிரதமர் மன்மோகன் சிங்கின் விருப்பத்தை இந்தியா தெரியப்படுத்தியுள்ளது என்று 02

## இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் திட்டமிட்டபடி நடக்கும்

### இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர்

தமிழகத்தில் சிங்கள யாத்திரிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தவறான ஒரு நடவடிக்கை. ஆனால் இதற்காக இலங்கை ஜனாதிபதியின் மத்தியப் பிரதேசத்துக்கு வரும் பயணத் திட்டம் மாற்றப்படாது.

அவர் திட்டமிட்டபடி மத்திய பிரதேசத்துக்கு வந்து நிகழ்ச்சியில் பங்கேற்பார் என்று இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் 02

## ஆஸி.செல்ல முயற்சி: மாத்தளையில் 54 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற இலங்கையர்கள் சிலர் மாத்தறை, மிரிஸ்ச பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று 02

## இலங்கை விடயத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயற்பட வேண்டுமாம்

### இப்படி இந்திய வெளிவிவகாரச் செயலர் சொன்னார்

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயற்பட வேண்டுமென இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார் என்று என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை மனிதாபிமான விவகாரங்களில் அக்கறை காட்டும் தரப்பினருடனும், ஐக்கிய நாடுகள் அமைப்புடனும் அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் மேனன் குறிப்பிட்டதாகத் தெரிவித்துள்ளது. 02

## தமிழகத் தாக்குதல்: பின்னணியில் புலிகளாம்

இலங்கைக்கு எதிராகத் தமிழகத்தில் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் புலிகள் செயற்படுகின்றனர் என்று ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் இடம்பெற்று வரும் இலங்கை எதிர்ப்பு போராட்டங்களின் பின்னணியில் தப்பிச் சென்ற புலிகள் செயற்படுபவர்களாக இருக்கக் 02

## சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநாடு ஒத்திவைப்பு

எதிர்வரும் பத்தாம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற விருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களினால் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா 02

## காணாமல் போனவர்களுக்காக 1008 சிதறு தேங்காய் உடைப்போம்

### கூட்டமைப்பு தெரிவிப்பு

தமிழ் கைதிகளின் விடுதலையை வேண்டியும் காணாமல் போனவர்களையும் பத்திரமாக மீட்டுத்தர வேண்டியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் 1008 தேங்காய் உடைத்து காளியிடம் சிறப்புப் பிரார்த்தனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேசக் கைதிகள் தினமான செப்ரம்பர் 12ஆம் திகதியன்று வவுனியா, குருமன்காட்டில் அமைந்துள்ள காளிகோயிலில் காலை பத்துமணிக்கு 1008 சிதறு தேங்காய் உடைத்துச் சிறப்புப் பிரார்த்தனை செய்வதற்குத் 02

## 1500 படையினருக்கு இந்தியாவில் பயிற்சி - கெஹலிய

இலங்கை பாதுகாப்பு படையினர்களுக்கு பல நட்பு நாடுகளில் பயிற்சி வழங்கப்படுகிறது. இதில் இந்தியா பிரதானமான நாடாகும். இங்கு வருடாந்தம் 1500 பேருக்கு பயிற்சி வழங்கப்படுகிறது" என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார். 02

## நாளை தேர்தல்

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைக்கான தேர்தல் நாளை 8ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுகிறது. இந்த மூன்று சபைகளுக்கும் 108 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். 02

# பிரிட்டனில் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இலங்கையர் வருகின்றனர்

பிரிட்டனிலிருந்து அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதி இலங்கையர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி விமானத்தின் மூலம் கொழும்புக்கு அனுப்பட்டுள்ளனர். இந்த விமானம் பிரிட்டனில் இருந்து 19ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு புறப்படுகின்றது.

அகதி தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் கையொப்பமிடச் செல்லும் வேளை அவர்கள் தடுத்துவைக்கப்பட்டு அவர்களுக்கான விமானச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் விதம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இந்த சீட்டுக்களை குடிவரவு குடியகல்வு அமைச்சினால் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

தனி விமானம் என்கின்ற போது அதில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அனுப்பட வாய்ப்புள்ளதாக நம்பப்படுகின்றது.

## ஆஸி.செல்ல முயற்சி...(தொடர்)

அதிகாலை கைது செய்யப்பட்டனர் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. இதன்போது 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் வர்ணகுல சூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் காலி கடற்பரப்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுதந்திரக் கட்சியின்...(தொடர்)

சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளராக அங்கஜன் பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியானதையொட்டிய நிகழ்வுகளும் அன்று நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொது நலவாய மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பம்

பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் 58 ஆவது வருடாந்த மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது.

செப்டம்பர் 15 ஆம் திகதி வரை இம் மாநாடு நடைபெறும். பிரதான மாநாடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை தாமரைத் தடாக அரங்கில் நடைபெறும்.

எதிர் காலத்துக்கு பொருத்தமான பொதுநலவாய அமைப்பை உறுதிப்படுத்தல் என்பதே மாநாட்டின் தொனிப்பொருளாகும்.

## நாளை...(தொடர்)

தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்திருப்பதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த தேர்தலில் 108 ஆசனங்களுக்காக 3073 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் 33 இலட்சத்து 36 ஆயிரத்து 417 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

நாளை காலை 7.00 மணிக்கு அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல, ரத்தினபுரி, கேகாலை ஆகிய 7 மாவட்டங்களிலுள்ள 37 தேர்தல் தொகுதிகளில் வாக்கெடுப்பு ஆரம்பமாகிறது.

தேர்தல் கண்காணிப்பு பணிகளில் 4000 றகும் அதிகமான உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

மேலும் பாதுகாப்பு கடமைகளில் 21 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

## 1500 படையினருக்கு...(தொடர்)

இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் நாம் திருப்தி அடைகிறோம். ஆனால் அதனோடு நின்று விட முடியாது மேலும் சில விடயங்கள் தொடர்பில் தொடர்ந்து பேசி வருகிறோம். தேவையான போது எமது தரப்பினூடாக அழுத்தம் வழங்குவோம் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினர்.

தமிழ்நாட்டில் இலங்கை பிரஜைகளுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் திருப்தி அளிப்பதாக அமைச்சரவை பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நூற்றுக்கும் அதிகமானவர்கள் கைதாகியுள்ளனர். அத்துடன் பல பிரதான கட்சிகள் இதனை கண்டித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார். இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர்கள் மாநாட்டில் இந்திய சம்பவம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் சில விடயங்கள் தொடர்பில் இந்திய அரசுடன் பேசி வருவதாகவும் இலங்கை பிரஜைகளின் பாதுகாப்பு தொடர்பில் திருப்தி ஏற்பட்ட பின்னர் பயண எச்சரிக்கை அகற்றப்படும் எனவும் குறிப்பிட்டார்.

சகல நாடுகளிலும் அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறான சிறு சம்பவங்கள் நடைபெறுகின் றன. இலங்கையர்களின் பாது காப்பை உறுதி செய்யவும் சந் தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் இந்திய அரசாங்கம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. நூற்றுக்கும் அதி கமானவர்கள் கைதாகியுள்ளனர். பிரதான கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, தி.மு.க. என்பன இந்த சம்பவத்தை கண்டித்துள்ளன.

## தமிழக...(தொடர்)

கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இலங்கையர்களுக்கு எதிரான செயற்பாடுகள், முற்றுகைகள், தாக்குதல்கள் கடந்த காலங்களில் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாகத் தமிழ்நாட்டுக்கான பயண எச்சரிக்கையை இலங்கை அரசு இவ்வாரம் அறிவித்திருந்தது என்றும் அவர் சொன்னார்.

## காணாமல்...(தொடர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

யுத்தம் முடிவுற்று மூன்று ஆண்டுகள் ஆகியும் தமிழ் கைதிகள் விடுவிக்கப்படாமலிருப்பது எமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. அவர்களின் விடுதலை தொடர்பாக நாம் மேற்கொண்ட பல முயற்சிகளும் பலனற்றுப் போயுள்ளன.

ஆகவே, தமிழ் அரசியல் கைதிகளின் உயிரையும் உரிமைகளையும் காப்பாற்ற வேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகள், மனித உரிமைகளில் ஆர்வம் உள்ளோர், சமூக சேவகர்கள், சமுதாய நலனில் அக்கறை உள்ளோர் ஆகிய அனைவரதும் கடமையாகும்.

ஆகவே, சிறைகளிலும், முகாம்களிலும் இன்னபிற இடங்களிலும் வாடுகின்ற அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், சர்வதேச கைதிகள் தினத்தன்று வவுனியா, குருமன்காட்டில் அமைந்துள்ள காளி கோயிலில் 1008 தேங்காய் உடைத்துச் சிறப்புப் பிராத்தனையை மேற்கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் அதே நேரத்தில் காணா மல் அவர்களுக்காவும் விசேட பிரார்த்தனை நடைபெறவுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

## இலங்கை விடயத்தில்...(தொடர்)

புதுடெல்லிக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று விக்கலீக்ஸ் தெரிவித்துள்ளது.

வடக்குத் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் விவகாரத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து செயற்பட வேண்டுமென மேனன் தெரிவித்திருந்தார்.

தமிழர்கள் மனிதாபிமானமாக நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் சில தர நிர்ணயங்களை விதிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டிருந்தார்.

2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி இந்த குறிப்பு அமெரிக்க ராஜாங்கச் செயலாளர், சீ.ஐ.ஏ உளவுப் பிரிவு, வெள்ளை மாளிகை உள்ளிட்ட 18 முக்கிய அமெரிக்க நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கும், வெளிவிவகாரச் செயலாளர் மேனனுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளன.

அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டிணைந்து இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என மேனன் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

யுத்தத்தை நிறுத்தி யுத்த வலய மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு கோரத் திட்டமிட்டுள்ளதாக, அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் முகர்ஜீ தெரிவித்தார் எனவும், மேனன் குறிப்பிட்டார்.

புதிய செய்திகளின்றி இந்தியாவிற்கு விஜயம் செய்வதில் பயனில்லை என்று ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவுக்கு இந்தியா அறிவித்ததாகத் தெரிவித்தார்.

## இலங்கை ஜனாதிபதியின் இந்திய...(தொடர்)

தெரிவித்துள்ளார்.

இந்திய தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் வற்புறுத்தல் காரணமாகத்தான் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு நடத்திய வாக்கெடுப்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் எதிராக வாக்களித்தது. ஆனால் இதற்காக இந்தியா - இலங்கை இடையேயான உறவு பாதிக்காது என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் மிக மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்று கூறப்படுகின்றதென்று கேட்டதற்கு, “அது அனைத்தும் தவறான தகவல்கள், புலிகளுக்கு ஆதரவான அமைப்புகள் ஏற்படுத்தும் புரளிகள்” என்று அவர் பதில் அளித்துள்ளார்.

## இலங்கை ஜனாதிபதி...(தொடர்)

இந்திய அரசாங்க வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அமெரிக்க அனுசரணையுடனான பிரேரணைக்கு இந்தியா ஆதரவாக வாக்களித்த பின்னர் இரு தலைவர்களும் தனியாக சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்து பேசும் முதல் சந்தர்ப்பமாக இது அமையும்.

அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவாக வாக்களித்தமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விருவரும் கடந்த ஜூன் மாதம் பிரேஸிலில் நடைபெற்ற ரியோ - 20 உச்சிமாநாட்டின் போது சந்தித்தனர். எனினும் அச்சந்திப்பின்போது இரு தரப்பு விவகாரங்கள் குறித்து பேசுவதற்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை என டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

## கருணாநிதி பச்சை...(தொடர்)

நேற்று விலக்கிக்கொண்டார்.

இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதற்கும் விளையாட்டு மற்றும் கலாசார அணிகள் இந்தியா வருவதற்கும் இடையில் அடிப்படையில் வித்தியாசம் உள்ளதுஇலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்டதைக் கருணாநிதி கண்டித்தார்.

இலங்கை கால்பந்து அணிகளை திருப்பி அனுப்பியதற்காக அவர் ஜெயலலிதாவை கண்டித்தார்.

சமாதானத்துக்கான அழைப்பு

இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் துன்பங்களை தரக்கூடிய எதையும் நாம் இங்கு செய்யலாகாது.

தமிழ் நாட்டில் பிரச்சினைகளை கிளறுவதால் இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்கள் மேலும் ஆபத்துகளுக்குள் தள்ளப்படுவதுடன், அவர்களின் புனர்வாழ்வும் சிக்கலாகும் என அவர் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இலங்கையில் தமிழர்களின் இன ஒழிப்புக்கு காரணமானவராக இருப்பதால் அவர் பங்குபெறவுள்ள சாஞ்சியில் நடைபெறும் சமய நிகழ்வை இரத்துச் செய்ய வேண்டும் எனக் கேட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ அவசரக் கடிதம் ஒன்றை மத்திய பிரதேசம் முதலமைச்சர் சிவ்ராஜ்சிங் செளஹானுக்கு அனுப்பியுள்ளார்.

இந்த நிகழ்வு நடைபெறுமாயின் சாஞ்சியில் ராஜபக்ஷவுக்கு எதிராக தானே முன்னின்று கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப்போவதாக வைகோ கூறியது தென் இந்தியாவில் உள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் ராஜகருண இலங்கையர்களை தமிழ்நாட்டுக்கு செல்ல வேண்டாம் என அரசாங்கம் விடுத்த பயண எச்சரிக்கை விரைவில் மீளப்பெறப்படும் என புதன்கிழமை நம்பிக்கை தெரிவித்துள்ளதாக சென்னையிலிருந்து கிடைத்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

செவ்வாய்க்கிழமை இலங்கை யாத்தீரிகர்கள் மீது தாக்குதல் நடத்திய தமிழ் குழுக்களை மறைமுகமாக தாக்கிய அவர் பிரபலம் தேடுவதற்காக கூச்சல்போடும் கலகக்காரருக்கு நாம் பயந்து நடக்கக்கூடாது என்றார்.

## தமிழ் வர்த்தகர்கள்...(தொடர்)

அனைத்தும் மூடப்பட்டன.

இந்த ஊர்வலத்தின் முடிவில் தமிழ்நாட்டில் பூண்டிமாதா தேவாலயத்திற்கு சென்ற இலங்கை யாத்திரிகர்கள் மீதான தாக்குதல் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்திய உயர்ஸ்தானிகரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையை தமிழ் வர்த்தக சங்கம் ஒழுங்கு செய்தாரென்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டப் போராட்டம் காரணமாக காலி வீதியின் கொள்ளுப்பிட்டி முதல் காலி முகத்திடல் வரையிலான வீதி மூடப்பட்டிருந்தது. இதனால் தலைநகரில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறாத வண்ணம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

# யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம் அமைப்பு திட்டம் துரிதமாக்கப்படும்

உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கமைய அடுத்த கல்வியாண்டில் கூடுதலான மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை நிறுத்தவும் வேலையை துரிதப்படுத்தும் அதேவேளையில் அம்பாறை, ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் புதிய பொறியியல் பீடம் ஒன்றும் அமையவுள்ளது என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

4828 மாணவர்களை கூடுதலாக சேர்த்துக்கொள்ளும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்மொழிவை உயர்நீதிமன்றம் அங்கீகரித்தது. இதன்படி மாணவர் அனுமதி எவ்வித தயக்கமுமின்றி அதிகரிக்கப்படும்.

குறைந்தபட்சம் 200 மாணவர்களை அனுமதிப்பதற்காக நாம் தென்கிழக்கு பல்கலைக்ழகத்தல் பொறியியல் பீடத்தை நிறுவத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் யாழ்ப்பாணம் பொறியியல் பீடம் தொடர்பான வேலைகளும் விரைவுபடுத்தப்படும்.

பொறியியல் துறைக்கு கூடுதல் மாணவர்களை அனுமதிப்பத்திரம் மட்டுமே எமக்கு கஷ்டங்கள் உள்ளன. கலை, முகாமைத்துவம் போன்ற வேறு பட்டப் படிப்புகள் தொடர்பில் பெரிய பிரச்சினை ஏதுமில்லை என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

திடீரென இவ்வளவு அதிகமான மாணவர்களை சேர்த்துக்கொள்ளவது பல்கலைக்கழக முறைமையினல் நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. இதையிட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுடன் பேசப்படும் என உபவேந்தர்களின் குழு கூறியுள்ளது.

மருத்துவம், பொறியியல் ஆகியன அதிக செலவுள்ள பட்டப் படிப்புகளாகும், இதில் கூடுதல் மாணவர்களை சேர்ப்பதற்கு ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகள் தேவை என அக்குழுவின் தலைவரும் றுகுணு பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் கூறினார்.

## சட்டவிரோத மீன்பிடி முறைகளின் பயன்பாடு குறைவடைந்துள்ளது

சட்டவிரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் தற்போது குறைவடைந்துள்ளதாக மீன் மற்றும் நீர்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட முறையில் மீன் பிடிப்பதற்கு எதிராக கடுமையான சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றமை இதற்கு காரணம் என அமைச்சு தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடுபவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்தல் மற்றும் மீன்பிடி அனுமதிப்பத்திரம் இன்றி மீன் பிடியில் ஈடுபட்ட 596 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி

ஏறாவூர், சித்தண்டி பிரதேசத்தில் சென்றுகொண்டிருந்த புகையிரதத்தின் குறுக்கே பாய்ந்து நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தபால் புகையிரதத்தில் மோதுண்டே இந்நபர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 47 வயதான சின்னத்தம்பி கணேசமூர்த்தி எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கலாநிதி ஆறு.திருமுருகனுக்கு நாளை சேவை நலன் பாராட்டு விழா

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றி கடந்த ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து ஓய்வுபெற்ற செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் சேவை நலத்தைப் பாராட்டும் வைபவமொன்று நாளை (சனிக்கிழமை) பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரியின் ஓறேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.சிவாஜி தலைமையில் இடம்பெறவிருக்கும் இவ்வைபத்தின்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரியார் சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

லயன் சி.கஜன் வரவேற்புரையையும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன், யாழ். மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம், யாழ்.இந்திய தூதுவராலய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் இ.குமாரவடிவேல், ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜெ.இருதயநாதன், ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச் சங்கத் தலைவர் சு.பரமநாதன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் நிகழ்த்துவார்கள்.

(கா)

## புதிய சேவை பிரமாணங்களால் டிப்ளோமாதாரிகள் பாதிப்பு

அரசாங்க துறை உத்தியோகத்தர்களுக்கான புதிய சேவை பிரமாண குறிப்புகள் தோற்றுவித்துள்ள குழப்பங்கள் காரணமாக புதிய நியமனங்களை பெற்றபட்டதாரிகளும் டிப்ளோமாதாரிகளும் பெரும் பிரச்சினைக்கு ஆளாகியுள்ளனர்.

முன்னர் டிப்ளோமாதாரிகளும் பட்டதாரிகளும் சமமாக கருதப்பட்டனர். அப்போது, டிப்ளோமதாரிகளுக்கு நியமனம் பெற்றுக் கொள்வது பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால் புதிதாக வெளியிடப்பட்ட பிரமாண குறிப்பு டிப்ளோமாதாரிகள் அரசாங்க நியமனம் பெறுவதில் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது என அகில இலங்கை டிப்ளோமாதாரிகள் சங்கத்தின் தலைவர் என்.டி.எஸ்.நிலங்க தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் அதிகாரிகளினால் பின்பற்றப்படுவதாக கூறப்படும் சுற்றறிக்கைகள் கற்பனையானவை. உண்மையில் அப்படியான சுற்றறிக்கைகள் இல்லை. இவ்வாறான சுற்றறிக்கை எதனையும் வெளியிடவில்லை என அமைச்சும் மறுத்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த கற்பனை சுற்றறிக்கையினால் உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் பட்டதாரிகளுக்கு சமமானவர்கள் அல்லவென கூறுகின்றது. இதனால் டிப்ளோமாதாரிகள் வேலையின்றி உள்ளனர் என நிலங்க தெரிவித்தார்.

முன்னர் பட்டதாரி சேவை உத்தியோகத்தர்களுக்கென சேவை பிரமாண குறிப்பு இருக்கவில்லை. இதனால் பிரச்சினையும் இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் யாழ்.மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு வந்த பின்னர் எமது மேல் நடவடிக்கைகள் பற்றி சங்கம் தீர்மானிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழகத்தில் இலங்கையர் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை

### பிரதியமைச்சர் நியோமல் பெரேரா

இந்திய மத்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி, தமிழ்நாட்டிற்கு இலங்கையர்கள் பாதுகாப்பாக பயணம் செய்யும் நிலையை ஏற்படுத்துவதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு முயற்சித்து வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு நாம் இந்திய மத்திய அரசாங்கத்துடன் நெருங்கிச் செயற்பட்டு வருகிறோம்.

ஏனெனில், இலங்கையும் இந்தியாவும் கலாசார, சமய தொடர்புகளைக் கொண்டுள்ளன. இவை தொடர வேண்டும் என நாம் விரும்புகிறோம் என கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை அதிகரிக்க நாம் விரும்புகிறோம், அதற்கு இடையூறு செய்வதை அல்ல.

இலங்கையர்கள் அச்சுறுத்தல்களின்றி பாதுகாப்பாக பயணம் செய்வதை இந்திய மத்திய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதை விரும்புகிறோம் என அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கிடையிலான உறவை நாசம் செய்ய முயற்சிக்கும் எல்.ரி.ரி.ஈ. ஆதரவு சக்திகளை மௌனமாக்க வேண்டிய உடனடி தேவை உள்ளது எனவும் அவர் கூறினார்.

அயல்நாடுகளுடன் நல்லுறவை பேணுவதற்காக எந்தவொரு வெளிவிவகார அமைச்சையும் போலவே பயண எச்சரிக்கையை இயன்றவரை விரைவாக நீக்குவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

## மதுரையில் ஹோட்டலின் முன்பாக ஆர்ப்பாட்டம்

### இலங்கை பணியாளர்களை வெளியேற்ற கோரிக்கை

மதுரை கோச்சடை பகுதியில் பிரபல தனியார் ஹோட்டல் உள்ளது. இந்த ஹோட்டலில் இலங்கையை சேர்ந்த ஸ்ரீநித் டிசில்வா பொதுமேலாளராகவும், தலைமை சமையலராக முரைஷ் என்பவர் உட்பட 16 பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

அவர்களை உடனடியாக இலங்கைக்கு அனுப்பக்கோரி 15 பேர் நேற்றுமுன்தினம் காலை அந்த ஹோட்டலை முற்றுகையிட்டனர். அப்போது இலங்கைக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பினார்கள்.

இலங்கை யாத்திரிகர்கள் 184 பேர் தமிழ்நாடு பூண்டி மாதா ஆலயத்திற்குச் சென்றிருந்த நிலையில் அவர்களையும் முற்றுகை இட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## இன்றைய இராசி பலன் (07.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**நட்சத்திரம்** : கார்த்திகை மாலை 6.12 வரை அதன் பின் ரோகிணி
**திதி** : ஸப்தமி பின்னிரவு 4.38 வரை. அதன் பின் அட்டமி
**சுபநேரம்** : 6.04 - 7.34
**இராகுகாலம்** : 10.34 - 12.04
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பொருள் வரவு, காரிய சித்தி, வாக்கு பலிதம்
**இடபம்** : மனக்குழப்பம், வீண் விவகாரம், குறைகேட்டல்
**மிதுனம்** : அதிக செலவு, யோசனை மிகுதி, தூக்கமின்மை
**கடகம்** : பொருள் இலாபம், சுபகாரியம், மூத்தோர் உதவி
**சிங்கம்** : தொழில் விருத்தி, இடமாற்றம், வருவாய் குறைவு
**கன்னி** : மன அமைதி, பாக்கியப் பேறு, தந்தை வழி உதவி
**துலாம்** : மனக்கலக்கம், வீண்முயற்சி, ஆரோக்கியக் கேடு
**விருச்சிகம்** : மனமகிழ்ச்சி, நண்பர் உதவி, பங்குத்தொழில் விருத்தி
**தனுசு** : கடன்பிரச்சினை, வாக்கு விரோதம், ரோக பயம்
**மகரம்** : பொருள் சேர்க்கை, தெய்வ அனுகூலம், புத்திர சுகம்
**கும்பம்** : காரிய தாமதம், சிறுபிரயாணம், சகோதர சஞ்சலம்
**மீனம்** : பொருள் சேதம், இடம்மாறுதல், தொழில் பிரச்சினை

- **ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

## தேர்தலுக்காக பாடசாலைகள் மூடப்படும்

மாகாணசபைத் தேர்தல்களை முன்னிட்டு சப்பிரகமுவ, வடமத்தி, கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் நாளை வெள்ளிக்கிழமை மூடப்படவுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை சப்பிரகமுவ, வடமத்தி, கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்கடத்தலில் ஈடுபட்ட இருவர் கொழும்பில் கைது

நபர் ஒருவரை கடத்திற் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரை பொலிஸர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹப்புத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 29ஆம் திகதி கொழும்பு, புறக்கோட்டைப் பகுதியில் நபர் ஒருவரை கடத்திச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்திச் செல்லப்பட்ட நபர் கொட்டாஞ்சேனைப் பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட தேடுதலின் போது இந்நபர் மீட்கப்பட்டுள்ளார்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு கேட்டது தனிநாடு, அவர்களுக்குக் கிடைத்ததோ தமிழகத்தில் தனி வீடு

- அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிரடி

தமிழ்பேசும் மக்களின் அரசிய லுரிமை பிரச்சினைக்கான தீர்வு என்ற போர்வையில் இதுவரை காலமும் சுயலாப தமிழ் தலைமைகள் நடத்திவந்த அரசியல் சூழ்ச்சிகளின் வரலாற்று அனுபவங்களைக் கற்றுக்கொண்டு, கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் தமது வாக்களிக்கும் உரிமையை சரிவரப் பயன்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.,

காலத்தின் தேவைகருதி தற்காலிகமாக நாம் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் இருந்து ஒதுங்கியிருப்பினும், நாம் நேசிக்கும் கிழக்கு மாகாண மக்களுக்கும் சிறந்த அரசியல் வழி காட்டலை தெரிவிக்கும் வரலாற்றுக் கடமை எமக்கு என்றுமே உண்டு.

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினையின் பேரால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் பேசி வருவது வெறும் தேர்தல் வெற்றிகளுக்கான வெற்றிக் கோஷங்கள் மட்டுமே. 1977இல் தமது பாராளுமன்ற பதவிகளைக் குறியாக வைத்துத் தமிழீழ ஆணை கேட்டு பதினெட்டு ஆசனங்களை பெற்றவர்கள் எதைச் சாதித்தார்கள்?

உணர்ச்சி பொங்கப் பேசி, எமது மக்களை உசுப்பேற்றி தமது பாராளுமன்றப் பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் நாட்டை விட்டே தத்தமது குடும்பங்களோடு ஓடிப் போனார்கள். கேட்டது தனி நாடு, கேட்ட தலைவர்களுக்கு கிடைத்தது தமிழ் நாட்டில் தனி வீடு. ஆனால், அவர்களால் உசுப்பேற்றி விடப்பட்டவர்கள் எமது தாயக மண்ணில் இரத்தம் சிந்தி அவலப்பட்டார்கள். இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு. அதை அன்றே ஏற்றுக்கொண்டிருந்ததால், அல்லது ஏற்றுக் கொண்டவர்கள் சரிவர நடைமுறைப்படுத்தியிருந்தால் எமது மக்கள் இத்தனை அழிவுகளை அடைய வேண்டிய துயரம் நடந்திருக்காது.

1995இல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எமது மக்களுக்கான சிறந்த அரசியல் தீர்வொன்றை முன்வைத்திருந்தார். ஆனாலும், தமது சுயலாபங்களுக்காகச் சக தமிழ்த் தலைமைகள் எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிஹல உறுமய போன்ற கட்சிகளோடு இணைந்து ஊர்வலம் நடத்தி, நாடாளுமன்றத்தில் வைத்த தீர்வு நகல்களை எரித்து அழித்தார்கள்.

இறுதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு வருமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பை கேட்டிருந்தபோது அதை நானும் வலியுறுத்தி கேட்டிருந்தேன். ஆனாலும், அதற்கு இணங்க மறுத்த தமிழ் பேசும் மக்களை யுத்தகளத்திற்கு பலியாக்கிவிட்டு தாம் மட்டும் தமது குடும்பங்களோடு தப்பித்து சென்று உலக நாடுகளில் உல்லாசம் நடத்திக் கொண்டிருந்தனர் கூட்டமைப்பினர்.

தாம் பெற்ற அரசியல் அதிகாரங்களைத் தமிழ் பேசும் மக்களின் அழிவுக்கு துணைபோகவே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

மாறாகத் தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைத் தீர்வுக்காக இது வரை தமது அரசியல் பலத்தை பயன்படுத்தியிருக்கவில்லை என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பரீட்சைகள் பற்றி ஆதாரமற்ற குற்றச்சாட்டு முன்வைத்தவர் சீ.ஐ.டி. விசாரணையில்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாகவும், க.பொ.த. உயர்தர பரீட்சை தொடர்பாகவும் தேவையற்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, மாணவர்களையும் பெற்றோரையும் குழப்ப நிலைக்குள்ளாக்கியவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே இத் தொழிற்சங்கப் பிரமுகர்கள் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக குற்றச்சாட்டை முன்வைத்த ஒரு தொழிற்சங்கவாதி இன்று இரகசிய பொலிஸார் முன்னிலையில் ஆதாரம் எதுவும் சமர்ப்பிக்க முடியாதவராக உள்ளார்.

அவர் ஒரு ஆசிரியராக இல்லாத நிலையில் பொய்யான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி மாணவர்களையும், பெற்றோரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளார். இவ்வாறானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என சங்கத்தின் தலைவர் வசந்தா ஹந்தபான்கொட தெரிவித்தார்.

ஐ.தே.க.வின் ஆட்சிக் காலத்திலேயே கல்வி அரசியல் மயமாக்கப்பட்டிருந்தது. பதவி உயர்வுகள். நியமனங்கள் அனைத்துமே அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டன என்றும் சொன்னார்.

சங்கத்தின் செயலாளர் நிஸங்க பெர்னாண்டோ, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான குசும்சிறி பெர்னாண்டோ, புத்திக அத்தநாயக்க, அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கச் செயலாளர் ஈ.எம்.ஜே.எஸ்.த.சேரம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டப் போட்டி

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடாத்தும் வட மாகாண ரீதியான துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நாளை எட்டாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இப்போட்டி தெல்லிப்பழை மகாஜனாக் கல் லூரி மைதானத்தில் நடைபெறு ... மேற்படி விளையாட்டுக் கழகத் தலைவர் சி.தயாபாலன் தெரிவித்தார்.

# விவசாய பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

உடுவில்

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தினால் நடத்தப்படும் விவசாயச் சான்றிதழ் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இலவசமாக இடம்பெறவுள்ள இப் பயிற்சிநெறி க.பொ.த. சாதாரணதரம் கற்ற 17 வயதிற்கும் 26 வயதிற்கும் இடைப் பட்ட இருபாலாரும் பங்குபற்ற முடியும் என்பதுடன், நான்கு மாதங் கள் பயிற்சி நடைபெறவுள்ளது.

இவ் விவசாயச் சான்றிதழ் பயிற்சி உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் வேலை வாய்ப்புக்களைப் பெறக்கூடிய புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய செயன்முறையினூடாக நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சியை பெற விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9.00மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிலையத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வில் உரிய ஆவணங்களுடன் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலிச் சந்தேக நபர்கள் உட்பட பலருக்கு வெளிநாடு செல்ல நற்சான்றிதழ் வழங்கியவர்கள் கைது!

புலிச் சந்தேக நபர்கள் உட்பட பலருக்கு வெளிநாடுகளுக்கு செல்வதற்காக பொலிசாரின் நற்சான்றிதழ்களை வழங்கியமை தொடர்பாக கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திற்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ள கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவினர், மூன்று பேரை கைது செய்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு முதல் இந்த சட்ட விரோத நடவடிக்கைகள் நடந்து வந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

விசாரணைகளை நடத்தி வரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கொம்பனித்தெரு பொலிசாரிடமிருந்து அனைத்து நற்சான்றிதழ் விண்ணப்பங்களையும் கைப்பற்றியுள்ளனர். கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் வழங்கப்படும் சான்றிதழ்களை உறுதிப்படுத்தி கொள்வதற்காக அதிகமானோர், வெளிவிவகார அமைச்சின் கௌன்சிலர் பிரிவுக்கு வருவதை அவதானித்த அதிகாரிகள், அது குறித்து பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு அறிவித்துள்ளனர்.

தமிழர்களும், முஸ்லிம்களுமே அதிகளவில் பொலிஸ் நற்சான்றிதழ்களை பெற்றுக் கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்கள், காவல்துறையின் நற்சான்றிதழை பெற்றுக் கொடுப்பதற்கு ஒருவரிடம் தலா ஐந்தாயிரம் ரூபாவை வாங்கியுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளனர்.

# வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

சண்டிலிப்பாய்

வறிய குடும்பங்களுக்கு வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் கோழிக் குஞ்சுகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி பிரிவில் மீளக் குடியமர்ந்த வறிய குடும்பங்கள், விதவைக் குடும்பங்கள் என வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய வறிய நிலையில் வருமானம் குறைந்த நிலையிலுள்ள குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தி தெரிவுகளை மேற்கொள்ளுமாறு கிராம அலுவலர்களிற்கு பணிக்கப்பட்டுள்ளது..

# மாணவர்கள் மூலம் பனம் விதைகள் சேகரிப்பு

உடுவில்

கல்வித் திணைக்களமும் பனை அபிவிருத்தி சபையும் இணைந்து பனம் விதைகளை சேகரிக்கும் பணியில் மாணவர்களை ஈடுபடுத்தும் திட்டத்தை முன்னெடுக்க வுள்ளது.

பனைசார் உற்பத்தி, பனை வளம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி பனம் விதை சேகரிக்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளன.

ஒரு பனை விதைக்கு இரண்டு ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ள துடன்,

இக் கொடுப்பனவுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# புதிதாகப் பொறியியல் பீடங்கள்

அம்பாறை ஒலுவிலுள்ள தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் புதிதாகப் பொறியியல் பீடம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதே வேளை யாழ் பல்கலைக்கழகத்திலும் பொறியியல் பீடம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான வேலைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

இசற் புள்ளிப் பிரச்சினையாலும் வேறுபல நெருக்கடிகளாலும் மாணவர்கள் எதிர்கொண்ட நெருக்கடி களையடுத்து மேலதிகமாக 4928 பேரை பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்குமாறு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டிலுள்ள சுமார் 15 பல்கலைக் கழகங்களுக்கும் வருடாந்தம் 22000 மாணவர்களே உள்வாங்கப்படுகிறார்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை யடுத்து மேலதிகமாக மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்க வேண்டியிருக்கிறது. தென் கிழக்கு பல்கலைக்கழகங்களில் புதிதாக பொறியியல் பீடமொன்றினை நிறுவுவதன் மூலம் 200 மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடியும் என்று கல்வித் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# பாடசாலை செல்லாத பிள்ளைகள் பற்றிய கலந்துரையாடல்கள்

சண்டிலிப்பாய்

பாடசாலை செல்லாத மற்றும் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை நடத்துவதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் முன்வந்துள்ளனர். கிராம அலுவலர் ரீதியாக இவை நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி பகுதிகளில் பாடசாலை செல்லாமல் இருக்கும் மாணவர்களின் தேவைகள், பிரச்சினைகள், எதிர்கால நடவடிக்கைகள் என்பன தொடர்பான ஆராய்வதற்கான நட வடிக்கைகளையே பிரதேச செயலகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் இன்று 7ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கட்டுடைப் பகுதியில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சில்லாலை வடக் கிலும் மாலை 3.00 மணிக்கு ஆனைக்கோட்டையிலும் 13ஆம் திகதி காலை 9.00மணிக்கு மாத கலிலும் பிற்பகல் 3.00 மணிக்கு கொம்பனிப்புலத்திலும், 14ஆம் திகதி காலை 9.00மணிக்கு பெரியவிளானிலும், 18ஆம் திகதி காலை 9.00மணிக்கு இளவாலை உயரப்புலத்திலும் பிற்பகல் 3.00 மணிக்கு மானிப்பாய் கிழக்கிலும் இக் கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளது.

# வேலணை பிரதேசசபை நூலகக் கண்காட்சி

வேலணை பிரதேச சபையின் முப்பரிமாண நூலகக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சிகளும் எதிர்வரும் பத் தாம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடை பெறும்.

வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா தலைமையில் வேலணை பிரதேச சபை தேவா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தீவகம் தெற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வெஸ்திரி அலன்ரின் எம்.பி. அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்.

# அப்பாவிகளுக்கு இடையூறு விளைவிப்பது அநீதியானது; ஏற்றுக்கொள்ள முடியாதது

## - கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

இலங்கையைச் சேர்ந்த பக்தர்கள் தமிழகத்தில் பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களுக்கு உள்ளாவது குறித்து இலங்கை கத்தோலிக்க திருச்சபை தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தமிழக கத்தோலிக்க திருச்சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல்களுக்கு முடிவு காணும் வரை கத்தோலிக்கர்கள் தமிழகத்திற்கு செல்ல வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களை சிறந்த முறையில் வரவேற்று இலங்கை மக்கள் அனுசரித்து வருகின்றனர்.

ஆனால் தமிழகத்தில் உள்ள சிறிய தரப்பினர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகவும் அநீதியானது எனவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினைகள் இருந்தால் அதனை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து கொள்ள வேண்டும். அதனை விடுத்து, அப்பாவிகளுக்கு இடையூகளை ஏற்படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாதது எனவும் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழகத்திற்கு யாத்திரை சென்ற இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாக முன்னாள் பிரதியமைச்சர் புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழ் மக்களுக் கும், சிங்கள மக்களும் சுமூகமான முறையில் வாழ்ந்து வரும் சந் தர்ப்பத்தில், சிங்கள மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலை தான் வன்மையாக எதிர்ப்பதாக வும் அவர் கூறியுள்ளார். இந்திய தமிழர்கள் மலையகத்தில் வாழ உதவியவர்கள் சிங்களவர்கள் எனவும் தமிழகத்தின் சில அரசியல் வாதிகளின் ஆதரவுடன் மேற் கொள்ளப்படும் இப்படியான சம்ப வங்கள் ஏற்படுவது மிகவும் கவ லைக்குரியது. என வும் அவர் கூறியுள்ளார்.

# வலி. வடக்கு வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தல்

மாவிட்டபுரம்

வலிவடக்கு பிரதேசசபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வரிசையில் இதுவரை வலி வடக்கு பிரதேச எல்லைக்கட்பட்ட வீதிகளுக்கு பொருத்தப்பட்ட மின் விளக்குகள் தொடர்பாகபான விபரமும் பொருத்தப்படவேண்டிய வீதி மின்விளக்குகள் தொடர்பன விபரமும் சபையில் சமர்ப்பிக்கப் படடது.

வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தொடர் வலி வடக் பிரதேசசபைத்தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் பிரதேசசபை மண்டபத்தில் இடம் பெற்றபோது மேற்படி விடயம் தவிசாளரால் சபையில் சமர்ப்பிக் கப்பட்டது.

இதன்படி வல்லை சங்கானை வீதியில் 53 மின்விளக்ககளும் கே.கே.எஸ்.வீதியில் 27 மின் விளக்குகளும் அம்பனை அளவெட்டி வீதி (கூட்டுறவாளர் வீதி) யில் 22 மின்விளக்குகளும் இளவாலைவீதியில் 23 மின்விளக்குகளும் ஆலடி இளவாலை வீதி பண்டத்தரிப்பில் 30 மின்விளக்ககளும் பொருத்தப்பட்டுள்ளன என்றும்,

இதேவேளை, எட்டாங்கட்டை வீதியில் 40 மின்விளக்குகளும் கட்டுவன் வல்லை வீதியில் 30 மின்விளக்ககளும் குட்டியப்புலம் வீதியில் 30 மின்விளக்ககளும் வல்லை சங்கானை வீதியில் 7 மின்விளக்குகளும் கே.கே.எஸ். வீதியில் 18 மின்விளக்குகளும் பொருத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டடுள்ளது.

# இலங்கை - இந்திய உறவில் பாதிப்பு இல்லை

## - அடைச்சர் டளஸ்

அண்மைக்காலமாக தமிழகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் இரு நாடுகளினதும் உறவுகளைப் பாதிக்காது என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கை யாத்ரீகர்கள் மீது தமிழகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களினால் மத்திய அரசாங்கத்துடன் நீடித்து வரும் உறவுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மத்திய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேணுவோம் என அவர் தெரிவித்துள்ளார். அண்மைய சம்பவங்களினால் மத்திய அரசாங்கத்துடனோ அல்லது இந்திய மக்களுடனோ பிரச்சினை ஏற்படுத்திக் கொள்ளப் போவதில்லை என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இந்த சம்பவங்களை இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசலை ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கைதிகள் சுய கௌரவத்துடன் நடத்தப்படல் வேண்டும்

## - கத்தோலிக்க பேராயர் பேரவை

நாட்டின் சகல கைதிகளும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடத்தப்பட வேண்டுமென இலங்கை கத்தோலிக்க பேராயர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

நாடு எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கைதிகள் சர்வதேச சட்டங்களுக்கு அமைவான முறையில் நடத்தப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்து கைதிகளும் சுய கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதே சர்வதேச சட்டம் என சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு மாறான சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடியாக தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

பரீட்சை தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளதாகவும், பிரச்சினைக்கு தீர்வுகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

பல்கலைக்கழகங்கள் சில காலம் மூடப்பட்டுள்ளதாகவும், இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது தொடர்பிலும் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென கத்தோலிக்க பேராயர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

# ஐ.நா. குழு இலங்கை வரும்! நவநீதம்பிள்ளை வரமாட்டார்!!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்ய மாட்டார் என வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தொழில்நுட்ப அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள் என்ற போதிலும், நவநீதம்பிள்ளை அந்தக் குழுவுடன் இலங்கைக்கு விஜயம் செய்ய மாட்டார் என குறிப்பிடப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவை அமர்வுகளின் போது இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தொழில்நுட்ப அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

குறித்த சந்தர்ப்பத்தில் இந்தத் திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலின் போது கிழக்கில் வன்முறை வெடிக்கக் கூடும்

## - கபே அமைப்பு எச்சரிக்கை

தேர்தல் நடைபெறும் தினமன்று கிழக்கு மாகாணத்தில் வன்முறைகள் வெடிக்கக் கூடுமென கபே எனப்படும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான அதிக சாத்தியங்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கபே கோரிக்கை விடுத்துள்ளது.

முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் அக்கரைப்பற்று மற்றுமொரு கொலன்னாவ பிரதேசமாக மாற்றமடையக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் எச்சரிக்கைகளை சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் தரப்பினர் உதாசீனம் செய்த காரணத்தினாலேயே கொலன்னாவ பிரதேசத்தில்

துரதிஸ்டவசமான சம்பவம் இடம்பெற்றதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

# மீள்குடியேற்றப் பிரதேசங்களில் கிணறுகள், மலசலகூடங்கள்: யுனிசெப் அமைத்துக் கொடுக்கும்

மாவிட்டபுரம்

வலிவடக்கில் மீளக்குடிமயர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான அடிப்படைத்தேவைகள் யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் வலிவடக்கு பிரதேசசபைத்தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

யுனிசெப்நிறுவனத்தின் நிதியுதவியுடனான மக்களுக்கான வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் வலிவடக்கில் மீளக்குடிமயமர அனுமதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் சரியாக பெற்றுக்கொடுக்கப்பட்டாத பகுதிகளில் மலசலகூடம் மற்றும் பொதுக்கிணறுகளை அமைத்துக்கொடுக்க முன் வந்துள்ளது.

இதனடிப்படையில் மக்கள் மீளக்குடியேறிய பிரதேசங்களான கூவில், சேந்தாங்குளம், வலித்தூண்டல், ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு மலசலகூடங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் தெல்லிப்பழை, வித்தகபுரம், மாவிட்டபுரம் ஆகிய கிராமங்களில் ஜே288,ஜே231ஜே223 ஆகிய கிராஅலுவலர் பிரிவுகளில் 10 பொதுக்கிணறுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளத.

யுனிசெப் நிறுவனத்தின் மூலமான நிதிஅனுசரணையில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டத்தின் மூலம் குடிதண்ணீர் மற்றும் மலசலகூடங்களின்றி துன்பப்படும் மக்கள் நன்மையடைவர்.

# கொலைச் சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதி

நபரொருவரை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இரு சந்தேக நபர்களை பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

கடந்த 09.02.2012 அன்று புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் பகுதியை சேர்ந்த பரமேஸ்வரன் விஜயகுமார் என்பவரை அடித்து கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட தந்தை மற்றும் மகன் ஆகிய இருவருக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருவரும் விளக்கமறியிலில் வைக்கப்பட்டனர்.

கணவன், மற்றும் மகனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை சந்தேக நபர்களின் சார்பாக மனைவியினால் யாழ். மேல் நீதிமன்றில் மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் இரு சந்தேக நபர்களையும் தலா 30,000 ரூபா பிணையிலும், 150,000 ரூபா பெறுமதியான 2 ஆட் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

இவர்கள் சார்பில் சட்டத்தரணி மு.ரெமீடியஸ் பிணை மனுதாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## வேம்படியில் அதிபர் பதவிக்கு அடிபிடி; மாணவிகளின் கல்வி பாழ்

வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர் பிரச்சினை கடந்த மூன்று மாதங்களாக நீடித்து வருகிறது. வேம்படி மகளிர் கல்லூரி என்பது ஒரு சாதாரண பாடசாலையல்ல. ஒரு தேசியப் பாடசாலை. சுமார் 2500க்கு மேற்பட்ட மாணவிகள் அங்கு கல்வி கற்கிறார்கள். சுமார் நூறு வருடங்களிற்கு மேல் பழமைவாய்ந்த கல்லூரி இது. நாட்டில் புகழ் பூத்த புத்திஜீவிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற துறைசார் நிபுணர்களை இந்தக் கல்லூரி உருவாக்கியிருக்கிறது. இப்போதும் கூட கணிசமான மாணவிகள் வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகங்களுக்குச் செல்கிறார்கள்.

1830களில் அமெரிக்க கிறிஸ்தவ மிஷனரிமார் பாடசாலைகளை நிறுவுவதற்கென இலங்கைக்கு வருகை தந்தனர். இலங்கையை பிரட்டிஷார் கூட்டியாண்ட காலம் அது. பிரித்தாளும் தந்திரத்தில் ஊறிப் போன பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள், அமெரிக்க மிஷனரி-மார்களை யாழ்ப்பாணத்திற்குச் சென்று பாடசாலைகளை நிறுவுமாறு அனுப்பிவைத்தனர். இதன் காரணமாகத்தான் யாழ்ப்பாணத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளைவிட அதிகப்படியான மிஷனரிப் பாடசாலைகள் காணப்பட்டன. வேம்படி மகளிர் கல்லூரியின் சகோதரப் பாடசாலையான யாழ்ப்பாண மத்திய கல்லூரியும் ஒரு மிஷனரிப் பாடசாலைதான். யாழ்ப்பாணத்தின் மிஷனரிப் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களே பிரித்தானிய ஆட்சிக் காலத்தின்போது அரசாங்கப் பதவிகளில் அதிகளவில் அமர்த்தப்பட்டார்கள். அந்தளவுக்கு யாழ்ப்பாணக் கல்விக்கூடங்கள் முக்கியத்துவம் பெற்றுத்திகழ்ந்தன.

இவ்வாறு வேம்படி மகளிர் கல்லூரியும் கல்வியில், விளையாட்டில், நாட்டு நிர்வாகப் பணிகளில் பாரிய பங்களிப்பைச் செய்திருக்கிறது. அத்தகைய ஒரு கல்லூரியில் இரண்டு அதிபர்கள் இருப்பது என்பது கேள்விக்குரியது மட்டுமல்ல, வேதனைக் குரியதுமாகும்.

திருமதி ராஜினி முத்துக்குமாரசாமி என்பவர் தானே கல்லூரியின் அதிபர் என்கிறார். இவர் இந்தக் கல்லூரியின் முன்னாள் பதிலதிபராவார். கடந்த ஜூலை மாதம் இரண்டாம் திகதி திருமதி.வேணுகா சண்முகரெத்தினம் என்பவர் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபராகப் நியமனம் செய்யப்பட்டார். ஆனாலும் பதிலதிபர் பொறுப்பில் இருந்த திருமதி. ராஜினி முத்துக்குமாரசாமி புதிய அதிபரிடம் பொறுப்புக்களை கையளிக்க மறுத்துவிட்டார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதனையடுத்து இந்த இழுபறி நிலை குறித்து ஜனாதிபதி செயலகம், பொதுச் சேவை ஆணைக்குழு, கல்வியமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இருந்தும் இந்தப் பிரச்சினைக்கு இன்றுவரை தீர்வு காணப்படவில்லை.

அதிபர் பதவிக்கு அடிபடும் இந்த இரண்டு பேரில் ஒருவருக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதாக மற்றத் தரப்பு குற்றம் சாட்டுகிறது. கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கூட இந்த பிரச்சினை கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இருந்தும் எவ்வித நிவாரண நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. அதிபரின் ஆசனத்தில், முன்னாள் பதில் அதிபர் அமர்ந்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது. பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அதிபராக நியமனம் செய்யப்பட்ட திருமதி வேணுகா சண்முகரெத்தினத்திற்கு ஒரேயொரு வேலைதான் அந்தக் கல்லூரியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதாவது கையெழுத்துப் போடும் அந்த வேலையைத் தவிர, அவருக்கு வேறு வேலை ஏதும் கிடையாதாம்.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின்படி கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக கல்லூரி அதிபரே இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால் அதிபர் பதவிக்கு அடிபடும் இந்த இரண்டு பேருமே பழைய மாணவர் சங்கத்தோடு தொடர்புகளை வைத்துக் கொள்வதில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், வெறும் கையெழுத்திடுவதை மட்டுமே தனது பணியாகக் கொண்டிருக்கும் வேணுகா சண்முகரெத்தினத்தை ஆதரிக்கிறது. முன்னாள் பதில் அதிபர் பழைய மாணவர் சங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்க்கிறார். கடந்த மூன்று வருடங்களாகப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கூட்டப்படவில்லையென்றும் குற்றம் சாட்டுகிறார்.

ஒரே கல்லூரிக்கு இரண்டு அதிபர்கள் உரிமை கோரும் இந்தக் குடுமிபிடிச் சண்டையால் பாதிக்கப்படுபவர்கள் கல்லூரி மாணவிகள்தான். ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு இன்னும் மூன்றே மூன்று மாதங்கள் மட்டுந்தான் இருக்கின்றன. இந்தக் கல்லூரிப் பிரச்சினையில் தலையிட வக்கற்றவர்களாக பொதுச் சேவை ஆணைக்குழுவும், கல்வி அமைச்சும் இனியும் இருக்கக்கூடாது. போராட்டத்தை விஸ்தரிக்கப்போகிறோம் என்று கூறுவோரும், அதிபர் கதிரைக்காக அடிபடுவோரும் மாணவிகளின் கல்வி பாழடிக்கப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுச்சேவை ஆணைக்குழுவும் கல்வியமைச்சும் இனியும் குறட்டை விட்டுத் தூங்காமல் இந்த இழுபறி நிலைக்கு ஒரு நீதியான முடிவு காணவேண்டுமென்பதே யாழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.


இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# கள்வர்களின் உலகம்

கள்வர்களின் உலகம்

இயற்கை தன்னைச் சம நிலையில் வைத்திருப்பதற்காக, தனக்கெனப் பல சுழற்சி வட்டங்களை உருவாக்கி வைத்திருக்கிறது. ஒரு காட்டில் உள்ள செடிகளை மான்கள் உண்ணும். மான்களைப் புலிகள் உண்ணும், அந்தப் புலிகள் இறந்து செடிகளுக்கு உரமாகும். இது காட்டில் இருக்கும் மிகச் சாதாரணமான ஒரு சுழற்சி வட்டம். இந்த வட்டத்தில் உள்ள ஏதாவது ஒன்று இல்லாமல் போனால், அந்தக் காடே அழிந்துவிடும் சாத்தியம் உண்டு. இயற்கையே உருவாக்கிய ஒரு எளிய வட்டம் இது. இது போலச் செயற்கையாக, தன் சுய லாபத்துக்காக மனிதனும் பல வட்டங்களை உருவாக்கியிருக்கிறான்.

தொழிலாளிகள் தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள். தொலைக்காட்சிப் பெட்டி, குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டி, கைத்தொலைபேசி போன்ற பொருட்கள் தொழிலாளர்களுக்கும் பாவனைக்குத் தேவைப்படுகின்றன. இவையும் தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகளிலேயே உற்பத்தியும் செய்யப்படுகின்றன. இந்தப் பொருட்களை ஒரு வாடிக்கையாளனாக வாங்குவதற்கு, தொழிலாளர்களின் மாத வருமானம்




போதாமையாகவே இருக்கும். இந்த நேரத்தில் வலிய வந்து கடன் தரும் வங்கிகளிடம் எந்தச் சிந்தனையுமில்லாமல் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். இப்போது பெற்ற கடன் பணத்தை மாதாமாதம் செலுத்துவது பிரச்சினையாகின்றது. அதனால் மேலதிக நேரக் கடமையுடன் தங்கள் தொழிலை மேலும் முனைப்பாகச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். தொழிற்சாலைகளில் உற்பத்தி மேலும் பெருக ஆரம்பிக்கிறது. தொழிற்சாலைகளின் உற்பத்தி பெருகப் பெருக, சந்தையில் மேலும் மேலும் பலவித புதிய உபகரணங்கள் விற்பனைக்கு வர ஆரம்பிக்கின்றன. அவற்றை வாங்க வேண்டும் என்னும் ஆசை தொடர்ந்து தொழிலாளி-களைத் துரத்த, மீண்டும் வங்கிக் கடன்... மீண்டும் தொழிற்சாலை.... மீண்டும் ஓவர்டைம்....... மீண்டும் பொருட்கள்...... என ஒரு வட்டமாக இது இப்படியே சுற்றிக் கொண்டு இருக்கும்.

இந்த வட்டத்தைச் சரியாக நாம் கூர்ந்து பார்த்தால், இதில் பண ரீதியாக இலாபம் அடைவது இரண்டு பெரிய ஸ்தாபனங்கள் மட்டும்தான். தொழிற்சாலையின் பெருமுதலாளிகளும், வங்கிகளுமே இந்த வட்டத்தில் அதிக இலாபம் அடைபவர்களாக இருப்பார்கள். வங்கிகளும் பெரு முதலாளிகளும் தமக்குள் எழுதப்படாத ஒரு ஒப்பந்தம் மூலம் இந்த வட்டத்தை வழி நடத்திக் கொண்டிருக்கின்றனர். இன்னும் மேலே சென்று பார்க்கும் போது, இந்தப் பெருமுதலாளிகளே வங்கிகளின் பங்குதாரர்களாகவும், வங்கிகளே பெரிய தொழிற்சாலைகளை நடத்துபவர்களாகவும் இருப்பது தெரியவரும். ஆனால், தொழிலா-ளிகள் வாழ் நாள் முழுவதும் இயந்திரங்களோடு இயந்திரமாகத் தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக ஆகிவிடுகிறார்கள். இதுவே அவர்கள் விதியாகவும் அமைந்துவிடுகிறது.

கலி.ஃ.போர்னியா குண்டு பல்ப் நூற்றுப் பத்து வருடங்கள் தாண்டியும் எரிந்து கொண்டிருப்பது தற்செயலாக இருக்குமோ என்று பார்த்தால், இல்லை என்ற பதிலே நமக்குக் கிடைக்கிறது. "ஷெல்பி" கம்பெனியால் உருவாக்கப்பட்ட அந்த ஒரு மின்விளக்கு மட்டுமல்ல, அனைத்து மின்விளக்குகளுமே நூறு ஆண்டுகள் தாண்டியும், பழுதடையாமல் பாவிக்கக் கூடியதாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன என்னும் தகவல் நமக்குக் கிடைக்கின்றது. நூறு ஆண்டுகளுக்கு முன்னரே மின்விளக்குகள் நீண்ட காலம் பாவிக்கும்படி உருவாக்கப் பட்டிருக் கின்றன. ஆனால் விஞ்ஞானத்தில் எட்ட முடியாத உயரத்துக்குப் போய் விட்ட இன்றைய நிலையில், ஏன் குண்டு பல்புகள் சில மாதங்களிலேயே பழுதடைகின்றன? அப்போதே நூறு ஆண்டுகள் பாவிக்கும்படி மின்விளக்குகளை உருவாக்கலாம் என்றால், இப்போது அதைவிட அதிக காலம் பாவிக்கும் படியாக அல்லவா உற்பத்தி செய்ய வேண்டும்? விஞ்ஞானம் எப்போதும் முன்னோக்கி நகருமேயல்லாமல், பின்னோக்கி நகர முடியாதே! இப்படியான கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் அதிர்ச்சி தரும் பதிலை ஒன்றைப் போட்டு உடைத்தார் ஹெல்முட் ஹோகெ (ŕநடஅரவ ŕழநபந) என்பவர். ஹெல்முட் ஹோகே ஒரு ஜெர்மனிய வரலாற்று ஆய்வாளர். 1982 இல் இவர் பேர்லினில் கண்டெடுத்த கோப்புகள் மூலமாக, மறைந்திருந்த மிகப்பெரிய உண்மைகள் வெளியே வந்தன.

1924 ம் ஆண்டு டிசம்பர் 23 ம் திகதி ஜெனீவாவில் இரகச-ியமாக ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. கோர்ட், டை அணிந்த கணவான்கள் அந்தக் கூட்டமைப்பில் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருமே பணக்காரப் பெருமுதலாளிகள். உலகில் உள்ள மின்விளக்குகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் உருவாக்கிய கூட்டமைப்புக்கு "ஃ.போபுஸ்" (Phoebus Cartel) என்று பெயரிடப்பட்டது. அந்தக் கூட்டமைப்பில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் இதுதான். "உலகில் மின்விளக்குகளைத் தயாரிக்கும் அனைத்துக் கம்பெனிகளும், மின்விளக்குகளின் பாவனைக் காலங்கள் பற்றி எந்தவிதக் கவனமுமில்லாமல் செயல்படுகின்றனர். அதிக காலம் பாவிக்கும் மின்விளக்குகளால் கம்பெனிகளுக்கு ந'்டமே ஏற்படுகின்றன. இதுவரை நீண்ட காலம் எரியக் கூடிய மின்விளக்குகளைத் தயாரித்த அனைத்து கம்பெனிகளும், இனி மின்விளக்குகளின் பாவனைக் காலத்தை 1000 மணித்தியாலங்களாகக் குறைக்க வேண்டும்".

இந்தத் தீர்மானம் அந்தக் கூட்டமைப்பில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த ஃ.போபுஸ் கூட்டமைப்பின் ஒப்பந்தத்தில் மின்விளக்குத் தயாரிப்பின் ஜாம்பவான்களான, ஹாலந்தின் பிலிப்ஸ்,




ஜேர்மனியின் ஒஸ்ராம், பிரான்ஸின் லாம்ப் கம்பெனி என, அனைத்துக் கம்பெனிகளும் கையெழுத்திட்டுள்ளனர். அதாவது இதுவரை தரமாக இருந்த ஒரு பொருளை, மிகவும் மோசமான தரத்தில் உருவாக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கூட்டமைப்பு எடுத்த முடிவு. அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற கண்டங்களில் உள்ள அனைத்துக் கம்பெனிகளும் இந்த கூட்டமைப்பின் ஒப்பந்தத்திற்கு பணிய வேண்டும். இதில் உள்ள நகைச்சுவை என்னவென்றால், இந்தக் கூட்டமைப்பின் சட்டத்தை மீறும் கம்பெனிகள் அபராதம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனை உருவாக்கப்பட்டதுதான். அதுபோல அபராதப் பணமும் பல கம்பெனிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கின்றன.

1000 மணித்தியாலங்கள் என்பது மிகவும் குறைந்த பாவனைக் காலம். இரவுகளில் மட்டும் மின்விளக்குகளைப் பாவித்தாலும், ஒரு வருடத்திற்குள் பழுதடைந்து விடும் காலம். முதலாளிகளின் தனிப்பட்ட இலாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் இது. இந்த ஃ.போபுஸ் கூட்டமைப்பின் ஒப்பந்தம் மூலம், உலகம் முழுவதும் உள்ள மக்கள், பழுதடைய வேண்டும் என்றே தயாரிக்கப்பட்ட மின் விளக்குகளையே இப்போதும் பாவித்து வருகின்றனர். வளர்ந்த விஞ்ஞானம் மக்களுக்கு எதிரான ஒரு பயன்பாட்டுக்கு உபயோகப் படுத்தும் கொடுமை இது. உலகப் பெருமுதலாளிகளிடம் நாம் ஏமாந்த கதை இது. இந்தக் கதை குண்டு பல்புடன் முடிவடைந்து விட்டது என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. தொடர்ந்தது. வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

கணினியை அனைவருமே இப்போது பாவித்துக் கொண்டு இருக்கிறோம். கணணி வைத்திருக்கும் ஒவ்வொருவரும் அதனுடன் கூடவே வைத்திருக்கும் கருவி, பிரிண்டர் புதிய தொழில்நுட்பமான "இங்க்ஜெட்" பிரிண்டர்களைத்தான் நாம் தற்சமயம் கூடுதலாகப் பாவனையில் வைத்திருக்கிறோம். இந்தப் பிரிண்டர்களை நாம் பாவித்த சில காலங்களிலேயே,

(7ஆம் பக்கம் பார்க்க)






## சார்க் ஆசிரிய சம்மேளனத்தின் மூன்றாவது மகாநாடு

கடந்த 18 ஆம் திகதி கொழும்பு ஸ்ரார் ஹோட்டலில் நடைபெற்றது. இம் மாநாட்டுக்கு வருகைதந்த கல்வி அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு மோகன்லால் கிறேறோ, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச்சங்கப் பிரதிநிதிகளால் வரவேற்று அழைகக்கப்பட்டு வந்தார். சர்வதேசக் கல்வியகத்தின் இணைப்பாளரும் சார்க் ஆசிரிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான திரு.எஸ்.ஈஸ்வரன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச்சங்க பிரதிநிதிகளுடன் இணைந்திருப்பதனையும் சார்க் ஆசிரியர் சம்மேளனத்தின் உறுப்பினர்களோடு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச்சங்க பிரதிநிதிகள் இணைந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# வலிகாமம் தெற்கு கலாசாரப் பேரவையின் கலாசார விழா நாளை

உடுவில்

வலிகாமம் தெற்கு உடுவில் கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழா நாளை சனிக்கிழமை இரு அமர்வுகளாக இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமை தாங்குவார்.

கலை அமர்வு ஒன்பது மணி முதல் நடைபெறவுள் ளது. வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத் தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். யாழ் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல் துறைப் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன், வடமாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஶ்ரீதேவி மற்றும் யாழ் பல்கலைக்கழக தமிழ் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை அமர்வு பிற்பகல் 2.30 மணி முதல் நடை பெறவுள்ளதுடன் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் ப.சீவரத்தினம், பேராசி ரியர் க.தேவராஜா மற்றும் யாழ் பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசி ரியை கலைவாணி இராமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினரர்களாகவும் கலாபூஷணம் இ.சுந்தரமூர்த்தி யும் கலந்துகொள்வார்.

காலை அமர்வில் கலை நிகழ்வுகளுடன் தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக் கான பரிசில் வழங்கல் நிகழ்வும் மாலை அமர்வில் கலை நிகழ்வுகளுடன் கலைஞர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வும் இடம்பெறும்.



# கழுகுக் கண்கள்

அரசாங்கம் கடந்த ஈராண்டுகளாக நடைமுறைப்படுத்தி வந்த துரித மீன்பிடி அபிவிருத்தி திட்டங்களி னால் நாட்டின் தேசிய மீன் உற்பத்தி இப்போது 30 சதவீதம் அதிகரித்துள்ளதை கழுகு கண்கள் அவதானித்தது.

இலங்கையின் வருடாந்த மீன் உற்பத்தி 3 லட்சத்து 40ஆயிரம் மெற்றிக் தொன் ஆக 2009ம் ஆண்டில் இருந்தது.

இது 2011ம் ஆண்டில் 4 லட்சத்து 45ஆயிரம் மெற்றிக்தொன் ஆக அதிகரித்துள்ளதாக தேசிய மீன் உற்பத்திக்கு நடு நாயகமாக இருந்து பணி புரியும் கடற்தொழில் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார்.

ஆழ்கடலில் இருந்து நாம் பிடிக்கும் மீனின் அளவு இந்த மொத்த தொகையில் 86 சதவீதமாகும். அதே வேளையில் ஆறுகள், வாவிகள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் இருந்து பிடிக்கும் நன்னீர் மீனின் அளவு 14 சதவீதமாகும்.

2005ம் ஆண்டில் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தி ஒரு லட்சத்து 63ஆயிரம் மெற்றிக் தொன் ஆக இருந்தது. சுனாமியினால் மீன்பிடி படகுகள் கடலில் அடித்துச் சென்றதனாலும் அவை உடைந்து நாகமாகியதுமே 2005ல் மீன் உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கு பிரதான காரணமாகும்.

மீன் உற்பத்தியின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.7 சதவீத பங்களிப்பை வழங்கப்படுகின்றது.

ஆழ்கடலில் மீன் பிடிப்பதுடன் நம்நாட்டு மீனவர்கள் உள்ளூரில் 4 லட்சத்து 80ஆயிரம் ஹெக்டேயர் அளவிலான ஆறுகள், நீர்த்தேக்கங்கள், வாவிகள் மற்றும் குளங்களில் போஷாக்குணவான மீனை பிடிக்கிறார்கள்.

இந்த உள்ளூர் மீன்பிடி துறையில் ஈடுபடுவோருக்கு கடற்தொழிலாளர்களுக்கு கொடுக்கும் அதே அளவு சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. இவர்களுக்கு மீன்பிடி படகுகள், மீன்பிடி படகுகளில் பொருத்துவதற்கான இயந்திரங்கள், வலைகள் போன்றவற்றை குறைந்த வட்டியுடனான நீண்டகாலத்தில் திருப்பி கொடுக்கக்கூடிய கடன் தொகையாக பெற்றுக்கொடுக்கிறது.

வீட்டுத் தொட்டிகளில் அழகாக வைத்து மகிழ்வதற்காக கோல்பிஸ், பிளேட்டிஸ், ஏஞ்சல்ஸ் போன்ற பல வகையான நன்னீர் மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும் இலங்கை இலட்சக்கணக்கான ரூபாவை வெளிநாட்டு நாணயமாக சம்பாதிக்கின்றது.

தற்போது கடற்தொழில் நீர்வள அபிவிருத்தி அமைச்சு எமது மீன் உற்பத்தியை 6 லட்சத்து 85 ஆயிரம் தொன் ஆக அதிகரிப்பதற்கு பல்வேறு திட்டங்களை அமைத்து அவற்றை சிறப்பான முறையில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இதன்படி தனி மனிதன் ஒருவர் 60 கிராம் மீனை உட்கொள்ளக்கூடிய வகையில் மீன் உற்பத்தி அதிகரிக்கப்படும்.

இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் கடற்தொழில் அமைச்சின் கீழ் நெறியான முறையில் தனது பணிகளை நிறைவேற்றி மீனை நியாயமான குறைந்தவிலைக்கு மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக நாட்டின் பல பகுதிகளில் மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனை நிலையங்கள் இப்போது திறக்கப்பட்டுள்ளன.

தங்கள் உதிரத்தை வியர்வையாக்கி தங்கள் உயிரை துச்சமாக மதித்து ஆழ்கடலுக்கு சென்று பல நாட்கள் மழையிலும், வெயிலிலும் துன்பத்தை அனுபவித்து நம்நாட்டு மக்களுக்கு தேவையான மீனை பிடித்துக் கொண்டு கரைக்கு திரும்பும் மீனவர்கள் தாங்கள் பிடித்த மீனின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு சிறு பகுதியையே பெற்றுக் கொள்கிறார்கள். பெரும் பகுதியை படகுகளின் சொந்தக்காரர்களும், மீன் முதலாளிகளும் அபகரித்துக் கொள்கிறார்கள்.

இதனால் வருடத்தில் 365 நாட்களும் கடலில் ஜீவமரணப் போராட்டத்தை நடத்தி மீனை பிடித்துக் கொண்டு வரும் கடற்தொழிலாளர்கள் வாழ்நாள் பூராகவும் ஏழைகளாக துன்பத்தில் துவண்டு இறுதியில் மரணிக்கிறார்கள். இவர்களுக்கு நல்வாழ்வை பெற்றுக் கொடுக்கும் எண்ணத்துடன் அரசாங்கம் இப்போது கடற்தொழிலாளர் களுக்கான விசேட ஓய்வூதியத் திட்டத்தையும் அவர்களுக்கான வீடமைப்பு திட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கடற்தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக கடற்தொழிலா-ளர் வாழும் கரையோர பிரதேசத்திற்கு அருகில் புதிய பாடசாலைகளை அல்லது அங்குள்ள பழுதடைந்துள்ள பாடசாலைகளை திருத்தி அமைக்கும் பணியையும் நிறைவேற்றியிருக்கிறது.

ஆழ்கடலுக்கு செல்லும் எமது மீன்பிடி படகுகள் காலநிலை மாற்றத்தினால் தூர இடங்களுக்கு காற்றோட்டத்துடன் அடித்துச் செல்லப்பட்டாலும் அவை எங்கிருக்கின்றன என்பதை கண்டு பிடிப்பதற்கான படகுகளை கண்காணிக்கும் ஒரு நவீன இயந்திரம் இப்போது கடற்தொழில் அமைச்சினால் செயற்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் இந்த படகுகள் அல்லது இழுவைக் கப்பல்கள் எங்கிருக்கின்றன என்பதை தெரிந்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த மீன்பிடி படகுகள், இழுவைக் கப்பல்களின் நடமாட்டத்தை தரையில் இருந்து அவதானிப்பதற்கான கருவிகள் தற்போது ஆழ்கடலுக்கு செல்லும் சுமார் 3 ஆயிரத்து 200 மீனிபிடி கப்பல்கள், இழுவைக் கப்பல்களில் பொருத்தப்படுகிறது.

பல நாட்கள் ஆழ்கடலில் தங்கியிருக்கும் படகுகளுக்கும், கப்பல்களுக்குமே இந்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது. இவற்றுக்கு அரசாங்கம் தற்போது 9 மில்லியன் யூரோக்களை செலவிட்டிருப் பதைக் கண்டு கழுகுக் கண்கள் மகிழ்ச்சி பூரிப்பில் உள்ளது.

# வலிகாமம் கல்வி வலய நடனப் போட்டி நாளை மறுதினம்

உடுவில்

வலிகாமம் கல்வி வலயப் பாட சாலை மாணவர்களுக்கிடையில் சமஸ்தலங்கா பாடசாலை நடனம் மற்றும் முத்திரை நடனப் போட்டி நாளை மறுதினம் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மருதனார்மடம் இராமநா தன் கல்லூரியில் நடைபெறவுள ளது.

இப்போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் உரிய நேரத்திற்கு வருகைதருமாறு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கள்வர்களின் உலகம்...

(7ஆம் பக்க தொடர்ச்சி)

அவை திடீரெனப் பாவிக்க முடியாத நிலைக்கு உள்ளாகின்றன. திருத்துவதற்காக அதைக் கொண்டு சென்றாலும், அங்கு சொல்லப்படுவது "இதைத் திருத்த முடியாது. புதிய பிரிண்டர் வாங்குங்கள்" என்பதுதான்.

சோனியின் வாக்மேன் கலாசாரத்தை உடைத்தெறிய, ஆப்பிள் கம்பெனி (ஒரு புது வகையான கண்டுபிடிப்பை வெளியிட்டது. அதன் பெயர் "ஐபாட்"இசை கேட்கும் இளைஞர்கள் உலகில் "பிக் பாங்க்" போல, மாபெரும் பிரளயத்தையே இந்த ஐபாட் உருவாக்கியது. ஐபாட் சந்தைக்கு வந்த காலங்களில் அதன் விலை 400 டாலர்களிலிருந்து 500 டாலர்கள் வரையிருந்தன. எந்த இளைஞனின் காதுகளிலும் ஐபாட்தான். ஆப்பிள் கம்பெனி யின் விற்பனை இதனால் உச்சத்தை எட்டியது. ஆனால் ஐபாட்களை வாங்கியவர்களுக்கு பிரச்சினை பாட்டரி வடிவத்தில் வந்தது. ஐபாட்களின் பாட்டரி 8 மாதங்களிலிருந்து ஒரு வருடத்துக்குள்ளாக பழுதடைய ஆரம்பித்தது. ஐபாட்கள் பழுதடையாமல், பாட்டரி மட்டுமே பழுதடைந்தன. பாட்டரி-களை மாற்றுவதற்கென கொண்டு சென்றால், பாட்டரிை-யத் தனியாக மாற்ற முடியாது, புது ஐபாட்கள்தான் வாங்க வேண்டும் எனப் பதில் வந்தது.

இதை அவதானித்த இரண்டு இளைஞர்கள், ஐபாட்களின் பாட்டரிகளில் என்ன பிரச்சினை என்று ஆராய்ந்தார்கள். பாட்டரிகள் பழுதடைவதில்லை. உடன் அவர்கள் இணையத்தின் மூலமாக ஒரு விளம்பரம் கொடுத்தார்கள். ஐபாட்கள் பழுதடைந்தால் மிகக் குறைந்த விலையில் புதிய பாட்டரி மாற்றித் தருவதாக அந்த விளம்பரம் இருந்தது. குறுகிய காலத்தில் இலட்சக்கணக்கானோர் அந்த இணையத்தைப் பார்வையிட்டனர். இதை அறிந்த ஆப்பிள் கம்பெனி அவர்களுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியது. இதைக் கேள்விப்பட்ட சான் பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த பெண் வழக்கறிஞரான எலிசபெத் பிரிட்ஸ்கெர் (Elizabeth Pritzker) அந்த இளைஞர்களுக்கு ஆதரவாக நீதி மன்றத்தில் வாதாட வந்தார். வழக்கின் இறுதியில் 2003ம் ஆண்டு ஆப்பிள் ஐபாட்களின் பாட்டரி-களை மாற்றித் தருவதற்கு உடன்பட்டது.

இதை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கென்றே பெருமுதலாளிகளால் ஒரு மிகப்பெரிய உலகமே உருவாக்கப்பட்டிருக்கிறது. விளம்பரங்கள், டி.வி. ோக்கள், மாடல்கள், சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள், பிர-பலங்கள் என அனைத்தையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டிருக்கும் அந்த உலகம்.

நன்றி: இணையம்.

# யாழ்.குடாநாட்டின் நன்னீர் திட்டம்



யாழ்.குடாநாட்டின் எதிர்கால வாழ்வுக்கும் வளத்திற்கும் இன்றியமையாத திட்டம் பற்றி அக்கறையுடன் நோக்கும் எவரும் இங்குள்ள கடல் நீரேரிகளை நன்னீர் ஏரிகளாக மாற்றும் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும். நன்னீரேரித் திட்டங்களால் யாழ்ப்பாணத்தில் தரைக்கீழ் நீர் வள சேமிப்பு அதிகரிப்பதோடு வீணே கடலைச் சென்றடையும் நீர் தரைக்கீழ் நீரின் மீள்நிரப்பியாக மாறும்.

குடாநாட்டுத் தரைகீழ் நீர்க் கூற்றுக்கள் உலர் நீராக மாறாமல் இருக்கும். உண்மையில் நன்னீரேரித் திட்டம் பற்றிய சிந்தனை 90 வருடங்கள் பழமை வாய்ந்தது. 1922இல் இரணைமடுக் குளத்தின் அணைபோடப்பட்ட போது ஆனையிறவுக் கடல் நீரேரியை நன்னீரேரியாக மாற்றும் திட்டம் பற்றியும் சிந்திப்புப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். குடாநாட்டில் நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையில் நன்னீரேரிகளாக மாற்றப்படக் கூடிய 13 கடல் நீரேரிகளும் நடைமுறையிலுள்ள 33 உவர்நீர்த் தடுப்புத் திட்டங்களும் உள்ளன. மேற்படி 13 கடல்நீரேரிகளில் நீரேரிகளை அதிக செலவின்றி நன்னீரேரிகளாக மாற்ற முடியும்.

1.ஆனையிறவு மேற்கு கடல் நீரேரி

2. ஆனையிறவு கிழக்கு கடல் நீரேரி

3.தொண்டமானாறு கடல்நீரேரி

இந்த கடல் நீரேரிகளை நன்னீரேரிகளாக மாற்றும் திட்டங்கள் பல உருவாக்கப்பட்டு அவற்றில் சில பகுதிகள் செயற்படுத்தப்பட்டும் உள்ளன. உவர்நீர் மீன்பிடிக்கு உதவுமென்று என்றும் மக்கள் ஏதோ வழிகளில் கடல் நீரேரிகளை உளே வரவிடுவதனால் இத்திட்டங்கள் பூரண வெற்றியளிக்காதுள்ளன. இத்திட்டங்களை நல்லமுறையில் செயற்படுத்துதல் செயற்படுத்துததல் இன்றியமையாதது.

அத்துடன் குடநாட்டைச் சூழவுள்ள ஏனைய சில கடல் நீரேரிகளையும் அதிக செலவின்றி நன்னீரேரிகளாக மாற்றக்கூடிய வாய்ப்புண்டு. உதாரணமாக மண்டைதீவையும் வேலணையையும் பிரிக்கும் கடல் நீரேரியை சுலபமாக நன்னீரேரியாக மாற்றலாம். பண்ணைத் தாம்போதியையும் அராலி தாம்போதியையும் மறிச்சுக்கட்டுவதன் மூலம் யாழ். நகரத்தின் தென்மேற்கு பகுதியில் பற்றிய நன்னீரேரித் தேக்கத்தை ஏற்படுத்தலாம்.

இவ்வாறான திட்டங்களால் நன்னீர் வளம் பெருகுவதோடு நிலப்பரப்புகளில் உவர்த்தன்மை நீக்கப்பட்டு அவற்றை வளமான விளை நிலங்களாக மாற்ற முடியும். இது விளை நிலம், நீர் பற்றாக்குறையால் அல்லற்படும் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். கடல் நீரேரிகளை நன்னீர் ஏரிகளாக மாற்றும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் பின்வரும் இரு முக்கியமான பிரச்சினைகளையும் முன் வைக்கின்றனர்.


சூழல் மாசடைதல், கடல்நீர் ஏரிகளில் நீர்வரத்து தடைபட்டு நீரேரிகள் முற்றாக வற்றும் காலங்களில் குடியிருப்புப் பகுதிகள் மீது வேகமாக வீசும் காற்றினால் (சோளகக் காற்று) புழுதி வாரி வீசப்பட்டு சுற்றுச்சூழல் மாசடையும் அபாயம் காணப்படும். ஆனால் இந்த அபாயத்தை இலகுவாக சமாளிக்கலாம் என்கின்றனர் சூழலியலாளர்கள். நன்னீரை வற்றாத அளவிற்கு தேக்கி வைப்பதன் மூலமாகவும் முற்றாக நீர் வற்றும் பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதிகளில் திட்டமிட்ட அடிப்படையில் புற்களை வளர்ப்பதன் மூலம் இப்பிரச்சினையை குறைக்கலாம்.

கடல் நீர் ஏரிகளில் மீன்பிடித்தொழில் மேற்கொள்வோரின் தொழில்துறை பாதிக்கப்படும் அபாயம். இத்திட்டத்தால் பாதிப்புறும் மக்களை கண்டறிந்து அவர்களுக்குப் பொருத்தமான வேறு கரையோரப் பகுதிகளில் தொழில் செய்யும் வசதிகளை அமைத்துக் கொடுக்க முடியும். குடநாட்டின் பரவை கடல் பரப்புக்களில் மீன்பிடியில் ஈடுபடுவதைவிட ஆழ்கடல் மீன்பிடியில் அவர்களை ஈடுபட வைப்பத பொருளாதார அபிவிருத்தி நோக்கி நன்மை பயக்கும்.

விவசாய பயிர்களுக்கு மிதமிஞ்சிய நீர்பாய்ச்சல் யாழ்.குடாநாட்டில் நீரிறைப்பு இயந்திரம் பயன்படுத்தப்படல். பயிர்களுக்கு அளவுக்கதிகமான நீர் பாய்ச்சப்படுகிறது. நிலம் உவர்தன்மை அடைவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். நன்னீர்க் கிணறுகளை அடிக்கடி இறைப்பதினால் உவர் நீராக மாறக்கூடிய அபாயமும் உண்டு. உண்மையில் பயிரின் தேவைக்கு ஏற்ப நீரை பாய்ச்சுவதற்கான அளவை விவசாயிகள் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். மேலும் இங்கு காணப்படும் பாசன முறை நீர் ஆவியாக்கத்தை அதிகரிக்கச் செய்கிறது.

இதனைத் தவிர்ப்பதற்கு தூவல் பாசனமுறை பல குழாய் இணைப்புக்கள் மூலம் பயிருக்கு அடியில் நீரைச் செலுத்தல் போன்ற நவீன முறைகளைக் கையாளமுடியும். நீர்வள அபிவிருத்தி தொடர்பான திட்டமிடலுக்கு பல்வேறு தரவுகள் தேவை. இதற்கு புவியியல் பொருளியல், மண்ணியல், பொறியியல், விவசாய அறிவியல் போன்ற துறைசார் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து இயங்க வேண்டும் யாழ்.குடநாட்டை நீர்வள வலயங்களாக வகுக்க வேண்டும். நீர் ஓடைகள், குளங்கள், கிணறுகள் என்பவற்றை அவதானித்து ஆய்வு செய்து அவற்றின் அளவுகள் , உவர்த்தன்மை, நீரின்தன்மை ஆவியுயிர்ப்பு, ஊடுவடிதல், நீர்மாசுபடும் தன்மை வலயங்களை நீர்ணயிக்க வேண்டும். இந்த அடிப்படைத் தரவுகளின் துணையுடன் ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் நீர்வளத்தைப் பாதுகாக்கும்.

யாழ்ப்பாணப் பிரதேச நீர்வள அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் இது போன்ற திட்டங்களை உருவாக்குவதற்கும் அவற்றை நிர்வகிக்கும் அப்பிரதேசங்கள் அவ்அவ்பகுதி வாழ் மக்களின் ஓர் கட்டுப்பாடான நிர்வாகத்திற்குள் வருதல் அவசியம். அப்போது தான் தங்குதடையின்றி உள்நோக்கம் எதுவும் அற்ற விவசாய பாசன அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்க முடியும். இதனால் விவசாய உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெறுவது மாத்திரமன்றி மிகை உற்பத்தியை அடையமுடியும்.




சிங்கப்பூர் என்ற நகரம் மலேசியாவிலிருந்து குறைந்த நிலப்பரப்பாகவும் தரவை நிலமாகவுமே இருந்தது. ஆனால் தற்போது அந்நாட்டின் வளர்ச்சி மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. அதற்கு அந்த அரசாங்கத்தின் நீண்டகால திட்டங்களும், நாட்டு மக்களின் ஒத்துழைப்பும், அர்ப்பணிப்பும், விடாமுயற்சியும், கடின-உழைப்பும் தான் காரணங்களாகும். அதேபோல எமது நாட்டிலும் அரசாங்கமும் மக்களும் ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது நாட்டின் வளர்ச்சி என்பது வெகு தொலைவிலில்லை.


எனவே எமது பிரதேசம் தொடர்பான அபிவிருத்திக்கு நீர்வளம் என்பது முக்கிய பங்கினை வகிக்கிறது. காலமாற்றத்தினாலும் பருவமாற்றத்தினாலும் நீர்வளம் அருகிக் கொண்டு செல்வதானது எதிர்காலத்தில் நாடு பற்றிய பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய சூழல் ஏற்படும். ஆக நீரின் தேவை என்பது எப்போதும் குறையப்போவதில்லை. நாளுக்கு நாள் அதிகரிக்கத் தான் போகிறது.

இந்த சூழலில் இப்பிரச்சினையை வெற்றிகரமாக எடுத்துக் கொள்வது எப்படி? என்பது பற்றி சர்வதேச நீர், நிலவியல் வல்லுநர்கள் துணையுடன் ஆராய முற்பட வேண்டும்.

இருக்கின்ற இந்த நிலத்தை நீர் வளத்தை பாதுகாப்பது எப்படி? எதிர்கால தேவைக்கான நீரை சீரழியாமல் பெறுவது எப்படி என்பன நீரியல் நிபுணர்கள் புதிய வழிமுறை காணக் கண்டறிந்து அறிமுகப்படுத்த வேண்டும் என்பதே யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியிலிருந்து எழுகின்ற வேண்டுகோளாகும். இந்த வேண்டுகோளை ஏற்று அரசாங்கமும், அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்களும் மக்களின் எதிர்கால வாழ்வுக்கான நிலத்தடி நீரின் நீடித்த இருப்பை உறுதி செய்திட தன்னார்வத்துடன் முன்வரவேண்டும்.

# தொன

பொந்துக் கிணறு தொண்ட
பிரசித்தமானது. இடிவிழுந்து
நிலாவரைக் கிணறுபோல இ
பாவனைக்கும்,பாடசாலையினது
நாளொன்றுக்கு 42000 லீற்ற
பகுதிகளுக்கு குழாய் மூலம்
தொடர்ந்து இக்கிணற்றிலிரு
மாற்றமடைவதாகவும்,அண்மை
தெரிவிக்கின்றனர்.
இதனால் இந்தக் கிணற்றின்
தொண்டைமானாறு மக்களிற்கு
இவ்விடயம் கவலைக்குரியது
விடிவே தொன்றப்போவதில்லை
ஆகவே நன்னீர் உவர்நீராக



# திருமலை ம


திருகோணமலையில் 101
செலவில் அமைக்கப்பட்ட ம
கட்டடத்தை ஜனாதிபதி மஹி
திறந்துவைத்தார். வதேச
நிதி உதவித்திட்டத்தின் கீழ்
நீரியல்வள அபிவிருத்தி அ
மீன் சந்தையை அமைத்துள்
இந்த வைபவத்தில் மீன்பி
அமைச்சர் ராஜித சேனரத்ன
சூசன்ன புஞ்சி நிலமே- அ
பேராசிரியர் தமிதா த சொய்
முக்கியஸ்தர்கள் கலந்துகொ

# உருத்திரபுரம் வெள்ளப் பா நிரந்தர தீர்



வாக நேற்று கிளிநொச்சி அ
கலந்துரையாடல் நடத்தப்பட்
அந்தவகையில் மேற்படி
வெளியேற்றுவது தொடர்பில்
நலன்களையும் கருத்தில் எ
செய்தல் திட்டமதிப்பீடுகளை
உள்ள காடுகளை துப்பரவு
ரவில் ஒரு நிரந்தர தீர்வுக்
அதற்கு முன்னதாக அந்த

# ண்டமானாறிலுள்ள பொந்துக் கிணறு....!



ண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள இக்கிணறு மிகவும்
ந்து பொந்துக்கிணறு தோன்றியதாகக் குறிப்பிடப்படுகின்றது.
ல இறைக்க இறைக்க வற்றாத கிணறாகும்.முன்பு இக்கிணறானது பொதுமக்கள்
யினதும்,குடிநீர்த் தேவைகளிற்குப் பாவிக்கப்பட்டது.
லீற்றர் நீர் தொண்டைமானாற்றிலிருந்து வல்வெட்டித்துறை நகரப்பகுதி, பொலிகண்டி, ஊறணி வரையான
லம் 24 நீர்த் தொட்டிகளுக்கு பொதுமக்களின் பாவனைக்கென நீர் வழங்கப்படுகின்றது.
லிருந்து நீரை எடுப்பதனால் இக்கிணற்றின் சுற்றாடலில் உள்ள கிணறுகளில் நன்னீர் உவர்நீராக
ன்மையில் உள்ள விவசாயக் கிணறுகள் நீர்மட்டம் குறைவடையும் என விவசாயிகள் அச்சம்

ற்றின் சுற்றாடலில் வருங்காலத்தில் விவசாயத்தை மேற்கொள்ளமுடியாது போகலாம்.அத்தோடு
ளிற்கு குடிநீர்ப் பிரச்சனையும் தொன்றவுள்ளது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.
ரியதும், ஆய்வுக்குரியது.இவற்றிற்காக கவலைப்பட்டோ ஆய்வு செய்வதன் மூலம் எங்கள் மக்களிற்கு
ல்லை.
நீராக ஊரெங்கும் மாற்றமடையும்முன் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.



## நெடுந்தீவில் என்றுமில்லாத வரட்சி

நெடுந்தீவு பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு வரட்சி நிலை காணப்படுகின்றது. இதன்விளைவாக நெடுந்தீவு பிரதேசத்தில் பெருமளவாக காணப்படும் கால்நடைகள் இறப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்தோடு நெடுந்தீவின் பல கிணறுகள், குளங்கள் வற்றிய நிலையில் உள்ளதோடு நெடுந்தீவின் மிகப்பெரிய குளமாகச் சொல்லப்படும் வெட்டுக்களியானது வற்றி அதனுள் இருந்து மிகப்பெரிய அளவில் புழுதி கிளம்புவதையும் அப்பபுளுதியானது வீதியில் பயணிப்போருக்கும், அப்பகுதியில் குடியிருப்போருக்கும் மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. இக்குளம் கடந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்டது. இருப்பினும் தற்போதைய வரட்சியின் விளைவாக மிகவேகமாக வற்றி இந்தநிலை தோன்றியுள்ளதாக அப்பகுதியில் வசிப்பவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் இப்புழுதி மண்ணானது நெடுந்தீவின் பலபகுதிகளுக்கும் செல்வதோடு அண்டைய தீவுகளான நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய பகுதிகளுக்கும் செல்வதாக குறிப்பிடப்படுகின்றது. மேலும் நல்ல தண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் சைக்கிள் மற்றும் உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதனுடன் பிரதேச சபையினாலும் மக்களுக்கான தண்ணீர் விநியோகிக்கப்படுவதோடு கடற்படையினராலும் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளரும், நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளருமான தானியேல் றெக்சியன் அவர்கள் விடுத்துள்தியில் குடிநீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள்



## மத்திய மீன் சந்தை திறப்பு




.01 மில்லியன் ரூபா
மத்திய மீன் சந்தைக்
மஹிந்த ராஜபக்ஷ நேற்று
தச வி[illegible]ய அபிவிருத்தி
கீழ் ம[illegible]பிடி மற்றும்
அமைச்சு இந்த மத்திய
துள்ளது.
ன்பிடி மற்றும் நீரியல் வள
ரத்ன- பிரதியமைச்சர்
அமைச்சின் செயலாளர்
சாய்சா ஆகியோர் உட்பட
கொண்டனர்.

## ரம் மேற்கு பகுதியின் பாதிப்புக்களுக்கு தீர்வு தேவை



கிளிநொச்சி உருத்தி ரபுரம் மேற்கு பகுதி மக்கள் ஒவ்வொரு மழைக் காலங்களின் போதும் புது முறிப்புகுளம், புதுக்குளம், கந்தன்குளம் ஆகிய குளங்களிலிருந்து வெளியேறுகின்ற நீர் மேற்படி பிரதேசத்தினை பாதித்து வருவதாகவும் தங்களின் வழமையான வெயற்பாடுகள் இந்த காலங்களில் முடக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இது குறித்து பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். குறித்த பிரதேசததிற்கு விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள் அங்கு மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு அமை-
ி அரச செயலகத்தில் உரிய உயரதிகாரிகளுடன்
ப்பட்டது.
டி குளங்களிலிருந்து வெளியேறுகின்ற நீரினை சீராக
பில் அந்த பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின்
எடுத்து சீரான வடிகால் அமைப்பதற்கான நில அளவை
ளை மேற்கொள்ளல் நீர் வெளியேறுகின்ற பகுதிகளில்
ரவு செய்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து விை-
வுக்கு வழி ஏற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.
த பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் அனுபவ



## வடக்கில் 10 சிறுவர் இல்லங்கள் மூடப்பட்டன!

வடமாகாணத்தில் 73 சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் காணப்பட்டதாகவும் அவற்றில் 71 சிறுவர் இல்லங்கள் தனியாருக்கு சொந்தமானவை என்றும் வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் விஸ்வரூபன் தெரிவித்தார்.

இவற்றில் சீரான முறையில் இயங்காத 31 பராமாரிப்பு நிலையங்களில் 10 பராமரிப்பு நிலையங்கள் நீதிமன்ற ஆணைப்படி மூடப்பட்டுள்ளதாகவும், ஏனைய 21 நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது தமது திணைக்களத்தின் கீழ் இரண்டு அரச சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் காணப்படுவதாகவும் அவற்றில் ஒன்று வவுனியா மாவட்டத்திலும், மற்றையது யாழ்ப்பாணம் கைதடி பிரதேசத்திலும் செயற்பட்டு வருவதாவும் வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் விஸ்வரூபன் குறிப்பிட்டார்.


யாழ் பொது நூலகத்திலுள்ள வட மாகாண சபை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வடமாகாணத்தில் நடைபெற்றுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

## கல்லாரைக் கிராமத்திற்கு மின்இணைப்பு வழுங்க நடவடிக்கை

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவின் து.்.212 கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த கல்லாரைக் கிராமத்தின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார வசதி இல்லாத மக்களுக்கான மின்சார இணைப்பு கிடைப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. இந்நிலையில் பாதையின் அளவு போதாமையால் கிடைக்கப்படவிருந்த மின்இணைப்பானது தற்சமயம் நிறுத்தப்படவிருந்தது. கடந்த காலத்திலும் இவ்வாறு மின் இணைப்பு வழங்க இருந்த சமயம் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அப்பாதையின் குறுக்கு அளவை 11 அடியாக அதிகரிப்பது சம்பந்தமாக அவ்மக்கள் சகிதமும், அப்பாதையின் அயல் எல்லையான வயற்காணி மேற்பார்வையாளர் சகிதமும் கலந்துரையாடும் நிகழ்வு இடம்பெற்றது.

வீட்டு உரிமையாளர்கள் 03 அடி காணியை விடுவதெனவும், காணி மேற்பார்வையாளர்களை பிரதேச செயலகத்திற்கு அழைத்து காணி உரிமையாளரின் அனுமதியுடன் வயல் எல்லை வரம்பை சீர்செய்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது.



## வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவ:

# தேர்தல்கள் நீதியாக நடக்குமா? கண்காணிப்பாளர்கள் சந்தேகம்

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மூன்று மாகாணங்களில் முறைப்பாடு செய்யப்பட்ட தேர்தலுக்கு முந்திய வன்முறைகள் குறைந்துள்ள போதிலும் இங்கு நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தல்கள் சுதந்திரமான, நீதியான தேர்தல்களாக கருதப்பட முடியாதவையாகவே இருக்கும் எனத் தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் கூறினர்.

வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் இரண்டு கட்சிகள் நேரடியாக மோதுவதற்கு கிழக்கு மாகாணத்தில் பல பக்க போட்டி நிலவுவதால் பதற்றம் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் இறுதியாக நடந்த தேர்தலில் 21 சம்பவங்களும் இந்தத் தேர்தலில் ஐந்து சம்பவங்களும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேபோல, சப்ரகமுவாவில் இறுதியாக நடந்த தேர்தலில் 51 சம்பவங்களும் இந்தத் தேர்தலில் ஆறு சம்பவங்களும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன என பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்ட 235 சட்டமீறல் சம்பவங்களில் அநுராதபுரத்தில் அதிகளவில் 112 சம்பவங்கள் நடந்துள்ளன. இதிலும், அரசாங்க சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த சம்பவங்களே அதிகமாக உள்ளன.

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிகளும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சில பகுதிகளில் குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு சார்பாக பிரச்சாரம் செய்ய தூண்டப்பட்டதாக பவ்ரல் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி கூறினார்.

ஆரம்பத்தில் சட்டவிரோத பிரச்சாரங்களை குறைப்பதில் ஆர்வமாக ஈடபட்ட பொலிஸாருக்கு பவ்ரல் அமைப்பு நன்றி கூறியது. எனினும், இறுதிக் காலங்களில் இவர்களின் உற்சாகம் குறைந்து போனதாக கூறியது.

ஆதரவு திரட்டுவதற்காக இனம், மதம், ஜாதி என்பவை பயன்படுத்தப்பட்டபோதும் அவ ற்றை நிரூபிக்க முடியாது. ஆயி னும், தேர்தலுக்கு ஆதரவு திரட்டும் முறையின் தர்மம் என் பது கேள்விக்குறியதாக உள்ளது என அந்த அமைப்புக் கூறியுள் ளது.

தேர்தல் தினத்தன்று கண்காணிப்பு பணியில் பல வாகனங்களும் 20 ஆயிரம் பேரும் ஈடுபடுத்தப்படுவர் என இந்த அமைப்பு கூறியது.

தேர்தல் வன்முறை கண்காணிப்பு அமைப்பின் தலைவர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, வடமத்திய, சப்ரகமுவா மாகாணங்களில் வாகனங்களில் நடமாடும் குழுக்கள் செயற்படும் எனவும் கிழக்கில் பல அணிகள் செயற்படும் எனவும் கூறினார்.

# யாழ்.மக்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த ஒரு புதிய நிறுவனம் உதயம்

சி. பாமினி

யாழ்.மக்களுக்கு ஆங்கில அறிவு மிகவும் தேவையான ஒன்று, இதனால்தான் நாம் யாழ்ப்பாணத்தில் உலகளவில் மிகவும் பிரசித்தி பெற்ற ருமுடீயு மற்றும் பிரபல நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட toelc பரீட்சையினை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம். இப்பரீட்சையானது online மூலமாகவும் இடம்பெறுகின்றது. இப்பரீட்சையின் முடிவுகள் பரீட்சை எழுதி ஏழு நாட்களுக்குள் வெளியிடப்படும். இப் பரீட்சையின் O/L, A/L மாணவர்கள் பங்குபற்ற முடியும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புலமை பரிசில் திட்டமும் வழங்கப்படும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள Knowiedge merchadising என்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற ஊடகவியாலளர் சந்திப்பில் உரையாற்றுகையில் அந்நிறுவன முகாமையாளர் ஜெ.விவேகானந்தன் குறிப்பிட்டார்.

Knowiedge merchadising இலங்கை மற்றும் ருமு இல் தொழில் வாய்ப்பு பெற இருப்பவர்கள் மற்றும் தொழில்துறை அபிவிருத்திக்கான ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. Knowiedge merchadising இலங்கையில் தொழில் சார்ந்த பரீட்சைகளை முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட வுள்ளது.

TOEIC பரீட்சைகள் உலக-ளவில் மிகப் பிரசித்திபெற்ற பரீட்சையாக விளங்குவதுடன் UKBA மற்றும் பிரபல நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

TOEIC என்பது Test of english international ஆகும். இது ஒவ்வொருவருடைய Elglish level ஐயும் அறியக்கூடிய ஒரு பரீட்சை முறையாகும். இதுவொரு சர்வதேச மட்டத்திலான அங்கீகாரம் பெற்ற ஒரு பரீட்சை முறையாகக் காணப்படுகின்றது. இந்தப் பரீட்சை முறை சர்வதேச மட்டங்களில் வேலை புரிவோர், கற்கை நெறிகளை மேற்கொள்வோர் மற்றும் ஆங்கில அறிவை மென்மேலும் மேம்படுத்த முனைபவர்களுக்காக ஒரு பரிசோதனை முறையாகக் காணப்படுகிறது.

# துப்பாக்கி: ஒருவர் கைது

துப்பாக்கிகள் இரண்டினை தம் வசம் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்படுள்ளார்.

இவர் வலிப்பிட்டிய, தள்கஸ்வத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒன்பது மில்லி மீற்றர் துப்பாக்கி ஒன்றும் ரி - 56 ரக துப்பாக்கி உருண்டைகளும் ரிவோல்வர் ஒன்றும் இதன்போது பொலிஸரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாத்தளை இராணுவ முகாம் வீரர்கள் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தேர்தல் ஆணையாளர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம்

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல் அலுவலகத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, மட்டக்களப்பிலுள்ள உதவித் தேர்தல் ஆணையாளரை சந்தித்த ஆணையாளர் தேசப்பிரிய, தேர்தல் நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடினார்.

இதனையடுத்து தேர்தல் ஆணையாளர் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டார். கிழக்கு மாகாண சபை தேர்தல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் ஆணையாளர் மட்டு., அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, எதிர்வரும் சனிக்கிழமை கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தல் நியாயமான முறையில் நடைபெற வேண்டுமெனவும் வன்முறைகள் இங்கு அதிகரித்திருப்பதாகவும் சம்பந்தன் எம்.பி.தேர்தல் ஆணையா ளரிடம் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க வேட்பாளர் மஹ்ரூபின் வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு

கிழக்கு மாகாண சபை தேர்தலில் திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை வேட்பாளர் எம்.ஏ.எம். மஹ்ரூபின் வீட்டிற்கு இனந்தெரியாதோரால் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கிண்ணியாவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீசப்பட்ட இக்கைக்குண்டு வீட்டிற்கு முன்னால் உள்ள மரமொன்றில் பட்டு கிழே விழுந்து வெடித்துள்ளது. இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கிழக்கில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் வன்முறைகள் அதிகரித்திருப்பதாக கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளனர்.

# டெங்கு: சிறுவன் உயிரிழப்பு

யாழ்.வடமராட்சிப் பகுதியில் டெங்கு நோய்த் தாக்கம் காரணமாக சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

யாழ்.துன்னாலை கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த நாகேந்திரன் தனுசன் (வயது 16) என்ற சிறுவனே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 3 மாதங்களாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை உயிரிழந்துள்ளதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்



### திருமதி தில்லைநாதன் கமலாசனி (ராணி)

நீராவியடி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் கமலாசனி நேற்று 06.09.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இரத்தினம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை தில்லையம்மா தம்பதியரின் மருமகளும், தில்லைநாதனின் (சிவம்) பாசமிகு மனைவியும், காயத்திரி, துஷியந்தன் (தொழிநுட்ப உத்தி யோகத்தர் (Acces Pvt. Ltd.) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகேந்திரன் (தொழில் உத்தியோகத்தர் தொழில்த் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஜனந்தினி (ஆசிரியை கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், புருஷோத்தமன், நியந்த்ரி, பபிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காஞ்சென்ற பத்மநாதன், செல்வராணி, கிருஷ்ணகுமாரி (குஞ்சு) ஆகியோரின் சகோதரியும், பத்மாதேவி, சின்னத்தம்பி, பாலச்சந்திரன், கனகேஸ்வரி, அழகேஸ் வரி, சர்வேஸ்வரி, கயிலைநாதன், இராமநாதன், அற்புதநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.09.2012 வெள்ளிக் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று யாழ்.கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
கணவர், தா.தில்லைநாதன் (சிவம்)
கல்லூரி ஒழுங்கை,நீராவியடி, யாழ்ப்பாணம்

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 62 பேர் பிணையில் விடுதலை

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக படகுகள் மூலம் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 62 பேரை தலா 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஏ.எம்.என்.பி.அமரசிங்க நேற்று அனுமதியளித்தார்.

அத்துடன், பிணை வழங்கப்பட்டவர்களின் கடவுச்சீட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இவர்களை சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல உதவியதாகக் கூறப்படும் 7 பேரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பிணையில் விடுவிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக படகுகள் மூலம் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்த 69 முன்னர் பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

# யாழ்.நகர அபிவிருத்தி தொடர்பில் நேற்றுக் கலந்துரையாடல்

யாழ்.நகரத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட அர்ச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற அந்தக் கலந்துரையாடலில், யாழ்.நகரத்தின் மையப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள், புல்லுக்குளம், வண்ணைக் குளம், ஆரியகுளம், கன்னாதிட்டி குளம், தேவரிர்குளம் ஆகிய முக்கியமான இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திகள் பற்றியும் அப்பணிகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் யாழ்.கோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய பூங்காவின் நிர்மாணப் பணிகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டுள்ளதுடன் அந்தப் பணிகளை எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இக்காணியில் தற்போது நெடுந்தூர தனியார் பேரூந்து நிலையம் உள்ளதால் இந்த பேரூந்து தரிப்பிடத்தை வேறு இடத்திற்கு மாற்றுவது தொடர்பாகவும் இதற்கு நில வாடகை மற்றும் பாராமரிப்புக் கூலியாக மாதம் ஒன்றுக்கு 100,000 ரூபாவை தருமாறு மாநகரசபை தனியார் போக்குவரத்து சங்கத்திடம் கோரிக்கையுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் இதற்கான பதிலை வழங்குவதாக தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

# ஆங்கில மொழியில் பெரியபுராணம்

## – லண்டன் ஆங்கிலேய அறிஞரின் அரும்பெரும் பணி

கிறிஸ்தவர்களின் சமய நூலான விவிலிய நூலை தமிழில் மொழி பெயர்த்த பெருமைக்குரியவராக சைவத்தமிழ் அறிஞர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விளங்கினார். அதுபோலவே, சைவ மக்களுக்குரிய திருவாசகம் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகுக்கு அளித்த வண.பிதா ஜி.யு.போப் உலக மக்களது பெருமதிப்பை பெற்றுத் திகழ்ந்தவர். இந்த வரிசையில் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் நூலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது என்பது சிலருக்குத் தெரிந்திருந்தாலும், பலர் அறியாமலிருக்கலாம். இந்தப் பெரும் பணியைச்




செய்திருப்பவர்தான் றொபின் அலஸ்ரேயர் மக்கிலாஷன். தமிழ் மொழியிலும் மிகவும் தேர்ச்சியுள்ள ஆங்கிலேயரான இவர் லண்டன் மாநகரைச் சேர்ந்தவர். இவர் தனது 79ஆவது வயதில் அண்மையில் காலமானார்.


றொபின் அலஸ்ரேயர் மக்கிலாஷன் ஒரு அங்கிலிக்கன் மதபோதகர். மனோதத்துவ ஆய்வாளர். இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் புராதன இலக்கியத்திலும் இறையியலிலும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றவர். இவர் அறுபதுகளில் இந்தியா சென்று தமிழ் நாட்டிலுள்ள கிறிஸ்தவ வேதாகம கல்விச்சாலையொன்றில் பத்து வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். அந்தக் காலகட்டத்தில்தான் இவருக்கு தமிழ் மொழியிலும், தமிழ்க் கலாசாரத்திலும் பரிச்சயமும், தொடர்ந்து அவற்றில் ஆர்வமும் தீவிர பற்றும் ஏற்பட்டது. இவர் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் பல்வேறு தேர்ச்சி பெற்ற தமிழ் அறிஞர்களினதும், ஆசிரியர்களினதும் உதவியுடன் தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் கற்றார். தமிழ்மொழி தேர்வுகளில் தோன்றி, அவற்றில் சித்தியடைந்ததோடு, தமிழ் மொழியில் தேர்ச்சியும், பாண்டித்தியமும் பெற்றார்.

அந்த வேளையில், தேர்வுக்காக தன்னை தயார்படுத்தும் போதுதான், அங்கு ஒரு பாடப் புத்தகமாகவிருந்த பெரியபுராணத்தை இவர் படிக்க நேர்ந்தது. இவர் கிறிஸ்தவ சமயத்தை சேர்ந்தவராக இருந்தபோதிலும், பெரியபுராணத்தில் பொதிந்திருந்த நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு, அந்த சிவனடியார்கள் இறைவன் மீது செலுத்திய பேரன்பின் வெளிப்பாடுகள், அற்புத நிகழ்வுகள் என்பன இவரை பெரிதும் ஈர்த்தன. கிறிஸ்தவரான இவர் இறையியலை கற்றவர் என்பதால் சமய அடியார்கள் இறைவன் மீது வைத்திருந்த பக்தியுணர்வின் மேம்பாட்டுத் தன்மையை பெரியபுராணத்திலிருந்து வாசித்தறிந்து கொண்டதனால், அது இவருக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.
அதன் காரணமாக பெரியபுராணப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இவர் இந்தியாவில் தனது படிப்பை முடித்துக்கொண்டு இங்கிலாந்து திரும்பிய பின்னர் மொழிபெயர்ப்பு முயற்சியைத் தொடர்ந்தார். இதன்விளைவாக பெரிய புராணத்தின் 4281 செய்யுள்களை அழகான நடையில் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து "The History of the Holy Servants of Lord Siva - A Translation of the Periya Puranam of Cekkilar" என்ற பெயரில் 417 பக்கங்களைக் கொண்ட சிறந்த நூலாக 2006ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

இந்த மொழிபெயர்ப்பு நூலானது பக்தி இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, நமது நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இளந் தலைமுறையினருக்கும் (தமிழில் போதிய தேர்ச்சியின்னை காரணமாக பெரிய புராணம் நூலை தமிழில் படிக்கும் வாய்ப்பை இழந்திருந்தாலும்) பெரிதும் துணையாக இருக்கிறது என்று சொல்லலாம்.

றொபின் மக்கிலாஷன் உலக சைவப் பேரவையினால் நடத்தப்பட்டுவந்த அனைத்து சைவ மாநாடுகளிலும் கலந்து கொண்டுள்ளார். 2007ஆம் ஆண்டில் சுவிற்சர்லாந்து சூரிச் நகரில் நடைபெற்ற 11ஆவது உலக சைவ மாநாட்டின்போது பேரவையினால் இவருக்கு "சிவதொண்டன்" விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.
தமிழ் இலக்கியம் மற்றும் சைவ சமயம் தொடர்பான நிகழ்வுகளின்போது இவர் பேச அழைக்கப்படுவதுண்டு. அப்போது தமிழிலேயே பேச ஆரம்பிப்பார். பின்னர் சரளமாகப் பேச வேண்டும் என்பதால் ஆங்கிலத்தில் தொடருவது வழக்கம்.



விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா.

என்னால் தொகுத்து வெளியிடப்பட்ட நந்திக் கொடியின் முக்கியத்துவமும் பெருமைகளும் என்ற நூலுக்கு

மக்கிலாஷன் வழங்கிய அணிந்துரையில் அரிய பல கருத்துக்களை எடுத்துச்சொல்லி என்னைப் பாராட்டியிருந்தமை எனது பணிக்கு உந்து சக்தியாக அமைந்திருந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருகிறேன்.

இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்தவரான – ஆங்கில மொழியை தாய்மொழியாகக் கொண்டவரான கிறிஸ்தவ மதத்தவரான றொபின் மக்கிலாஷன் சைவத்தமிழின் பெருமையை உலகறிய ஆற்றிய இத்தகைய சிறப்பான சேவையை சைவ உலகம் நன்றியுடன் மதிப்பதுடன், இது ஒரு வரலாற்றுப் பதிவாகவும் அமைகிறது.

# அறிவுச் சமுதாயத்தை உருவாக்கும் வாசிப்பு

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான். அவனது அறிவு விருத்தியடைகின்றது. புதிய சிந்தனைகளுக்கும் கருத்தாடல்களுக்கும் வழிசமைப்பனவாகவும் வாசிப்பு விளங்குகின்றது.

ஆயினும் இன்றைய காலப்பகுதியில் வாசிப்புப் பழக்கம் அருகிச் செல்வதாகவும் அந்த நிலையில் கல்விப்புலம் வீழ்ச்சியடைவதாகவும் பலரும் கருத்துப் பகிர்வதினை அறியக் கூடியதாக உள்ளது.
வாசிப்புத் தளம் என்பது பாடசாலைகள் ஊடாக ஊட்டப்பட வேண்டியதென்பதும் பலரது கருத்து நிலையாகும்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு இவ் வாசிப்பு நிலையினை ஊட்ட வேண்டியது ஆசிரியர்களது தலையான பணியாகும். இது மாணவர்களுக்கு ஆர்வத்தினை கிளறிவிடும் பட்சத்தில் அவர்களிடையே அநுபவகிளர்ச்சி ஏற்படுவது இயல்பானதாகிவிடும். ஆயினும் பல ஆசிரியர்கள் இப்பணியினை மேற்கொண்டு வருகின்ற போதிலும் சிலர் இது விடயத்தில் எதுவித அக்கறையையும் கொண்டிருப்பதில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது என புத்திஜீவிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.


வாசிப்பு நிலைக்கான தளவெளிகளாக வகுப்பறைகள்,

வாசிப்பினை மேம்படுத்துவதற்கு நூல்கள், தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என பல காணப்படுகின்றன.
இவை மூலம் பாடப்புத்தகங்களினை மனனம் செய்வதினையும் தாண்டி வாசிப்பு நிலைக்கு உட்படுத்தப்பட வேண்டும். நிறைய வாசிப்பதில ஈடுபடும் மாணவனால் விஷயங்களை நன்கு கிரகிக்ககூடிய சூழ்நிலை உருவாகும். இத்தகைய போக்கு வெறும் மனனம் என்பதினை தாண்டி ஆரோக்கியமான சூழ்நிலையினை ஏற்படுத்தும் என்பதும் நிச்சயமாகும்.

பாடசாலை நூலகங்கள், பொது நூலகங்கள் மற்றும் வீட்டுச்சூழல் என விரிந்து செல்கின்ற போதிலும், அடிப்படையான வெளியாக வகுப்பறைகளே காணப்படுகின்றன.

வகுப்பறை வெளிகள் எவ்வளவு தூரம் காத்திரமானதாக தகவமைக்கப்படுகின்றதோ அதற்கேற்பவே அறிவுப் புலமும் விசாலிக்கப்படும் என்பது எதார்த்ததாகும். வாசிப்பு நிலைகளினை சரியான முறையில் திட்டமிட்டு செயற்படுத்தப்படாமல் வெறுமனே காட்சிப்படுத்தல்களுக்காக மட்டும் வாசிப்பு தளவெளிகளினை உருவாக்கி கொள்வதினால் எவ்விதமான பயனும் ஏற்படப் போவதில்லை. இது ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது எனும் செயற்பாட்டிற்கு ஒப்பானதாக மாறிவிடும்.

வாசிப்பினை மேம்படுத்துவதற்கு நூல்கள், தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என பல காணப்படுகின்றன. இவை மூலம் பாடப்புத்தகங்களினை மனனம் செய்வதினையும் தாண்டி வாசிப்பு நிலைக்கு உட்படுத்தப்பட வேண்டும். நிறைய வாசிப்பதில் ஈடுபடும் மாணவனால் விஷயங்களை நன்கு கிரகிக்ககூடிய சூழ்நிலை உருவாகும். இத்தகைய போக்கு வெறும் மனனம் என்பதினை தாண்டி ஆரோக்கியமான சூழ்நிலையினை ஏற்படுத்தும் என்பதும் நிச்சயமாகும்.



வாசிப்பு நிலை தளர்வடையும்போது அந்த சமூகமும் தளர்வடைந்து செல்லும் என்பது எதார்த்ததாகும்.
நூல்களுக்கான பணச்செலவை பெரும் செலவு என்று சொல்வது பொருத்தமானதாகாது.
ஆயினும் நூல்கள் கொள்வனவிற்கு பணம் செலவழிப்பதற்கு பலரும் தயக்கம் காட்டுகின்ற நிலைமை இப்போது இயல்பான தொன்றாக மாறிச் செல்வதினை அவதானிக்க கூடியதாக உள்ளது.

புதிய சஞ்சிகையொன்றினை ஒருவர் விற்பனை செய்தபோது, அதனைப் பார்த்த இன்னொருவர் "இதை நான் ஒருக்காலும் பார்க்கவேயில்லை. இதனை வாங்கி என்ன பிரயோசனம்?" என அச்சஞ்சிகையை வாசிக்காமலேயே கருத்து தெரிவித்திருந்தமை அவரது பிற்போக்குத்தனத்தைக் காட்டுவது மட்டுமல்ல, இப்படிப்பட்டவர்களால் எவ்வாறு இளம் தலைமுறையினரை வழிப்படுத்த முடியும்? என்ற வினாவும் எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

மாணவர்கள் பாடப்புத்தகத்தினை மட்டும் படித்தால் போதும் என சிலர் சொல்லிக்கொள்வதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது. இத்தகைய நிலைமைகள் மாற்றமடைய வேண்டும். நல்ல வாசிப்பின் ஊடாக அறிவுச் செழுமை உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கலாம்.
இது விடயத்தில் வழிப்படுத்த வேண்டியவர்கள் அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஏஸ்.ரி. அருள்குமரன்

# அளவெட்டி, நாகேஸ் தேர்த் திருவிழா



## பரிபாலன சபைத் தலைவர் இதயத்திலிருந்து...



எல்லாம் வல்ல நாராயணப் பெருமானின் பாதவிந்தங்களைப் பணிந்து கொண்டு, ஈழத் திரு நாட்டின் தலையான வடபாகத்தில் அளவைப் பதியிலே அருள்வீசி அமர்ந் திருக்கும் ஸ்ரீ நாகவரத நாராயணர் தலமானது வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களில் ஒன்றாகும். இறந்த பாலகன் உயிர் பெற்றமை, ஆகாயத் தீர்த்தம் பொழிந்தமை, அருட்கவி விநாசித்தம்பிப் புலவருக்கு அருள்வாக்கு அளித்தமை முதலான இன்னோரன்ன அற்புதச் சிறப்புமிக்கது இத்தலம்.

கடம்பமர நிழலில் நாகதம்பிரான் எனக் கோயில் கொண்ட இறைவன் அருட்கவியை ஆட்கொண்டு சிறு கோயிலாகி பின்னர், இரதம் ஓடும் ஆலயமாகப் பரிணமித்து விளங்குகின்றது.

"நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டவும் யுகங்கள் தோறும் அவதரிப்பேன்"

இத்தருணம் அன்படியார்கள் அனைவரும் அருள் பெற்று உறுதிபெற வேண்டும் எனவும், நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்க வேண்டும் எனவும் எல்லாம் வல்ல நாகவரத நாராயணப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி அருந்ததி குணபாலசிங்கம்,
ஆலய பொறுப்புரிமைப் பரிபாலன சபைத் தலைவர்,
நாகவரத நாராயணர் தேவஸ்தானம்,
அளவெட்டி.



## அற்புதங்கள் நிகழ்த்திய ஆலய வரலாறு

ஸ்ரீ நாகவரத நாராயணர் வீற்றிருக்கும் நாகேஸ்வரம் முன்பு பற்றைக் காடாயிருந்தது. இக் குறி... தம்பளாவத்தை என அழைக்கப்பட்டது. இப்பகுதிக்கூடாக மக்கள் போக்குவரத்துச் சிறிய சிறிய கால்ந... வழிகளிருந்தன. ஆடு, மாடுகள் இஷ்டப்படி மேய்ந்துத் திரியும் பகுதி.

முற்காலத்தில் இத்தலத்துக்கு தெற்கேயுள்ள மக்கள் வடக்கேயிருக்கும் கீரிமலை– மாவிட்டபுரம் முதல... தலங்களுக்கு மேற்குறிப்பிட்ட கால்நடைப் பாதை வழியாகச் சொல்வார்கள்.

கீரிமலை– ஆடி அமாவாசைத் தீர்த்தமாடுவதற்கு இரவிரவாக நடந்து செல்வார்கள். ஒரு தினம் கூட்... கூட்டமாகச் சென்றவர்களில் ஒருவரின் ஒன்பது வயதுச் சிறுவன் வழியைத் தவறவிட்டான். பி...ம் மக... வருகிறான் என்று மற்றவர்களுடன் போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மகன் தன்னைப் பிரிந்துவிட்ட... என்று தெரிந்து மக்கள் கூட்டத்துள் தேடினார். பயனளிக்கவில்லை. உடன் வந்தவர்கள் அங்கும் இங்கு... தேடினார்கள். சிறுவன் பற்றைக் காடெல்லாம்மிகுந்த இருளில் அப்பா! அப்பா! என்று கத்தித் திரிந்தா... நாவறண்டு விட்டது. சோர்ந்து ஒரு மரத்தடியில் இருந்து விட்டான். அது வாகை, நுணா, நாவல் மூன்... விருட்சமும் சேர்ந்த இடம். அப்போது ஒரு பெரியவர் வந்தார். "மகனே அழாதே, உனது அப்பாவிடம் யான் கூட்... சென்று ஒப்படைப்பேன் " என்று கொஞ்சம் அவலை உண்ணக் கொடுத்துத் தண்ணீரும் பருக வைத்த... மெல்லக் கூட்டிச் சென்று சிறுவனின் பிதாவிடம் ஒப்படைத்து மறைந்து விட்டார். யாவரும் அதிசயப்பட்டனர். பி... சிறுவனும் பிதாவும் தீர்த்தமாடிவிட்டு வீடு திரும்பினர். வருகின்ற போது, தான் ஓடி அலைந்த இடங்கள், தங்... இடம், பெரியவர் அவல் கொடுத்த இடம் யாவற்றையும் சிறுவன் பிதாவுக்கு காட்டிய வண்ணம் வந்தா... வழக்கமான வழியிலிருந்து சுமார் 300 யார் தூரத்தில் அந்த இடங்கள் அமைந்திருந்தன. உடன் வந்தவர்கள் யாவரும் குறிப்பிட்ட இடத்தை மிக்க ஆர்வத்துட... தேடினார்கள். பார்த்தார்கள் என்ன அற்புதம். சிறுவன் தங்கிய இடம் பெரிய பாம்பு புற்றுள்ள இடம். அங்கேதான் பெரியவர் வந்து அவலும் தண்ணீரும் கொடு... நிகழ்ச்சி நடந்தது. யாவரும் காணும்படியாகப் புற்றிலிருந்து இரண்டு பாம்புகள் வெளிப்பட்டுக் காட்சி காட்டி மறைந்து விட்டன. எல்லோரும் இது நாகதம்பி...னின் இடம் என்று வழிபட்டுச் சென்றனர்.

காலகதியில் இவ்விடம் சிறு ஆலயமாக மாறியது. (இது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்) இதன் பக்கத்தில் கால் நடைகள் தண்ணீர் குடிப்பதற்கா... தர்ம சிந்தனையாளர் ஒரு கேணியை வெட்டி விட்டார். அதனால் "கேணியடி நாகதபிரான்" என்றும் பெருமான் அழைக்கப்பட்டார். ஆவணி ரோகிணியில் விசே... பொங்கல் பூசை செய்து வந்தனர். பூசைக் காலம் பெரிய பலகார மடைகள் வைப்பார்கள். பஞ்சாராத்தி காட்டும் நேரம் மடைகளுக்கு இடையே இரண்... பாம்புகள் காட்சி காட்டிச் செல்வது வழக்கம். இக் காலத்தில் இவ்விடத்தில் பொங்கற் காலம் மாத்திரம் பந்தலிட்டுப் பூசை செய்வார்கள். ஒரு வைரவ சூல... ஒரு செம்பினால் செய்த பாம்பின் உருவம், ஒரு முக்கோணக் கல் இவை நிலத்திலேயே இருக்கும். இடையிடையே மக்கள் வந்து கும்பிடுவார்கள். இர... வேளையில் பெரிய தீச்சுவாலை தெரியும். இதனால் சிலர் கேணியடி முனி என்றும், சிலர் கேணியடி சோதி வைரவர் என்றும், சிலர் நாராயணராகி... நாகதம்பிரான் என்றும் வழிபட்டார்கள்.

(தொடர்ச்சி IV ...ம் பக்க...

நாடுவார்க்கருளும் ஞானவாரிதியே!
றூபா.பன்முக
வர்த்தக நிலையம்
இல. 104A , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளர்படை முன் தேரேறி
கீதை சொன்ன மாயவனே!
மருந்து மற்றும் அபிஷேக பொருள்கள்
க.செ.கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
76, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

நாகவரத நாராயணர் ர...
ஆரோகணித்திட...
சர்வார், சாரி, திருமணப் பட்டு...
சிவகணேச...
டெக்ஸ்ரயில...
41, பெரியகடை வீதி, யாழ்...

நாகவரத நாராயணர் நானிலத்தே தேரேறி வருக!
பட்டுப் புடைவை, ரெடிமேற் உடைகள்
மங்கை சில்க்ஸ்
08, நவீன சந்தை, சுன்னாகம்.

எம் பெருமானே போற்றி!
இலட்சுமி நாதா போற்றி!
லிங்கம் கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நாகத்திலாடும் நந்தா, கோ...
சுத்த சைவ சிற்றுண்டி, உண...
குகானந்தபவ...
[உரிமையாளர்: ஐ.குணரத்தினம்], அ...
789, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு சந்...

நினைவுவரமுன் வருநாகேஸ்வர நாகவரத நாராயணரே!
கரிகணன் பிரின்டேர்ஸ்
424, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.நகரில் மக்க...
மொத்த, சில்லறை...
எஸ்.வி.முருகே...

# ...ஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர்
# ... சிறப்புமலர்- 07.09.2012



## இரதமேறி அருள்புரிவீர் நாகவரத நாராயணா

அருட்கவியை ஆட்கொண்ட நாராயணா
அவலுண்டு குலம்காக்கும் நாராயணா
திருசெகமா துடனாட நாராயணா
திகழ்சிலம்புக் கண்ணசைய நாராயணா
சங்குநேமி தண்டொலிப்ப நாராயணா
சஞ்சலங்கள் தீர்ப்பதற்காய் நாராயணா
ஆவணி ரோகினி அட்டமி நாள் நாராயணா
ரதமேறவை நாகவரத நாராயணா!

திருமதி வ.ஜெகசூரியர்.

## தொண்டர் சபைத் தலைவரின் செய்தி

ஈழ மணித்திருநாட்டின் வடபால் அமைந்து நீர் வளமும் நில வளமும், இசையும், கலையும் ஒருங்கே அமைந்த அளவையம்பதியில் நாகேஸ்வரத்தில் நம்பி வரும் அடியவரின் கொடிய வினை தீர்க்கும் இறைவனாக ஸ்ரீ நாக வரத நாராயணன் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

அடியார்கள் கூடி நின்று தூய வடம் பிடித்து அவனருளைப் பெற ஆலயத்தில் கூடும் இந்நாள் பொன்னாளாகும். அளவெட்டிக் கிராம மக்கள் மட்டுமல்லாமல் அயல் கிராம மக்களும் நாடித் தேடிவந்து வணங்கும் அற்புதம் மிக்க இறைவன். இறைவனின் ஐந்தொழில்களில் அழித்தல் என்னும் சம்ஹாரத் தொழிலைக் குறித்து நிற்பதே இந்த இரதோற்சவமாகும்.

இந் நன்னாளிலே இக்கோயில்களைக் காலம் காலமாக நல்ல முறையில் கட்டிக் காத்து சமாதி நிலை அடைந்திருக்கும் அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் அவர்களை இவ்வேளை நன்றியோடு நினைவு கூர்ந்து இந்த இனிய நாளில் அடியார்கள் பாடிப் பரவி கும்பிட்டு கூத்தாடி வணங்கி இரதோற்சவக் காட்சியைக் கண்டு உடல்பிணி, உளப்பிணி நீங்கி உலகில் அமைதியும் சமாதானமும் வேண்டி நாராயணப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

– ம.பத்மநாதன்

தொண்டர் சபைத் தலைவர், ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்.

## எப்போ இந்நிலை தேறும்?

மழை மேகமில்லை இடி இடித்தது!
மேகத்தை நிமிர்ந்து பார்த்தேன்
விளை வெதுமில்லா வானம் திகழ்ந்தது!
வழியது தோறும் சரசரப்பு!

முதன் முதலாக நாகவரத நாரணர்
மலரை தயாரிக்கும் நோக்கில்;
அதன் ஸ்தாபகர் அருட்கவி ஐயாவை
அடுக்குப் படுத்தப் போயிருந்தேன்!

ஆலய சூழலை அண்மித் தவேளை
அடியேன் அடைந்த அற்புதம்!
வேலி ஓரங்களில் சரசரத் ததென்ன
வரதரவர் அரவங்க ளாமோ?

தெய்வ நம்பிக்கை தேய்ந்தி ருந்தவன்
தெளிய வைத்த நாகேஸ்வரம்!
மெய்யா அன்றிலிருந்து மலர் தயாரிப்பு
மறந்தும் விடாமல் தொடர்கிறேன்!

அருட்கவி மறைந்து ஆண்டும் ஏழானது
அவ்வப்போ ஆலயம் போவேன்:
பொருட்டிலை அன்று கண்டதில் இன்றும்
பெரிதாக மாற்றம் காணேன்!

அவருயிரோ டிருந்த காலங்க ளெல்லாம்
ஆலயம் நாளோர் பொழுதாக
தவப்பல னாகவே வளர்ச்சி கண்டோம்
தகுநிலை எப்போ வரக்கூடும்?

மாஸ்டரை பார்க்கப் போனால் மதியம்
மறைந்து பின்னே ஏகும்!
காஸ்ய வெடிகள் உதிரும் வாய்மொழி
காத்திரு பஞ்சி தோன்றா!

முதலில் அவரிடம் மங்களம் கேட்போம்
மெதுமெது வாகவே பேச்சில்:
இதமது தோன்றும் இடுந்நீறு நூலதாலே
இடைஞ்சல் தீர்த்து தவுவாரே!

அவரிரு அறையும் ஆலய வீதிகளும்
ஆரவார மின்றி வெறிச்சோடி:
எவரும் பெரிதாய் இல்லாமல் காண்கிறது!
எப்போ இந்நிலை தேறும்?



-மூலபாரதி.


... ரதமதில்
...!
...டுப் புடைவைகள்
...சன்
...ல்ஸ்
...ழ்ப்பாணம்.

உள்ளமாங் கோயில்
உறைந்திடு முகுந்தா!
ஏற்றமிகும் ஜவுளிகளின் காட்சியகம்
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உள்ளமாங்கோயில் உறைந்திடும் முகுந்தா!
வசந்திஜா எலெக்ரிக்கல்ஸ்
100, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

அளவை ஸ்ரீ நாகவரத நாராயணர்
தங்கத் தேரேறி வாரீர்!
க.கு.கந்தையாபிள்ளை அன் சன்
318 (124) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

...கோவிந்தா!
...னவுகளுக்கு
...வன்
...அளவெட்டி மேற்கு.
...ந்தி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ நாகவரத நாராயணரே போற்றி!
சகல விதமான படப்பிடிப்புகளுக்கும்
சாயி போட்டோ
1010/11, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

பாற்கடல் நடுவே பள்ளி கொள்பவனே!
இளவரசி சேலைச்சோலை
(பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்)
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

...கள் நாடும் மகத்தான
...ற வியாபார நிறுவனம்!
...கு 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அடியார்க்கு இரங்கும் அரங்கா போற்றி!
அந்தியகால சேவையின் நண்பன் கிளின்ரன்
548, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 3518

# அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர்
# தேர்த் திருவிழா சிறப்புமலர்- 07.09.2012

## அற்புதங்கள் நிகழ்த்திய...

(II, III ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் கண்ணன் ஆவதாரம் செய்த தினமாகிய ஆவணி ரோகிணி, கிருஷ்ண ஜெயந்தியில் பொங்கல் செய்வார்கள். திருவருள் உத்தரவுப்படி இத் தலத்தின் பெயர் நாகேஸ்வரம் என அழைக்கப்படுகிறது. முன்பிருந்த மரங்களும், புற்றுகளும் சிதைவடைந்து விட்டன. எம்பெருமான் மழையில் நனைந்தும், வெய்யிலில் காய்ந்தும் காணப்பட்டார்.

ஒருமுறை ஓர் அன்பர் ஓலையால் ஒரு கொட்டில் போட்டார். இக்காணிக்கு உரிமை பாராட்டும் ஒருவர் "எங்கள் காணிக்குள் நீ ஏன் கொட்டில் போட்டாய்" என்று கெட்ட வார்த்தைகளால் ஏசியபடி கொட்டிலைப் பிடுங்கி எறிந்து விட்டார். இப்படிச் செய்த மறுதினம் அவரது பெரிய வீடு திடீரென நெருப்புப் பிடித்துச் சாம்பலானாது. சொத்துக்கள், நெல்லு, வரகு மூடைகள் யாவும் எரிந்தொழிந்தன. அவர் அந்த இடத்தையே விட்டகன்றார். இவரது மனை இவ்வாலயத்துக்கு தென்திசையில் இருந்தது. இவ்வாலயத்தை அடிக்கடி வந்து அடியார்கள் வழிபாடு செய்வார்கள். விஷங்கள், கொடிய நோய்கள் தீருவதற்கு நேர்த்தி செய்து விமோசனம் பெறுவார்கள். எம்பெருமான் ஆண் குழந்தையாகவும் வயோதிபராகவும், அழகிய கன்னிப் பெண்ணாகவும் நேரிலும் கனவிலும் காட்சி காட்டி அடியார்களுக்கு அருள்புரிவார்.

அருட்கவி சீனியர் விநாசித்தம்பி ஆகிய சிறியேன் இல்லத்திற்கு அரை மைல் தூரத்தில் பெற்றோருடன் வாழ்ந்து வந்தேன். அப்போது எனக்கு ஒரு பெண் குழந்தை ஐந்து வயதாகியிருந்தது. தனியாக ஒரு காணி வாங்கி வாழ வேண்டும் என்று விரும்பினேன். இவ்வாலயத்தின் தென் கிழக்கில் ஒரு பழுதடைந்த கல் வீட்டையும் ஐந்து பரப்புக் காணியையும் விற்பதற்கு அதன் சொந்தக்காரர் விரும்பினார். இதனைக் கேள்வியுற்று அவரிடம் சென்று விலை பேசி முற்பணம் கொடுத்தேன். விஷயத்தை என் மனைவிக்கும், எனது பெற்றோருக்கும் கூறினேன். உடனே பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. அந்தப் பேய் வீட்டை வாங்க வேண்டாம் என்றனர். அயலவர்களும் அவ்வாறாக என்னை திகைக்க வைத்தனர். யான் எதுவும் பேசாமல் நித்திரையானேன்.

அன்றிரவு ஓர் அற்புதக் கனவு– பெரிய புற்றிலிருந்து இரண்டு பாம்புகள் எழுந்து படம் விரித்தன. பின்பு அவை இரண்டும் மறைந்தன. உடனே ஓர் அழகிய சிறுவனும் ஓர் அழகிய சிறுமியும் காட்சி காட்டினார்கள். அந்தச் சிறுமி சிறுவனைச் சுட்டிக்காட்டி "இவர் எனது அண்ணன்" என்றாள். பின்பு "நீ பயப்படாதே என்னை ஆதரித்தால் உன்னை ஆதரிப்போம்" என்று அந்தச் சிறுவன் சொன்னான். கண் விழித்தேன். எனது தாயாருக்கு கனவைச் சொன்னேன். எல்லோரும் பரவசப்பட்டனர். "நீ பயப்படாமல் வீடு வளவை வாங்கு" என்றனர்.

சிறியேன் பல காலமாக சிவசக்தியாகிய மனோன்மணி அம்பிகையைக் கும்பிட்டு வந்தேன். ஆகையால் அந்த மனோன்மணியும், ஸ்ரீ நாராயணருமே எனக்குக் காட்சி காட்டியவர்கள் என்று மனம் தேறினேன்.

14.02.1953 இல் வீடு வளவை வாங்கினேன். 09.04.1953இல் குடியிருக்க வந்தேன். வந்த தினமே வீட்டின் சுவாமி அறையில் பெரிய பாம்பு நிமிர்ந்து நின்றது. பின்பு மறைந்து விட்டது. வீட்டுக்கும் கோயிலுக்கும் பொங்கி– வீட்டுப் பிரவேசம் செய்தேன். எம் பெருமானுக்கு ஒரு கோயில் கட்டி பூஜித்தேன். பின்பு மூன்று அடி சதுரத்தில் சிமெந்தினால் ஒரு கோயில் கட்டினேன். கோயிலில் இருந்த காணியையும் விலையாகப் பெற்றுக் கொண்டேன். எம் பெருமாட்டியின் நல் வாக்கால் எனது சோதிடப் பணியும் பிரசித்தமானது. மூத்த பெண்ணுடன் இரண்டு பெண்பிள்ளைகளும், இரண்டு ஆண் பிள்ளைகளும் பிறந்தனர். ஐந்து பிள்ளைகளும் எனது மனைவி அன்னம் என்பவரும் கோயில் பணிகளில் மிகுந்த கரிசனை உள்ளவர்களாயினர். எம்பெருமான் என்னைச் சிறப்பாக காத்து வருகிறார். எம் பெருமானுக்கு பெரிய கோயில் கட்ட வேண்டும் என்று நினைத்தேன். 1969இல் பதினாறு அடி நீளத்தில் கோயிலானது. பின்பு 1979இல் பெரிய கோயிலாகி தூபியுடன் பொலிந்த கோயிலாக்கப்பட்டு 03.09.1979இல் முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 07.08.1986 இல் தேர் உற்சவம் ஆரம்பமாகியது. வருடா வருடம் ஆவணி ரோகிணி கிருஷ்ண ஜெயந்தியில் தேர் உற்சவம் நிகழும். உற்சவத்தில் 10ஆம் நாள் தேர். 11ஆம் நாள் தீர்த்தம், 12ஆம் நாள் திருக்கலியாணமும் நடக்கும். பற்பல நாடுகளிலிருந்து பக்தகோடிகள் வழிபாடு செய்வார்கள்.

தேர்விழாவின் போது ஆண்டவன் பெயரில் வழங்கப்படும் அன்னதானத்தில் பங்கு பற்றி அவரது திருவமுதை உண்ண வேண்டும் என்று பக்த கோடிகள் காத்து நிற்கும் காட்சி மிகவும் தெய்வீகமயமானதாகும்.

பார்ப்போர் உள்ளத்தை குளிர வைக்கும் காட்சியாகும். ஏனைய விழாக்களிலும் பொங்கல் பூஜைகளும், அன்னதானங்களும் நடைபெற்று வருகின்றன.

ஆவணி மகோற்சவம், மாத ஏகாதசித் தீர்த்தம், திருப்பாவை, திருவெம்பாவை, நவராத்திரி, கந்தசஷ்டி, கேதாரகௌரி விரத பூஜை, அபிராமி விழா, வியாழன், ஞாயிறு வார விசேட பூஜைகள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வியாழக்கிழமை தோறும் காலை ஏழு மணிக்கு விசேட பூஜைகள் நடக்கும். ஸ்ரீ மனோன்மணி வாசலில் திருநீறும், நாராயணர் வாசலில் தீர்த்தமும் வாங்குவதற்கு அடியார்கள் அணி வகுத்து நிற்பார்கள்.

### இரதம் ஏறிடும் மாதவன்

குண்டலம் இரண்டோடு குவிந்தசடை முடிமிளிர
குளிர் கமலவா யரும்ப
குலவுகௌத் துவமணியும் துளசிமணி மாலைகளும்
கோலமார் பினில் விளங்க
தண்டுகம லம்திகிரி சங்குநாற் கரமேவித்
தண்ண ருள்மழை வளங்க
சாந்தமங் களநீல வண்ணனாய்த் திருமகள்
தழுவு வலமும் புவனியாள
கொண்டிடம் திகழவும் பண்டு அரவ மாய்அளவை
கூடுநா கேஸ் வரத்தின்
கோயிலுறை அரிநாக வரதநா ராயணா
குறை நீங்கும் கண் ணழகனே
வண்டுறையும் நின்பாதமல ரிணையைஎம் தலையில்
வைத்து இன்பவாழ்வு தருவாய்
மன்னுமாவணி கிருஷ்ண ஜயந்திரதம் ஏறிவரும்
மாதவ மகா தேவனே!

### நாகவரத நாராயணன் அருட்புகழ்

வேகஉலகில் வீணா யுழைத் தலையாதே
பாகினிய பாதாரமுத் திரை தாராய்
ஆகமமறை யாதார தத் துவகீதா
நாகவரத நாராயணப் பெருமாளே!

### நாகத்தில் ஆடிநின்ற பெருமாளே!

ஈனத்தி லேபிறந்து புவி மீதே
ஏதுக்க ளாலலைந்து திரி நாயேன்
தானத்தி லேசிறந்த பத யோகம்
சாதித்தே னாவியின்ப முறு வேனோ!
வானத்தி லேபறந்து வரு வோனே
வாரிக்கு ளேதுயின்ற நெடு மாயா
ஞானத்த னேகுழந்தை வடி வோனே
நாகத்திலாடி நின்ற பெருமாளே!

## வைணவ கோயில் நடைமுறைகளில் ஒன்றான அரையர் சேவை

வைணவ திருக்கோயில்களில் நடைபெற்ற ஒரு குறிப்பிட்ட நாடகமே அரையர் சேவை. நாதமுனிகள் என்பவரால் அறிமுகம் செய்யப்பட்ட இவ்வகை நாடகம் கி.பி.12ஆம் நூற்றாண்டில் மிகப் பிரசித்தி பெற்றிருந்தது. அந்நாடகங்களுக்கு கதைக் கருக்கள் வைவப் புராணங்களில் இருந்து எடுக்கப்பட்டன. அந்நாடகங்களை நடத்தும் அரையர் வைணவத் திருக்கோயில்களை நிர்வகிக்கும் வாரிசுரிமை பெற்றவர்கள் எனும் பெருமை கொண்டவர்கள். இரானுஜயரின் மேற்பார்வையில் ஏறத்தாழ பதினான்கு கோயில்களில் பல்வேறு நிர்வாகப் பொறுப்புக்கள் இவர்களிடம் இருந்துள்ளன. திவ்வியப்பிரபந்தத்தை இசைவடிவிலும் அபிநயவடிவிலும் மக்கள் மத்தியில் பிரபலமடைய செய்ததே இவர்கள் வைணவத்திற்கு ஆற்றிய மாபெரும் சேவை. மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் சூழ்நிலைக்கேற்றாற் போல் சொல்லாற்றலும், சைகை மொழியும் அவர்களது தனிச்சிறப்பு.

திருவத்தியன் உற்சவ காலத்தில் ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரத்தை இசையுடனும், அபிநயத்துடனும் வீதியுலாவின் போது கடவுளின் முகத்தை பார்த்த வண்ணம் உற்சவ மூர்த்தியின் முன் உற்சவ காலத்தில் ஆடப்படும்.

தோன்றிய விதம் பற்றி நோக்கும்போது திருக்கார்த்திகை திருவிழாவின் போதும், திருமங்கை ஆழ்வாருடைய பாசுரமான திருநெடுந்தாண்டகத்திற்கு அபிநயம் செய்து பாடும் போதும், பெருமாளுடைய மார்கழி மாத சுக்கிலபக்' ஏகாதசி அன்று அத்தியாயன உற்சவம் நிகழும் போதும், நம்மாழ்வார்களுடைய திருவாய்மொழி கேட்டருளி இவற்றையெல்லாம் ஏற்றம் அருள்வீர் எனப் பிரார்த்தித்தனர்.

நிகழ்த்தப்படும் முறை பற்றி நோக்கும் போது தாளம் தட்டி ஆடுவர். அறுதி, ஜதி, கால அசைவு, அங்க அசைவு என்பன காணப்படும். தாளம் மட்டுமே பயன்படுத்துவர். ஆனால் பள்ளுப்பாட்டின் போது மிருதங்கம் பாவிப்பர். அரையர்கள் முதலில் தாளத்தை தட்டி கொண்டாட்டம் சொல்லி அன்றைய பாசுரத்தைப் பாடி ஆடுவர். கொண்டாட்டம் என்பது இறைவன் புகழ் பாடல். பெருமாள் பாடல், பெருமாள் கொண்டாட்டம், நாச்சியார் பாடல், நாச்சியார் கொண்டாட்டம். கொண்டாட்டத்தில் பண், உரை, அபிநயம் மூன்றும் உள்ளன. பாடல் முடிந்தவுடன் தாளத்தை உடையில் செருகி பின் நடனம் ஆடுவர். தம்புரான்பாடி மற்றும் ஏடுகளிலிருந்து எடுத்தாளும் இவர்களது சொற்பெருக்கு மணிப்பிரவான நடையில் அமைந்திருக்கும். இவர்கள் இசைக்கும் தேவகானம் சாதாரண மனிதர் இசைக்கும் இசைப்பாடல்களில் இருந்து வேறுபட்டு இருக்கிறது. பாடல்களுக்கும் தாளகதிக்கும் ஏற்ற முறையில் அரையர் தங்களது எளிய அங்க அசைவுகள் மூலம் ஈடுகொடுத்துள்ளனர். இம்முயற்சியில் தகவலை வெளிப்படுத்துவதில் தங்களுக்குள் ஒளிந்திருந்த திறமையைக் கண்டறிந்தனர். அதாவது தகவல் வெளிப்பாட்டிற்கு அங்க அசைவுகள் போதும். வாய்மொழி தேவையற்றது என்ற உண்மை புலப்பட்டது. அபிநயம் என்பது தனக்கே உரிய அசைவுகளும், ஓசைகளும் அடங்கிய அங்க அசைவுகளைக் கொண்ட நுண்கலை என்பது புரிந்தது. ஒலி அலைகளை வேறுபடுத்தவும், வகைப்படுத்தவும் அது பெரிதும் துணை நின்றது. குரல்வளம், குரலின் ஏற்றத்தாழ்வு, குரலின் அளவு, குரலின் செறிவு ஆகிய அனைத்தும் உள்ளடக்கியதும், வெளிப்படுத்துவதுமே சிறந்த அபிநயம். தொடர்பு மொழியில் ஒலிகளே பெரும்பங்கு வகிக்கின்றன. ஆனால் அரையர்கள் மௌனமொழியான அபிநயங்கள் மூலமே வைணவ வேதங்களின் சிறப்பையும், உணர்வையும், ஆன்மீக தத்துவங்களையும் வெளிக்கொணர்ந்தனர்.

ஆடப்படும் நிகழ்ச்சி பற்றி நோக்கும் போது நாதமுனிகள் இசையிலும், யோகாசனத்திலும் வல்லவர். நாதமுனிகள் தன் மக்களுடன் திருவரங்க கோயிலில் மார்கழி அமாவாசை பிரதமை முதல் தசமி வரை பத்து நாட்கள் பாசுரங்களை பகல் வேளையில் அரையர்கள் கொண்டு நடைபெறல் பகல் பத்து ஆகும். இந்த நாட்களில் முதலாயிரம், திருப்பல்லாண்டு, திருமாலை கண்ணினுள், திருத்தாண்டகம், திருப்பாவை, பெருமாள் திருமொழி, சிறுதாம்பு, பெரியதிருமொழி பண்ணுடன் பாடப்படும். அபிநயிக்கப்பட்டு உரை செய்யப்படும்.

மார்கழி மாதம் ஏகாதசி முதல் தசமி வரை இரவில் செய்யப்படுவது இராபத்து எனப்படுகிறது.

சிறப்பாக செய்யப்படும் நிகழ்ச்சி பற்றி நோக்கும் போது ஸ்ரீரங்கத்தில் பகல் பத்தில் 4ஆம் நாள் பிற்பகல் ஹம்சவதமும், 7ஆம் நாள் பிற்பகல் வாமனவதமும், 8ஆம் நாள் பிற்பகல் திருப்பாற் கடலை கடைதலும், 10ஆம் நாள் இராவணவதமும் நிகழ்ச்சியாக செய்யப்படும்.

**செல்வி மேகிலா சிவஞானசுந்தர ஐயர்**

அரையர்கள் ஜரிகைக்கரை கொண்ட பட்டுவேட்டி, உடல் எங்கும் சூடிய மலர்மாலை, சித்திரவேலைப்பாடமைந்த தொப்பி போன்றவை அணிந்து அபிநயம் பிடிப்பர்.

முன்னர் இருந்த பதினான்கு வாரிசுகளில் தற்போது நான்கு வாரிசுகளே இருக்கின்றனர். மேலைக்கோட்டையிலுள்ள திருநாராணயபுரம், ஸ்ரீரங்கம், ஸ்ரீவல்லிபுத்தூர், திருநெல்வேலி அருகே உள்ள ஆழ்வார் திருநகரி ஆகிய இடங்களில் மட்டுமே தற்போது இவர்கள் உள்ளனர். ஸ்ரீவல்லிபுத்தூர் மற்றும் ஆழ்வார் திருநகரியில் வாழும் அரையர் முத்துக்குறி சொல்லும் திறன் பெற்றவர்கள். முத்துக்களை உருட்டிக் குறி சொல்லுவதே முத்துக்குறி எனப்படும். பொதுவாக நாடகத்தில் தலைவி தன் தலைவனான இறைவனுடன் ஒன்றிணையும் நாள்பற்றிக் குறி சொல்லுவதே முத்துக்குறியின் நோக்கம். மிகையான உணர்ச்சிக்கலவைப்பும், நேர்த்தியான நடனங்களும், உயர்வான அபிநயங்களும் இந்நாடகங்களில் சிறப்பம்சங்களாகும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலில் ஓர் ஆண்டில் மும்முறை அரையர் சேவை நடைபெறும். ஆண்டாளுக்கு முத்துக்குறி சொல்லும் அரையர் அவளை, ஸ்ரீரங்கநாதபெருமானுடன் திருமணபந்தத்தில் இணைப்பதுடன் நாடகம் முடிவுறும். ஸ்ரீரங்கம் கோயிலில் அரையர் காலில் சலங்கை அணிந்திருப்பர். தற்காலத்தில் கோயில் தொண்டு செய்து வருகின்ற அரையர்கள் கணிசமானவர்களே இருக்கின்றனர்.

இன்று கிருஷ்ண ஜெயந்தி

# ரோகிணி நன்னாளில் கண்ணன் வந்தான்



காத்தல் கடவுளாகிய மகா விஷ்ணு உலகத்தில் அதர்மம் அழிந்து தர்மம் குன்றுகின்ற வேளையில் அவதாரம் எடுத்து அதர்மத் தையும் அதர்மவாதிகளையும் அழித்து, தர்மத்தையும் தர்ம வாதிகளையும் காப்பாற்றுகின்றார் என்பது பகவத்கீதையின் நாலாம் அத்தியாயம் ஏழாவது சுலோகம் கூறுகிறது. அதற்கமைய மச்சம் முதலாய எட்டு அவதாரங்களை எடுத்த மகாவிஷ்ணு ஒன்பதாவது அவதாரமாகிய கிருஷ்ண அவதாரத்தை எடுத்த நாளே ஆவணி மாதத்து ரோகிணி நட்சத்திரத்தோடு கூடிய அஷ்டமித் திதியாகும். இந்நாள் கிருஷ்ண ஜெயந்தி என வைஷ்ணவ பக்தர்களால் கொண்டாடப் படுகின்றது.

சைவசித்தாந்தம் கூறும் உருவத் திருமேனியில் ஒன்று மகா விஷ்ணு ஆகும். இதனால் சிவாலயங்களிலும் மகாவிஷ்ணு மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுகின்றது. மேலும் கிருஷ்ணனை, குழந்தைக் கண்ணனாக நாகபாம்பு குடைபிடித்து ஆசனம் கொடுத் திருக்கும் சந்தான கோபாலராக எல்லா ஆலயங்களிலும் வழிபடுகின்றனர். புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் சந்தான கோபால மூர்த்தியை அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடாற்றி புத்திர பாக்கியத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

கிருஷ்ணன், தேவகிக்கும் வசுதேவருக்கும் எட்டாவது ஆண்பிள்ளையாக கம்சனின் சிறைக் கூடத்தில் அவதரித்து, சிறையை உடைத்து ஆயர்பாடியில் சென்று யசோதையிடம் வளர்ந்தவன். கொடுமை மிக்க கம்சனையும் காலிங்கன் என்ற பாம்பையும் அழித்ததோடு, சிறுவயதில் பல லீலைகள் செய்தும் வந்தவன். மகாபாரத யுத்தத்தின் சூத்திரதாரியாகவிருந்து அருச்சுனனுக்கே தேரோட்டியதுடன், இனிய கீதா உபதேசத்தையும் நல்கி தர்மநெறியை உலகில் நிலைநாட்டியவன். இதனால் கிருஷ்ண வழிபாடு பல்கிப் பெருகியது. இன்று உலகளாவிய ரீதியில் கிருஷ்ணபக்தி இயக்கம், ஹரே ராம ஹரே கிருஷ்ண பக்தி இயக்கம் என்பன தோற்றம் பெற்றிருப்பதுடன், ஆவணி ரோகிணியில் கிருஷ்ணவழிபாடும் பிரபல்யம் பெற்று விளங் குகின்றது.

ஆழ்வார்களும், தமது திருப்பதிகங்களில் கிருஷ்ணனைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். பெரியாழ்வார், திருமொழியில் குழந்தைக் கண்ணனைப் பல்வேறு நிலைகளில் பாடியுள்ளார். இன்றும் இவரது தாலாட்டுப் பாடல்களை கிருஷ்ண ஜெயந்தியன்று பாடி கிருஷ்ணனைத் தாலாட்டி மகிழ்கின்றார்கள். இதேபோல் கண்ணன் ஆயர்பாடியில் கோபியர்களின் வீடுகளில் தயிர் நெய் திருடித் தின்றவன். இதனை நினைவுபடுத்தும் வகையில் ஆலயங்களில் உறியடி உற்சவமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

கிருஷ்ண ஜெயந்தி நாளில் விரதமிருந்து நாராயணனுக்கு தயிர், வெண்ணெய் படைத்தும் நெய் விளக்கேற்றியும் வழிபாடு செய்வதும், ஆழ்வார்களது நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களைப் பாராயணம் செய்வதும் சிறப்பாக நடந்துவருகிறது.

புத்திர பாக்கியமில்லாதவர்கள் மட்டுமல்ல திருமணமாகாத வர்களும் நாகதோஷம் நீங்க இந்நாளில் விரதமிருந்து வழிபாடு செய்வதும் மேலான பயன்களைத் தரும்.

*- மாவை*
*செ. கந்த சத்தியதாசன்*

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடைய தாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்

**இதுவே உலகின் நியதியும்**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**

**– ஸ்ரீ கிருஷ்ண பகவான் –**

# சமய தீபம்

**இன்று பொன்னாலை**
**ஸ்ரீ வரதராஜப் பெருமாள்**
**இரதோற்சவம்**

## தர்மம் தழைக்க இரதமேறி வா மாதவா!

ஆக்கமே இலட்சியமாய்க்
கொண்டவர்க்கு
அருள்மழை அள்ளிப் பொழிவாய்
பொன்னாலை வரதராஜா!
ஏக்கமுடன் நாம் வாழ்ந்த
வாழ்வு போதும்
இன்னல்கள் யாவும் நீக்க
இலங்கு இரதமேறி ஓடி
வருவாய்!
காத்தற் கடவுளே நாராயணா!
கதி வேறு இல்லையென்றே
உன் கழலடி பணிந்தோமையா!
கலி காலக் கொடுமைகள்
போக்க
எல்லோரும் எதிர்பார்க்கும்
கல்கி அவதாரமெடுத்து
வருவாய்!
அதர்மம் ஒழிந்து தர்மம் பெருக
வண்ண இரதமேறி
அருள்புரிவாய்
என் உளம் மேவு மாதவா!
மதுசூதனா!

*- குறிஞ்சிக்கவி செ. ரவிசாந்*
*வீரமனை, குப்பிளான்.*

## கடவுள் ஒருவரே!

எல்லாச் சமயங்களும் கடவுளை வழிபடவே ஏற்பட்டன ஆகும். எல்லாச் சமயங்களும் கடவுள் ஒருவர் என்றே சொல்கின்றன. ஒருவரேயான அந்தக் கடவுள் எந்தச் சமயத்தின் மூலம் வழிபட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தான் செய்வார். எனவே எவருமே தாங்கள் பிறந்த மதத்தை விட்டு இன்னொரு மதத்தை தழுவ வேண்டியதில்லை.

கோயில், தேவாலயம், மசூதி, விகாரை முதலிய கட்டிடங்கள் ஒன்றுக் கொன்று வித்தியாசப் படலாம். உள்ளே இருக்கிற மூர்த்தி அல்லது சின்னம் மாறுபடலாம். ஒவ்வொன்றிலும் சடங்குகள் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அநுக்கிரகம் செய்கிற பரமாத்மா மாறவில்லை. ஒவ்வொரு தேச ஆசாரத்தையும் ஒவ்வொருவித ஜனக் கூட்டத்தின் மனப்பான்மையையும் பொறுத்துப் பல்வேறு சமயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே பரமாத்மாவை அவரவர் மனோபாவப்படி பக்தி செய்து, அவரோடு சேருவதற்கு வழிசெய்பவையே. எனவே, எவரும் தங்கள் மதத்தை விட்டு விட்டு இன்னொன்றுக்கு மாற வேண்டியதில்லை. இப்படி மதம் மாறுகிறவர்கள் தங்கள் பிறந்த மதத்தைக் குறைவுபடுத்துவது மட்டுமின்றி தாங்கள் சேருகிற மதத்தையும் குறைவு படுத்துகிறார்கள். கடவுளையும் குறைவு படுத்துகிறார்கள்.

*- காஞ்சி காமகோடி பீடாதிபதி*
*ஜகத்குரு ஸ்ரீ சந்திர*
*சேகரேந்திர ஸரஸ்வதி*
*மகாசுவாமிகள்*

# இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

07.09.2012 வெள்ளி : ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
09.09.2012 ஞாயிறு : ஆவணி ஞாயிறு
12.09.2012 புதன் : ஏகாதசி விரதம்
13.09.2012 வியாழன் : பிரதோஷ விரதம்

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**

08.09.2012 சனி: தூய கன்னிமரியாவின் பிறப்பு விழா

## கிறிஸ்தவ நற்சிந்தனை

● உன்னை நீ ஒரு ஞானி என்று எண்ணிக் கொள்ளாதே. ஆண்டவருக்கு அஞ்சி தீமையை அறவே விலக்கு. அப்பொழுது உன் உடல் நலம் பெறும், உன் எலும்புகள் உரம்பெறும்.

● உன் செல்வத்தை கொண்டு அவரைப் போற்று. உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதல் பலனையும் ஆண்டவருக்கு காணிக்கையாக்கு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்.

● ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் வாழ்வளிக்கும் ஊற்றாகும். சாவை விளைவிக்கும் கண்ணிகளிலிருந்து அது மனிதரைத் தப்புவிக்கும்.

*- ரிஷானி அலோசியஸ்*
*(புனித விவிலியத்தின் நீதி மொழிகள் நூலிலிருந்து)*

## இஸ்லாமிய நற்சிந்தனை

உனக்கு எது பிரியமாயிருக்கிறதோ, அதையே உனது சகோதரனுக்கும் பிரியப்பட வேண்டும். உனக்கு எது தீமையாக கருதுகிறாயோ, அதனையே உனது சகோதரனுக்கும் தீமையாகக் கருத வேண்டும். உன்னிடத்தில் உதவி தேடினால் அவருக்கு நீ உதவி புரிய வேண்டும். அவர் ஒரு அக்கிரமத்தைச் செய்தால் அவரை விட்டு அதனை விலக்க வேண்டும். அப்படி விலக்குவதுதான் அவருக்கு நீ உண்மையில் உதவி செய்ததாக இருக்கும்.

*- நபிகள் நாயகம் (ஸல்)*

## திருக்குறள் அறிவுப் போட்டி - இல:03

இந்தப் போட்டியில் வயதுக் கட்டுப்பாடின்றி அனைவரும் கலந்து கொள்ளலாம். இங்கு பிரசுரமாகியுள்ள பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதி அஞ்சலுறையிலிட்டு கீழே காணப்படும் முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்பி வைத்தல் வேண்டும். முகவரிக் கூப்பன் ஒட்டப்படாத அஞ்சலுறைகளில் அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளை அனுப்புபவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு திருக்குறள் நூல் பரிசாக வழங்கப்படும். ஏனைய பத்துப்பேரின் பெயர்கள் தமிழ்நாதம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

வினாக்கள்:

1.திருவள்ளுவர் சந்திர கிரகணம் பற்றி சொல்லும் குறள் எது?
2.பாம்பு, எலி - இவை இரண்டையும் திருவள்ளுவர் எந்தக் குறளில் குறிப்பிட்டுள்ளார்?
3."புலித்தோல் போர்த்திய பசு" என்பதனை சொல்லும் குறள் எது?
4.தாம் கற்ற நூற்பொருளை பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவரை வள்ளுவர் எதற்கு ஒப்பிட்டுள்ளார்?
5."சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற இறுதி அடிகள் கொண்ட திருக்குறள் எது?
6.போர்க்களத்தில் நிற்கும் யானையை திருவள்ளுவர் எவ்வாறு சொல்கிறார்?
7."முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும்" என்ற பழமொழியை நினைவுக்கு கொண்டு வரும் திருக்குறள் எது?
8.எழுபது கோடி என்ற எண் எந்தக் குறளில் வருகிறது?
9.அழகிய நிழல் உடைய காடு, மலை, வெட்ட வெளியான நிலம், தெளிந்த நீர்- இவற்றை சொல்லும் திருக்குறள் எது? எத்தனையாம் அதிகாரத்தில் உள்ளது?
10.யாரை எல்லா உயிரும் கைகூப்பி தொழும் என்கிறார் திருவள்ளுவர்?

போட்டி முடிவு திகதி: 22.09.2012
விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

இங்கே வெட்டவும்

திருக்குறள் அறிவுப் போட்டி இல:03
தமிழ்நாதம்
267, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

# வல்லிபுர ஆழ்வார் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தி

இன்று கிருஷ்ண ஜெயந்தியையொட்டி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் விசேட பூசை வழி பாடுகளுடன் பல சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் பூசை, அபிஷேகத்தை தொடர்ந்து 7.00 மணிக்கு சைவப் புலவர் பொன். சுகந்தன் 'கிருஷ்ண லீலைகள்' என்ற பொருளில் நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவும், இரவு 8.00 மணிக்கு அபிநயசுரபி நடன மன்ற மாணவர்கள் வழங்கும் 'நிருத்தியாஞ்சலி' நாட்டிய நிகழ்ச்சியும், தொடர்ந்து பொலிகை விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் 'பக்தி வைராக்கியம்' என்ற பொருளில் வழங்கும் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெற விருக்கின்றன.

நள்ளிரவு 12.00 மணியிலிருந்து கண்ணன் பிறப்பு விசேட பூசையும், சங்காபிஷேகமும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து பின்னிரவு 2.00 மணியளவில் கலைஞான மாமணி சத்தியதாஸ் குழுவினர் வழங்கும் வில்லிசையும், அதிகாலை 4.00 மணிக்கு ஆழ்வார் சுவாமி அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வெளி வீதி உலாவருதலும், வடக்கு வீதியில் கண்ணன் வெண்ணெய் திருடும் உறியடி உற்சவமும் இடம்பெறும். (க)

மேடைமேல் மற்ற பன்றிகள் எல்லாம் நெப்போலியனுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தன. கொட்டகையின் கீழ் பரப்பில் மற்ற எல்லா விலங்குகளும் நெப்போலியனைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்தன. அந்த வாரத்துக்குரிய உத்தரவுகளை நெப்போலியன் உரத்த, ராணுவ அதிகாரக் குரலில் வாசிக்கும்.

பின்னர் "இங்கிலாந்தின் விலங்குகள்" பாட்டை ஒருதரம் பாடிவிட்டு விலங்குகள் கலைந்துவிடும். ஸ்நோபாலை விரட்டியடித்த மூன்றாவது ஞாயிறன்று ஸ்நோபாலின் காற்றாடி இயந்திரம் எப்படியும் நிர்மாணிக்கப்படும் என்று நெப்போலியன் அறிவித்தபோது, மற்ற விலங்குகளெல்லாம் ஆச்சரியப்பட்டன. தனது மனம் மாறியதற்கான காரணம் எதையும் நெப்போலியன் சொல்லவில்லை.

ஆனால் காற்றாடி இயந்திரம் நிர்மாணிப்பதற்கு விலங்குகள் எல்லாமாகச் சேர்ந்து வெகுவாகப் பாடுபடவேண்டும் என்று மட்டும் உசார்படுத்தியது நெப்போலியன். கொடுக்கப்படும் உணவின்





அளவுகூடக் கொஞ்சகாலம் குறையலாம் என்று சொல்லிற்று. கடைசிப் புள்ளிவிபரங்கள், கோடுகள், ஆணிகள், சக்கரங்கள் வரையில் எல்லாம் சரிவரப் பூரணமாகத் தயாராகிவிட்டன. மூன்று வாரங்களாக ஒரு பிரத்தியேகப் பன்றிக் கமிட்டி அந்த வேலைகளைக் கவனித்து வந்ததாம்:

பல புது சீர்திருத்தங்களுடன் காற்றாடி யந்திரம் நிர்மாணமாக இருக்கிறது. இரண்டு வருடங்களில் கட்டிமுடித்து விடலாம் என்றும் அறிவித்தது நெப்போலியன். அன்று மாலை ஸ்க்வீலர் பன்றி ஒவ்வொரு விலங்கிடமும் போய், ஆரம்ப முதலே நெப்போலியன் காற்றாடி இயந்திரத்தை உண்மையில் எதிர்க்கவேயில்லை என்று ஸ்தாபிக்க முயன்றது. அது கூறியதாவது: நெப்போலியன்தான் காற்றாடி யந்திர யோசனையை முதலில் சொன்னது: அதற்கான திட்டங்களையும் வரைந்து ரகசியமாக வைத்திருந்தது. ஸ்நோபால் அந்தத் திட்டத்தைத் திருடித் தன்னுடையதாக வெளியிட்டது." என்று எல்லா விலங்குகளுக்கும் புரியக்கூடிய மொழியில், விவரமாக சொல்லிற்று ஸ்க்வீலர்.


காற்றாடி இயந்திரம் என்பது நெப்போலியனின் தனி முழு சிருஷ்டிதான் என்றது அது. "அப்படியானால் ஏன் நெப்போலியன் முதலில் அதை அப்படி ஆட்சேபித்தது?" என்று ஒரு விலங்கு கேட்டது. இதைக் கேட்ட ஸ்க்வீலர் கெட்டிக்காரத்தனமாக இரகசியக் குரலில் சொல்லிற்று: "அதுதான் தோழர் நெப்போலியனின் கெட்டிக்காரத்தனம்" என்றது அது. காற்றாடி யந்திரத்தை எதிர்ப்பதாக வேஷம் போட்டதே தவிர வேறு அல்ல, அப்படி வேஷம் போட்டதால்தானே, தந்திரமாக ஸ்நோபாலை விரட்டிவிட்டு தன் கற்பனையை, தன் திட்டத்தை தானே நிறைவேற்றவும் வழி ஏற்பட்டது!

**(திங்கள்)**

## வரைவோம் வாருங்கள்!



## சிங்கமும் எலியும்



ஒரு நாள் காட்டினுள் காட்டு ராசாவான சிங்கம் நித்திரையில் ஆழ்ந்திருந்தது. அந்தச் சிங்கத்தின் மேல் ஒரு எலி ஓடியது. இதனால் சிங்கம் விழித்தெழுந்தது. கோபம் கொண்ட சிங்கம் எலியைப் பிடித்து, "நீ எனக்கு இன்று நல்ல காலைச் சாப்பாடாகப் போகிறாய" என்று கர்ஜித்தது. ஆனால் எலியோ சிங்கத்திடம் காட்டு ராஜாவே என்னை சாப்பிடாதீர்கள் எனக் கெஞ்சிக் கேட்டது.

சிங்கத்திடம் இன்று நீங்கள் என்னைக் கொல்லாமல் விட்டால் என்றோ ஒரு நாள் உங்களுக்கு "என் நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன் என்றது. சிங்கமோ "நீ எனக்கு உதவி செய்யப் போகிறாயா" என்று எலியை ஏளனம் செய்தது. இருந்தாலும் எலியைக் கொல்லாமல் போக விட்டது.

சில நாட்களின் பின் வேடுவர்கள் அந்தச் சிங்கத்தை பொறியில் வீழ்த்தினர். வலையில் அகப்பட்ட சிங்கம் பலமாகக் கர்ஜித்து அழுதது. அந்தச் சிறிய எலி சிங்கத்தின் சத்தத்தைக் கேட்டு அந்த இடத்திற்கு வந்து வலையைத் தன் பல்லினால் வெட்டி சிங்கத்தைத் தப்பிப் போக உதவியது. சிங்கம் இந்தச் சின்ன எலி என்னைக் காப்பாற்றி விட்டதே என்று வெட்கப்பட்டு எலிக்கு தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லிச் சென்றது.

## கிய்யா! கிய்யா! குருவி

கிய்யா கிய்யா குருவி என்பது சிறுவர் விளையாட்டுகளில் ஒன்று. பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் நீதியைப் புகட்டும் நடிப்பு விளையாட்டு இது.

புதரில் சிக்குண்டு பறந்து வரும்போது சிறகு ஒடிந்த குருவி ஒன்று தனக்குக் கூடு கட்டிக் கொள்ள மரங்களைப் பார்த்து இடம் கேட்பது போலவும், வாழைமரம், தென்னைமரம், பனைமரம் போன்றவை இடம் தராதது போலவும், ஆலமரம் இடம் தருவது போலவும் உரையாடி விளையாடும் ஆட்டம் இது.


பாடல் குருவி:
கிய்யா கிய்யா குருவி நான்
சிறகொடிந்த குருவி நான்
வாழைமரமே வாழைமரமே
மழைகாலத்தில் கூடு கட்ட இடம்
தருவாயோ
பாடல்: வாழைமரம்
இடம் தர மாட்டேன்
பாடல்: தென்னைமரம்
இடம் தர மாட்டேன்



பாடல்: பனைமரம்
இடம் தர
மாட்டேன்
பாடல்:
ஆலமரம்
இடம்
தருகிறேன்

# சிறுவர் அமுதம்

## மயிலே! மயிலே!



**மயிலே, மயிலே ஆடிவா**
**மயிலே, மயிலே ஆடிவா**
**மக்காச் சோளம் தருகிறேன்!**
**குயிலே, குயிலே பாடிவா**
**கோவைப் பழங்கள்**
**தருகிறேன்!**
**பச்சைக் கிளியே பறந்துவா**
**பழுத்த கொய்யா தருகிறேன்!**
**சிட்டுக் குருவி நடந்துவா**
**சட்டை போட்டு விடுகிறேன்!**
**ஓடைக் கொக்கு இங்கே வா**
**ஓடிப் பிடித்து ஆடலாம்!**
**மாடப் புறாவே இறங்கிவா**
**மடியில் குந்திப் பேசலாம்!**

## விடுகதைகள்




1.ஒப்பனை செய்யாத தங்க மேனியாள். வானம் இருண்டால் உல்லாச நடனமிடுவாள். அவள் யார்?

2.உருவமில்லா கல் உனக்குள் எனக்குள் உண்டாகும் கல் அதிர்ச்சியில் மறையும் கல் அந்தக் கல் என்ன கல்?

3.சூரியன் பார்க்காத கிணற்றுக் குள்ளே சுவையான தண்ணீர். அது என்ன?

4.பிடி இல்லா குடை, பிரமிக்க வைக்கும் குடை, மடிக்க முடியா குடை, மக்கள் செய்யா குடை. அது என்ன?

**விடைகள்:**
**1. மின்னல் 2. ஆலங்கட்டி**
**3. இளநீர் 4. காளான்**

சுடோக்கு எண் 46 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 7 | 4 | 3 | 1 | 5 | 8 | 2 |
| 1 | 8 | 3 | 5 | 2 | 9 | 6 | 4 | 7 |
| 2 | 4 | 5 | 8 | 6 | 7 | 3 | 9 | 1 |
| 9 | 6 | 2 | 1 | 8 | 5 | 4 | 7 | 3 |
| 7 | 1 | 8 | 9 | 4 | 3 | 2 | 5 | 6 |
| 5 | 3 | 4 | 2 | 7 | 6 | 8 | 1 | 9 |
| 3 | 2 | 1 | 7 | 5 | 4 | 9 | 6 | 8 |
| 8 | 5 | 9 | 6 | 1 | 2 | 7 | 3 | 4 |
| 4 | 7 | 6 | 3 | 9 | 8 | 1 | 2 | 5 |

சுடோக்கு எண் 47

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 8 | 5 | | |
| | | | 9 | 7 | | 1 | 4 | |
| | | | | 5 | | 6 | | 7 |
| 4 | 5 | | 7 | | | | | |
| 3 | | 9 | | | | 7 | | 6 |
| | | | | | 3 | | 1 | 2 |
| 2 | | 3 | | 1 | | | | |
| | 6 | 8 | | 2 | 9 | | | |
| | | 7 | 8 | | | | | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வுரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# தமிழகத்துக்கு வரும் இலங்கை மக்களிடம் வெறுப்பை காட்டக்கூடாது

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு புதுடில்லியிலிருந்து வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இருந்து தமிழகம் வரும் மக்களிடம் வெறுப்புணர்வைக் காட்டுவது தேவையற்றதாகும். இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு வந்த இரண்டு கால்பந்தாட்ட குழுவினரை தமிழக அரசு திருப்பி அனுப்பியதும், திருவாரூர் கோயிலுக்கு வந்த இலங்கை கிறிஸ்தவ பத்தர்களை திருப்பி அனுப்பிய சம்பவங்கள் வருத்தத்துக்குரியதாகும். இந்த இரு சம்பவங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வன்மையாக கண்டிக்கிறது.

இருநாட்டு மக்களிடையே நல்லுறவையும், நட்புறவையும் தொடர்ந்து நாம் கடைப் பிடிக்க வேண்டும். இலங்கை அரசு அந்நாட்டு தமிழ் மக்களிடம் நடந்துக் கொள்வது பல்வேறு கேள்விகளுக்கு இடம் அளிப்பதாக இருந்தாலும், அதற்காக இருநாட்டு மக்களின் நல்லுற வுக்கு தடை ஏற்படக்கூடாது.

இரு நாட்டு மக்களிடையே நல்லுறவு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சியினர் நடந்து கொள்ள வேண்டும் எனவுள்ளது.

# உலக வங்கியின் தலைமை பொருளாதார நிபுணராக கௌசிக் பாசு நியமனம்

உலக வங்கியின் தலைமையகம் அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ளது. இந்த வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணராகவும் மூத்த துணைத் தலைவராகவும் இந்தியாவைச் சேர்ந்தவரான கௌசிக் பாசு நேற்று அறிவிக்கப்பட்டார். 60 வயதாகும் கௌசிக் பாசு வரும் அக்டோபர் மாதம் பதவியேற்கிறார்.

அவர் இந்திய நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகராக பணியாற்றி உள்ளார். வளரும் நாட்டிலிருந்து வந்துள்ள அவர், முதல் தர அனுபவத்துடன் இந்த அமைப்புக்கு மிகுந்த பயனாக இருப்பார் என்று உலக வங்கியின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. முன்பு இந்திய தலைமை பொருளாதார நிபுணராக பதவி வகித்த ரகுராம் ராஜன் தற்போது பன்னாட்டு நிதியகத்தின் தலைமை பொருளாதார நிபுணராகவும் உள்ளார்.

# சுன்னாகம் வாழ்வகம் நிறுவுனர் நினைவுப் பேருரை

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் இல்லத்தின் நிறுவுனர் அன்ன லட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாள் நிகழ்வும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11ஆம் திகதி (செவ்வாய்க் கிழமை) நடைபெறவிருக்கிறது.

வாழ்வகம் இல்லத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் இந்த நிகழ்வின் போது யாழ்.மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் பிரதம அதிதியாகவும், உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வடமாகாண விசேடகல்வி இணைப்பாளர் திருமதி நிசாந்தி பெர்னாண்டோ, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் வி.கே.இரத்தினகுமார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வார்கள்.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் வைத்தியகலாநிதி ந. சிவராஜா "வலுக்குன்றுதலும் அதன் சவால்களும்" என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார்.

# போலந்து நாட்டின் பாதுகாப்புக் கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய பங்கேற்பு

போலந்து நாட்டின் "கீல்ஸ் பாதுகாப்பு மாநாட்டில்" கலந்துக் கொள்வதற்காக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ போலந்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இம் முக்கியமான மகாநாட்டில் பங்கேற்பதற்கென உலக நாடுகளில் இருந்து பல முக்கிய இராஜதந்திரிகள் வரவழைக்கப்பட்டிருந்தனர். இராணுவத்தினரின் தேவைகள் மற்றும் வரவு செலவு திட்டத்தின் குறைப்பின் போது பாதுகாப்புத்துறையின் நிலை என்ற தலைப்பில் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யூரோ-அட்லான்டிக் சங்கம் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் கருத்தரங்கின்போது உயர்மட்ட அதிகாரிகளையும், இராணுவத் தலைவர்களையும் பாதுகாப்புச் செயலாளர் சந்தித்து கலந்துரையாடினார். இப்பாதுகாப்புக் கருத்தரங்கானது, போலந்து நாட்டின் 20ஆவது சர்வதேச பாதுகாப்புத்துறை கண்காட்சியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கண்காட்சியானது மத்திய ஐரோப்பாவின் பிரதான கண்காட்சியாக கணிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் போலந்து நாட்டின் ஜனாதிபதி பொரின்ஸ்லோ கொமொரவ்ஸ்லி, பாதுகாப்பு அமைச்சர் டொமாஸ் சைமொனிக் மற்றும் பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர். மேலும் இத்தாலி பாதுகாப்பு அமைச்சர் மற்றும் உஸ்பகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரும் கலந்துக்கொண்டிருந்தனர்.

# மாபெரும் சமையல் போட்டி

(மருதனார்மடம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் சுவையான, சத்துள்ள உணவு வகைகளைக் கண்டறியும் மாபெரும் சமையல் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்தப் போட்டி சைவ, அசைவ உணவு வகைகளில் ஆறு வகையான உணவுகள் தயாரிக்கப்படும் பங்குபற்றும் அனைவருக்கும் ரூ.2000/= பணப்பரிசும் சான்றிதழும் காத்திருக்கின்றது. முதல் மூன்றிடம் பெறுபவர்களுக்கு மொத்தம் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா பரிசாக வழங்கப்படவிருக்கிறது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர், தாங்கள் தயாரிக்கும் உணவின்பெயர், வேண்டிய பொருட்கள், அவற்றின் அளவுகள் என்பவற்றோடு பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு சமையல் போட்டி, நீரிழிவு சிகிச்சை நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்" எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

போட்டிகள் இம்மாதம் 15ஆம் திகதியன்று யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதல் ஆறு இடங்களைப் பெறும் வெற்றியாளர்களின் சமையல் குறிப்புக்கள் நூலாகத் தொகுத்து வெளியிடப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வயதுக் கட்டுப்பாடின்றி அனைவரும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியும். (01)

# இராணுவத்தினரால் யாழ் வீதிகள் புனரமைப்பு

இராணுவத்தினரின் மற்றுமொரு சமூக நலன்சேவையின் ஊடாக யாழ்பாணத்திலுள்ள சீரற்ற வீதிகள் மீள்நிர்மாணம் செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

18ஆவது கெமுனு வோச் படைப் பிரிவினால், கோவிலாக்கண்டி மற்றும் நாவற்குளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வீதிகள் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றன.

இந்த இரண்டு கிராமங்களுக்கு செல்லும் வீதிகள் மிகவும் சீரற்ற நிலையில் காணப்படுவதனால், அக்கிராம மக்கள் போக்குவரத்தின் போது மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இதனை கருத்திற்கெடுத்து வீதிகளை சீரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இராணுவத்தினர் முன்வந்துள்ளனர்.

# வண்ணை பெருமாள் கோயில் கிருஷ்ண ஜெயந்தி

யாழ் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தியையொட்டிய சிறப்புப் பூசை வழிபாடுகளும், சங்காபிஷேகமும் இன்று மாலை 4.00 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன.

இரவு 10.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'கிருஷ்ணாவதாரம்' என்ற பொருளில் நிகழ்த்தும் தெய்வீக இசைச் சொற்பொழிவு சிறப்பு நிகழ்வாக இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி சிறப்புப் பூசை நடைபெறும்.

நாளை (சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் வீதியுலா வருதலும், உறியடி உற்சவமும் இடம்பெறவிருக்கிறது. (க)

# வடமாகாண கல்வித் திணைக்களத்தில் இலங்கை வங்கி விரிவாக்கல் கிளை

(மருதனார்மடம்)

மருதனார்மடத்திலுள்ள வடமாகாண கல்வித் திணைக்களத்தில் சுன்னாகம் இலங்கை வங்கியின் விரிவாக்கல் கிளையொன்று இம்மாதம் 19ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதாகவும், இது வாரத்தில் 3 நாட்கள் இயங்கும் என்றும் சுன்னாகம் இலங்கை வங்கி கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வித் திணைக்களம், வடமாகாண கல்வி விளையாட்டுத் திணைக்களம், வலிகாமம் கல்வி வலயம் என்பன இவ்வளாகத்தில் செயற்படுவதுடன் அருகே யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவும் அமைந்திருக்கிறது. எனவே இதன் மாணவர்கள், விரிவுரையாளர்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கு வருகை தரும் அதிபர்கள், ஆசிரியர்கள் என்போர் இங்கு ஆரம்பிக்கப்படவிருக்கும் வங்கி கிளை ஊடாக பயன்பெறுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (01)

# இ.போ.ச. ஊழியர்களுக்கு காப்புறுதி

(மருதனார் மடம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு காப்புறுதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதற்காக பஸ் ஊழியர்களின் தரவுகள் சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடுப்பகுதியிலிருந்து இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட இருப்பதாகவும், பஸ் ஊழியர்கள் மட்டுமன்றி அவர்களது குடும்ப உறுப்பினர் களும் இதனால் பயன்பெறவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பாரதூரமான நோய்களுக்காகவும் எதிர்காலத்தில் கடன் வசதிகள் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு புதிய காப்புறுதி சலுகைகள் திட்டம் போக்குவரத்துச் சேவையின் சாரதிகள், நடத்துனர்களுக்கு கிடைக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# திருக்குறள் மனனம் மற்றும் துரிதகணிதச் செய்கைப் போட்டி

(மருதனார்மடம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு நடாத்தப்படும் திருக்குறள் மனனப்போட்டி, துரித கணித செய்கைப் போட்டி என்பன நாளை (சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இத்தகவலை மேலதிக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

12 கல்வி வலயங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# பாடசாலைக்கு புதிய மதில்

(மருதனார்மடம்)


உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் முன்புறமதில் இப்போது கட்டப்பட்டு வருகின்றது.

70 அடி நீளமான இந்த மதிலை அமைப்பதற்கான நிதியுதவியை திருமதி லக்ஸ்மிகாந்தன் வழங்கியுள்ளார்.

ஏற்கனவே கட்டப்பட்டிருந்த மதில் 1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் யுத்த அனர்த்தத்தினால் அழிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# அமெரிக்காவின் தேசியக் கடன் 16 இலட்சம் கோடியைத் தாண்டியது

அமெரிக்காவின் தேசியக் கடன் 16 இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. கடந்த அதிபர் தேர்தலின் போது தான் அளித்த வாக்குறுதிகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்ட ஒபாமா, ஒவ்வொரு அமெரிக்க குடிமகனின் மீதும் 50 ஆயிரம் டொலர் கடன் சுமை ஏற்றியுள்ளார் என்று தேசிய ஜனநாயக மாநாட்டில் பேசிய குடியரசுக் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.



கடந்த 2009ஆம் ஆம் ஆண்டு அமெரிக்காவின் அதிபராக பாரக் ஒபாமா பதவியேற்றார். அப்போது, அமெரிக்காவின் கடன் சுமை 10 இலட்சத்து 60 ஆயிரம் கோடி டொலராக இருந்தது. ஆனால், அவர் பதவியேற்றபிறகு, அமெரிக்காவின் கடன் சுமை 6 இலட்சம் கோடி டொலரைத் தாண்டியது. மாற்றம் வேண்டும் என்ற அடைமொழியை மையமாகக் கொண்டு மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இக்கடன் தொடர்ந்து அதிகரித்து வந்தால், ஒரு கட்டத்தில் அமெரிக்க பொருளாதாரத்தின் மீது மக்களுக்கிருக்கும் நம்பிக்கை கேள்விக் குறியாகிவிடும்.

# எகிப்தில் பெண்கள் சுதந்திரமாக தாங்கள் விரும்பிய ஆடையை அணியலாம்

எகிப்தை பீடையாக பீடித்திருந்த முன்னைய சர்வாதிகார ஆட்சிகளில் பெண்கள் தலையை மறைக்கும் ஸ்கார்ஃப் அணிவதற்கு எழுதப்படாத சட்டம் நடைமுறையில் இருந்து வந்தது. பின்னர், பெண்களுக்கு தலையை மறைக்காத உரிமை வழங்குகிறோம் என்ற போலி சுதந்திரத்தைக் காட்டி தங்களது மேற்கத்திய எஜமானர்களை திருப்திப்படுத்தும் நோக்கிலேயே எகிப்திய சர்வாதிகாரிகளின் போக்கு அமைந்திருந்தது.

இந்நிலையில் எகிப்தில் ஏற்பட்ட மக்கள் புரட்சியின் விளைவாக ஆட்சியில் அமர்ந்தார், இஃவானுல் முஸ்லிமூன் இயக்க அரசியல் கட்சியின் தலைவர் முஹம்மது முர்ஸி. பெண்கள் சுதந்திரமாக தாங்கள் விரும்பிய ஆடையை அணியலாம் என



அனுமதி வழங்கப்பட்டது.

தலையை மறைத்து தொலைக் காட்சியில் தோன்றுவது முபாரக் ஆட்சி காலத்தில் இயலாத ஒன்றாக மாறியது. ஹிஜாப் அணிய தடையில்லை என்றாலும் தொலைக் காட்சியில் இது ஒரு நடைமுறையாக இருந்து வந்தது. ஸ்கார்ஃப் அணிந்து செய்தி வாசிப்போரையும், நிகழ்ச்சி தொகுப்பாளர்களையும் தொலைக்காட்சியில் காட்டுவதை தடுப்பதில் தொலைக்காட்சி நிலைய அதிகாரிகள் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர். அவ்வாறு ஹிஜாப் அணிந்த பெண்களுக்கும் கேமராவுக்கு பின்னாலும், ரேடியோவிலும் மட்டுமே வேலை வழங்கப்பட்டது.

ஹிஜாப் அணிவதற்கான உரிமையை கோரி நீதிமன்றத்தை அணுகி தங்களுக்கு சாதகமான தீர்ப்பை பல பெண்களும் பெற்ற போதும் "ஹஸ்னி முபாரக்கின் ஏகாதிபத்திய அரசு அவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

இதுக்குறித்து கருத்து தெரிவித்துள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கூறுகையில், எகிப்தில் 70 சதவீத பெண்களும் தலையை மறைப்பவர்கள் ஆவர். ஆகவே இந்த மாற்றத்தில் ஆச்சரியமான ஒன்றல்ல என கூறுகிறது.

# 18 கோடி ரூபாவுக்கு ஏலம் போன தென்னாபிரிக்க காட்டெருமை

தென்னாப்பிரிக்காவில் பிரடோரியா பகுதியில் உள்ள பெலா-பெலா என்ற இடத்தை சேர்ந்தவர் ஜேக்குயஸ் மலான். இவரது பண்ணையில் ஒரு ஆண் காட்டெருமை இருந்தது.

அந்த காட் டெருமை 18 கோடி ரூபாவுக்கு ஏலம் போனது. கொரிஷான் என பெயரிடப்பட்டுள்ள இதற்கு 4 வயது 10 மாதம் ஆகிறது. இது அபூர்வ வகை இன காட்டெரு ஸ்ரீமையாக கருதப்படுகிறது. அதன் கொம்புகள் 1.3 மீற்றர் நீளமும், 41 சென்ரிமீற்றர் அகலமும் உள்ளது.



தென் ஆப்பிரிக்காவின் பிரசித்தி பெற்ற இந்தக் காட்டெருமை இனத்தை முன்பு வேட்டையாடி அழித்துவிட்டனர். தற்போது இவரது பண்ணையில் மீண்டும் இந்த இன காட்டெருமை உருவாகி உள்ளது.

இதன் மூலம் இனப் பெருக்கம் செய்து மீண்டும் அபூர்வ ரக காட்டெருமையை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காகத்தான் இந்த ஆண் காட்டெருமை அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு சென்ட்லா என்ற காட்டெருமை ஆறு கோடி ரூபாவுக்கு ஏலம் போனது சாதனையாகக் கருதப்பட்டது. தற்போது அதை கொரிஷான் முறியடித்துள்ளது.

# பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரிக்கு லாகூர் உயர் நீதிமன்றம் நோட்டீஸ்

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, ஆளும் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத் தலைவர் பொறுப்பை வகித்து வருகிறார். இது குறித்து, முகமது அஸூர் சித்திக் லாகூர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

சர்தாரி ஜனாதிபதி பதவியை துஷ்பிரயோகம் செய்து, கட்சி வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக, இரு பொறுப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் வகிக்கும்படி நீதிமன்றம் கடந்த ஆண்டே உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை மதிக்காமல்



நீதிமன்ற அவமதிப்பு செய்துவிட்டதாகக் கூறி மீண்டும் சர்தாரி மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வழக்கு, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி உமர் அட்டா பண்டியல் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன் விசாரணைக்கு வந்தது.

விசாரணை தொடங்குவதற்கு முன், நீதிபதி மன்சூர் அலிஷ் சென்று விட்டதால், நான்கு நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்தது.

இதையடுத்து, நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றாதது குறித்து விளக்கம் அளிக்கக் கோரி ஜனாதிபதி சர்தாரிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை செப்டெம்பர் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# உலக பார்வை

## பாரிஸ் நகரில் தேர்த்திருவிழா

பிரான்ஸின் பாரிஸ் நகரத்தில் இலங்கைத் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட தேர்த்திருவிழாவில் பிள்ளையார் இரதம் ஏறி வீதி உலா வந்ததுடன் பெருமளவு பொதுமக்கள் பங்கு கொண்ட மாபெரும் ஊர்வலம் ஒன்று அங்கு இடம் பெற்றது.



இத்தேர் வீதிபுலாவில் காவடி, கரகம், பக்திப்பாடல், கோலாட்டம், மேளவாத்தியம், நாதஸ்வரம் உட்பட பாரம்பரிய கலைகள் பலவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர்களுடன் உள்ளூர் மக்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இத்தேர்த் திருவிழா 17 ஆவது வருடமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சீனா சொந்தம் கொண்டாடும் சர்ச்சைக்குரிய தீவை விலைக்கு வாங்கும் ஜப்பான் அரசு

ஜப்பானுக்கும் சீனாவுக்கும் இடையே தீவுக் கூட்டம் ஒன்று உள்ளது. இதில் சில தீவுகளை ஜப்பானும், சீனாவும் உரிமை கொண்டாடி வருகின்றன. இது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு இருந்து வருகிறது.

சமீப காலமாக இந்தப் பிரச்சினை தொடர்பாக பதட்டம் நிலவுவதால் இரு நாட்டு கடற்படையினரும் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். ரூ.130 கோடி விலை மதிப்புள்ள இந்தத் தீவுக் கூட்டத்தில் மூன்று தீவுகள் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த தனியாருக்குச் சொந்தமாக இருந்தது.

இவற்றை ஜப்பான் அரசு விலை கொடுத்து வாங்க முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ.130 கோடி விலை பேசப்பட்டுள்ளது. விரைவில் மூன்று தீவுகளும் ஜப்பான் அரசுக்கு கைமாறுகின்றன. ஆனால் இதற்கு சீன அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

## கோஸ்டாரிகா நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: 2 பேர் பலி

மத்திய அமெரிக்க நாடான கோஸ்டாரிகா நாட்டில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் ஸ்கேலில் 7.6 எனப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்திற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

பெரும்பாலான கட்டடங்கள் குலுங்கியதில் குறைந்தது இருவர் பலியாயினர். 20க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதன் பூகம்ப மையம் தலைநகர் சான் ஜோசுக்கு மேற்குப் பகுதியில் 87 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. அருகிலுள்ள பசிபிக்கடல் நாடுகளில் சுனாமி தாக்கக்கூடும் என அறிவிக்கப்பட்டு பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டது. 1991இல் இங்கு ஏற்பட்ட பூகம்பத்திற்கு 47 பேர் இறந்தனர்.

## சிரியா அரசுப்படை தாக்குதல்: 70இற்கும் மேற்பட்டோர் பலி

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலேப்போவை போராளிகளிடமிருந்து கைப்பற்ற அரசுப் படைகள் தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றது. நேற்று போராளிகளின் நிலைகள் மீது குண்டுகள் வீசி தாக்கியதில் குறைந்தது 19 பேர் பலியாயினர். இதில் அதிகமானோர் பெண்களும் குழந்தைகளும் என்று சொல்லப்படுகிறது. முன்னதாக காலையில் நடந்த தாக்குதலின் போது அலெப்போ நகரில் மட்டும் 54 பேர் இறந்துள்ளனர் என்று எதிர்தரப்பு கூறியது.



சமீபத்திய வரலாறுகளிலிருந்து அதிபர் பஷர் அல் ஆசாத் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். காலதாமதம் காட்டாமல் பதவி விலகுவது நல்லது என்று எகிப்து கூறியுள்ளது. போராளிகளுடன் நடக்கும் உச்சகட்ட சண்டைக்கு கடந்த மாதம் மட்டும் இலட்சக் கணக்கானோர் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

இதுவரைக்கும் 2,30,000 இற்கும் மேற்பட்டோர் அகதிகளாக வெளியேறி பக்கத்து நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் என ஐ.நா. அகதி முகாமை எச்சரித்துள்ளது. 25 இலட்சம் பேர் அத்தியாவசியப் பொருட்கள் இன்றி அவதியுறுவதாகவும் தெரிய வருகிறது.

# தனி தெலுங்கானா பிரச்சினையில் இந்த மாதம் முடிவு ஏற்படும்

## - சந்திரசேகர ராவ் அறிவிப்பு

ஆந்திராவை பிரித்து தனி தெலுங்கானா மாநிலம் அமைக்கும் பிரச்சினைக்கு இந்த மாதம் முடிவு ஏற்படும் என்று தெலுங்கானா ராஷ்டிர சமிதி தலைவர் சந்திரசேகர ராவ் கூறி உள்ளார்.

ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரித்து தனி தெலுங்கானா அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சி நீண்ட நாட்களாக போராடி வருகிறது.


தனி தெலுங்கானா கோரிக்கைக்கு பாரதீய ஜனதா உள்ளிட்ட சில கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

தெலுங்கானா ராஷ்டிர சமிதி, பாரதீய ஜனதா உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழுவினரும் மற்றும் பல்வேறு அமைப்பினரும் ஆந்திர மாநில காங்கிரஸ் விவகாரங்களை கவனிக்கும் மத்திய மந்திரி வயலார் ரவியையும், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சிலரையும் டெல்லியில் கடந்த நாட்களாக சந்தித்து தனி தெலுங்கானா மாநிலம் அமைக்கும் பிரச்சினையில் மத்திய அரசு விரைவில் முடிவு எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் டெல்லி சென்ற சந்திரசேகர ராவ் எம்.பி. ஐதராபாத் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, தனி தெலுங்கானா பிரச்சினையில் இந்த மாதம் முடிவு எடுக்கப்படும் என்றும், இதில் எந்த சந்தேகமும் வேண்டாம் என்றும் கூறினார். டெல்லியில் இது தொடர்பாக தான் தலைவர்களை சந்தித்து பேசும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒருவேளை தெலுங்கானா மாநிலம் அமைக்கும் வாக்குறுதியில் இருந்து மத்திய அரசு பின் வாங்கினால் தெலுங்கானா போராட்டம் மீண்டும் தீவிரம் அடையும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே, தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த பாரதீய ஜனதா தொண்டர்கள் தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தர் பகுதியில் தொடர்ந்து தர்ணா போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் மத்தியில் அக்கட்சியின் மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் பேசுகையில்:-



தனி தெலுங்கானா மாநிலம் அமைப்பதில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு ஆர்வம் இல்லை என்றும், மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தால் மூன்று மாதங்களில் தனி தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

# இந்திய செய்திகள்

# காவிரி நதிநீர் ஆணையம் வருகிற 19ம் தேதி கூடுகிறது

கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய காவிரி நீரை வழங்க மறுத்து வருகிறது. எனவே காவிரி ஆணையத்தை கூட்ட வேண்டும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதினார். சுப்ரீம் கோர்ட்டிலும் காவிரி நதிநீர் ஆணையத்தைகூட்ட வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பிரதமருக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்த நீதிபதிகள், காவிரி ஆணையத்தை கூட்டுவதற்கான திகதியை அறிவிக்காவிட்டால் நீதிமன்றமே அறிவிக்கும் என எச்சரித்தனர்.

பின்னர் இதுபற்றி மத்திய நீர் வளத்துறை மந்திரி பவன்குமார் பன்சால் பிரதமரை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது காவிரி நதி நீர் ஆணையத்தை கூட்டுவற்கு பிரதமர் ஒப்புக் கொண்டுள்ளார். எனவே வருகிற 19 அல்லது 20 ஆம் தேதி டெல்லியிலுள்ள பிரதமரின் இல்லத்தில் இந்த கூட்டம் நடைபெறும் என்று பன்சால் கூறினார்.



இந்நிலையில், பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையக் குழுக் கூட்டம் வரும் 19ம் தேதி கூடுகிறது.

இது குறித்து மத்திய நீர்ப்பாசன அமைச்சகத்திடம் தமிழக அரசுக்கு கடிதம் வந்துள்ளது. நீர்ப்பாசன துறை செயலாளர் தருவ் விஜய் சிங் இந்த தகவலை அளித்துள்ளதாக மாநில பொதுப்பணித்துறை செயலர் எம். சாய்குமார் அறிக்கை வெளியிட்டுள்ளார்.


பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற உள்ள இந்த கூட்டத்தில், ஆணையத்தில் உறுப்பினராக உள்ள அனைத்து மாநிலங்களும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# "பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவு வளைவு" அகற்றப்படாது

சென்னையின் அடையாள சின்னங்களில் ஒன்றான "அண்ணா ஆர்ச்" அகற்றப்படாமல், புதிதாக கட்டப்படும் மேம்பாலம் சிறிதளவு இடம் மாற்றி அமைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில், அண்ணா பவள விழா நினைவு வளைவு அகற்றப்படுவது தொடர்பாக விரிவாக விவாதிக்க உத்தர விட்டுள்ளேன்.

அதன் அடிப்படையில், எனது தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விஸ்வநாதன், முனுசாமி, வைத்தியலிங்கம், எடப்பாடி கே.பழனிச்சாமி, தலைமை செயலாளர் தேபேந்திரநாத் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், அரும்பாக்கம் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருவதை கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.



117 கோடியில், நெல்சன் மாணிக்கம் சாலை மற்றும் அண்ணா நகர் மூன்றாவது நிழற்சாலை சந்திப்பு ஆகியவற்றை இணைக்கும் வகையில் புதிய மேம்பாலம் அமைக்க 2010ம் ஆண்டு தி.மு.க. அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேம்பால பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அண்ணா வளைவு அகற்றப்படுகிறது என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அண்ணா வளைவை அகற்றாமல் மேம்பால பணிகளை மேற்கொள்வது தொடர்பாக நடத்தப்பட்ட விவாதத்துக்கு பின், அண்ணாவின் பெயரில் எம்.ஜி.ஆரால் 1986ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட சென்னை மாநகரின் அடையாள சின்னங்களில் ஒன்றான அண்ணா வளைவை அகற்றாமல் மேம்பால பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளேன்.

இதன்படி, ஈ.வெ.ரா. சாலையில் இருந்து அண்ணா நகர் நோக்கி செல்லும் மேம்பாலத்தை சிறிதளவு கிழக்கு புறமாக மாற்றி அமைத்து மேம்பால பணிகள் மேற்கொள்ளப்படும். தமிழக அரசின் இந்த நடவடிக்கையின் மூலம், சென்னையின் அடையாள சின்னமாக விளங்கும் "பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவு வளைவு" அகற்றப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு முதல்வர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



சிவகாசி பட்டாசு ஆலை வெடி விபத்தில் காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்கு கொண்டுசெல்வதைப் படங்களில் காணலாம்.

# பட்டாசு ஆலையில் வெடிவிபத்து : 38 பேர் பலி., 40 பேர் கவலைக்கிடம்

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள பட்டாசு ஆலையில், ஏற்பட்ட வெடி விபத்தில் 38 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 40 பேர் படுகாயங்களுடன், விருதுநகர், சிவகாசி, மதுரை மருத்துவமனைகளில் சிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலியானவர்களின் எண்ணிக்கை 60 பேர் வரையிருக்கலாம் என ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியை அடுத்த முதலிப்பட்டியில், ஓம் சக்தி பயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை இயங்கி வருகிறது.

400க்கும் மேற்பட்டோர் ஊழியர்கள் இங்கு பணியாற்றி வந்தனர். 40க்கும் மேற்பட்ட அறைகளில், ஊழியர்கள் வேலை செய்து வந்தனர்.

தீபாவளிப் பண்டிகைக்காக, பட்டாசுகள் தயாரிக்கும் பணி துரிதமாக நடைபெற்று வந்தது. வெடி பொருட்கள் செலுத்தும் போது ஒன்றுடன் ஒன்று உராய்ந்த நிலையில், பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. சுமார் ஒரு கிலோ மீட்டர் அளவிற்கு அதன் பாதிப்பு இருந்தது.

குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் சிவகாசியில் பட்டாசு ஆலை விபத்துகளும் தொடர்கதையாக நடைபெற்று வருகிறது. 2011ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற விபத்தில் 11 பேரும், 2010ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற விபத்தில் 4 பேர், 2009ம் ஆண்டு ஜுலை மாதத்தில் நிகழ்ந்த விபத்தில் 7 பேர், 2006ம் ஆண்டில் நடைபெற்ற விபத்தில் 7 மற்றும் 2005ம் ஆண்டில் நிகழ்ந்த விபத்தில் 13 பேர் என ஆண்டுதோறும் தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகள் வருவது போல, சிவகாசி பட்டாசு ஆலைகளில் வெடிவிபத்துகள் ஏற்பட்ட வண்ணம் தான் உள்ளன.

# அரசு இரப்பர் கழக தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் 50ஆவது நாள் - 15 கோடி இழப்பு

அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் காரணமாக ரூ.15 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கன்னியாக்குமரியில் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தம் இன்றுடன் 50வது நாளை அடைந்துள்ளது.

இரப்பர் கழகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இதுவரை அரசுக்கு ரூ.15 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி சுமூக முடிவினை எடுக்க தமிழக அரசு முன் வரவில்லை என்றும், தொழிலாளர்களை அரசு கண்டுகொள்ளவே இல்லை என்றும் தொழிற் சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

# கிண்ணம் யாருக்கு இன்று பலப்பரீட்சை

தெல்லிப்பழை

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய கரப்பந்தாட்டப்போட்டிகளின் இறுதியாட்டம் இன்று மாலை 6.30 மணிக்கு புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. கழகத் தலைவர் தலைமையில் நடைபெறும் இவ்விறுதிப்போட்டிக்கு பிரதமவிருந்தினராக ஜனாதிபதி ஆலோசகர் தேசமான்ய ராமச்சந்திரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிர தேசசபை தவிசாளர் உதயகுமார், கோப்பாய் பிரதேச செயலக செயலாளர் பிரதீபன் அவர்களும் கௌர வவிருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தலைவர்மனோ கரனும் கலந்து கொள்ளவுள்ளனர். இன்று நடைபெறும் இறுதிப் போட்டிகளில் "பி" பிரிவுக்கான இறுதிப போட்டியில் இந்து இளைஞர் "பி" அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதவுள்ளன. "ஏ" பிரிவிற்கான இறுதிப்போட்டியில் இந்து இளைஞர் "ஏ" அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதவுள்ளன.





## கால்களை நகர்த்த வேண்டுமா? வெண்ணெய் சாப்பிடுங்கள் சச்சின்

### கிண்டலால் இலாபம் பார்க்கிறது அமுல்

சச்சின் சமீபகாலமாக மோசமாக விளையாடி வருவதால், அவரை கிண்டலடிக்கும் விதமாக பொம்மை படம் ஒன்றை வெளியிட்டுள்ளது அமுல் நிறுவனம். இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி பங்கேற்ற 2 போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்தது.

இந்திய அணி 2-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை கைப் பற்றியது. ஆனால் இந்திய அணி யின் நம்பிக்கை நாயகனான சச்சின் 3 இன்னிங்ஸ்களிலும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதிலும் 3 முறையும் அவர் "போல்டா"கி உள்ளார்.

இதனால் சச்சினின் "போர்ம்" குறித்து சந்தேகம் எழுந்துள்ளது. முதுமையின் காரணமாக இந்திய அணியில் இருந்து அவர் ஓய்வு பெற வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது. இந்த நிலையில் பிரபல பால் பொருட்கள் தயாரிப்பு நிறுவனமான அமுல், இந்த சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்ப டுத்தி உள்ளது.




சச்சினை போன்ற பொம்மை உருவம் ஒன்று கிரிக்கெட் போட்டியில் போல்டாகி ஏமாற்றத்துடன் நிற்பது போலவும், ஆடுகளத்திற்கு செல்லும் அமுல் சிறுமி அவரை கால்களை நன்கு நகர்த்தி விளையாட அமுல் வெண்ணெய் சாப்பிடுமாறு கூறுவது போலவும் பொம்மை படம் ஒன்றை அமுல் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இந்த பொம்மை படம் அமுல் நிறுவனத்தின் டுவிட்டர் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## நாமகள் வி.க.வின் உதைபந்தாட்டம்: இளவாலை யங்ஹென்றிஸ் சம்பியன்

தெல்லிப்பழை

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகத்தின் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம்.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடாத்திய அணிக்கு 7பேர் பங்குபெறும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி அட்டகிரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. பரபரப்பான இப்போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் 4-1 என்ற கோல்கள். அடிப்படையில் வெற்றிபெற்றது.

யங்ஹென்றிஸ் அணிக்காக மூன்று கோல்களை அடித்து அசத்திய ஞானம் போட்டியின் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் நாயகனாக சென். மேரிஸ் அணியின் ஜெராட் தெரிவானார். மூன்றாமிடத்துக்கான போட்டி நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணிக்கும் இளவாலை சென்லூட்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவிருந்தது. மூன்றாமிடத்துக்கான போட்டிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி வருகைதராததன் காரணமாக இளவாலை சென்லூட்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

## 21 வயதினருக்கான உதைபந்து வேலணையில் நாளை ஆரம்பம்

தெல்லிப்பழை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவுசெய்வதற்கான போட்டிகளின் முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடைபெற்றுவருகின்றது. வேலணைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடை யில் 21 வயதுப் பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதை பந்தாட்டப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது என வேலணை பிரதேச செயலக பதில் விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார்.

## இந்திய அணிக்குப் பயிற்சியளிக்கத் தயார்: கங்குலி

இந்தியக் கிரிக்கெட் அணிக்குப் பயிற்சியளிக்கத் தயாராக இருப்பதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். பயிற்சியளிப்பதில் தனக்கு ஆர்வம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

4 வருடங்களுக்கு முன்னர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற சௌரவ் கங்குலி, ஓய்வின் பின்னரும் ஐ.பி.எல். போட்டிகளிலும், இந்தியாவின் ரஞ்சிக் கிண்ணப் போட்டிக்ளிலும் பங்குபற்றியிருந்தார்.

இந்த வருடமும் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றியிருந்த அவர், அடுத்தாண்டும் பங்குபற்றுவதற்கான தனது ஆவலை வெளிப்படுத்தியிருந்தார்.

## சென்றலைட்ஸ், ஒல்கொட்ஸுக்கு வெற்றி

தெல்லிப்பழை

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் நாள் ஆட்டங்களில் சென்றலைட்ஸ், ஒல்கொட்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் நந்தகோகுலன், டொனால்ட் றீகன் ஞாபகார்த்தமாபெரும் ருவென்ரி-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்ப

இத்தொடரின் முதலாவது போட்டியாக கிறாஸ்கொப்பர்ஸ் அணியும் சென்றலைட்ஸ் அணியும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் டுக்களை இழந்து 67 ஓட்டங் களை மாத்திரம் பெற்றது. துடுப் பாட்டத்தில் பிரகலாதன் 17 ஓட்டத்தை பெற்றார். பந்துவீச்சில் மயூரன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

68 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் 12 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பார்த்தீபன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயக னாக சென்றலைட்ஸின் மயூரன் தெரிவானார்.

மாலை நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலி மத்திய அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஒல்கொட்ஸ் அணி மோதியது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஒல்கொட்ஸ் அணி அதிரடியாக ஆடி 20 ஓவர் நிறைவில் 6 விக்கெட்டை இழந்து 220 ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத் தில் மதுசன் 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அருள்ராஜ் 2 விக்கெடடுக்களைக் கைப்பற்றி னார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திரு நெல்வேலி மத்திய அணி 20 ஓவர் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று 47 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது. துடுப்பாட்டத்தில் சுவேந்திரன் 66 ஓட்டத்தைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெயசுதன், நிரோசன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஒல்கொட்ஸ் அணியின் மதுசன் தெரிவுசெய்யப்பட்டார்.

## கலந்துரையாடல் இன்று

தெல்லிப்பழை

சங்கானை பிரதேசசெயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 21வயதுப்பிரிவிற்கான உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்துகொள்ளும் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு சங்கானை பிரதேசசெயலக மண்டபத்தில் நடைபெறவுளளது.

இக்கூட்டத்திற்கு அனைத்துக் கழகங்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கானை பிரதேச செயலக பதில் விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 07.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது